Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

ஏப்ரல் 21 - 27, 2011

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 907

## நிபுணர்குழுவின் அறிக்கை காத்திருக்கும் அதிருப்திகள்

## தமிழர் அரசியலின் வரலாற்று தவறுகள்



## களையிழந்த சித்திரைப் புத்தாண்டு

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## அதர்மத்தின் எதிரி

“எப்பொழுதெல்லாம் தர்மம் குன்றி அதர்மம் தலைதூக்குகிறதோ அப்பொழுதெல்லாம் நான் அவதரித்து தர்மத்தை நிலைநாட்டுவேன்” என்று பகவான் பரந்தாமன் கீதையில் சொல்லியிருப்பதைக் குறித்து இங்கு எத்தனைபேர் சிந்திக்கிறார்கள் என்பது ஓர் ஆய்வுக்குரிய விடயமாகிறது.

தர்மம் செயலிழந்து அதர்மம் புவியில் பூரணப்படும்பொழுது ஒரு புதிய மாற்றத்தை நிகழ்த்துவது பகவானின் லீலையாகிறது.

அறிவின் உச்ச விளிம்பில் நின்றபடி மனிதன் தன் ஆக்கத்திறன்களை இயற்கைக்கு விரோதமாகச் செயற்படுத்தும் போது சமநிலை குலைகிறது. இதன்நிமித்தம் மனிதனைத் தண்டிக்கவும் அவனது அறிவின் உணர்வுகளுக்குச் சிந்தனையைக் கொடுக்கவும் தனது வல்லமையின் மூலம் அழிவுகளையும் ஆச்சரியங்களையும் பகவான் நடப்பித்துக் காட்டுகிறார்.

இப்புவியில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் குருவாக இருந்து உபதேசம் உரைத்தவர் என்பதால் பகவானை ‘ஜகத்குரு’வாகப் பாவித்துப் போற்றும் துதிகள் பலவுண்டு.

அவற்றில் –

“வசுதேவசுதம் தேவம்
கமஸசாணூர மர்த்தனம்...” என்பதானது வசுதேவ குமாரரும் கம்ஸ சாணூரர்களை வதைத்தவருமான ஸ்ரீகிருஷ்ணர் என்பதானது எங்கே அதர்மம் தலை தூக்குகிறதோ அங்கே பகவான் பிரசன்னமாவார் என்பதை வெளிப்படுத்துகிறது.

-அனந்தநாராயணன், கைதடி.

## தேவைகளை அறிந்த தேவன்

மனிதனின் வாழ்வியலில் அடிப்படைத் தேவைகள் பலவுண்டு. பணத்தில் இருந்து தன் பரம்பரைக்குத் தேவையான பண்டங்கள் வரைக்கும் அவன் ஒவ்வொன்றாகத் தேட முற்படுகின்றான். அப்படித் தேட முற்படுகையில் அது கிடைக்காமல் போகும் சமயத்தில் இறைவனை நாடுகின்றான் அவன்.

வாழ்க்கைக்குத் தேவையற்றவைகள் கூட, அவனுக்குத் தேவையுள்ளதாகத் தோற்றம் கொள்கையில், வழிகளிலும் அதை அடைவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்து கொள்கிறான். சில சமயம் அவனது கடுமையான முயற்சியின் நிமித்தம் அவை கிடைக்கவும் கூடும். அல்லது கிடைக்காமல் போகவும் கூடும். அப்படிக் கிடைக்காமல் போன பொருளுக்காக அவன் இறைவனின் சன்னிதானத்தில் இரவு-பகலாக விழித்திருந்து ஜெபம் செய்கிறான்.

ஆனால், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி, எல்லோருக்கும் சேர்த்து இயேசுக் கிறிஸ்துவானவர் என்ன சொல்கிறார் என்றால், “நீங்கள் ஜெபம் பண்ணும் போது அஞ்ஞானிகளைப் போல் வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். அவர்கள் அதிக வசனிப்பினால், தங்கள் ஜெபம் கேட்கப்படும் என்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள். உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுறதுக்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவையென்று அவர் அறிந்திருக்கிறார்.(மத்தேயு 6:7,8)” என்று கூறுவதில் இருந்து, தேவைக்கு அதிகமானவற்றைக் குறித்து தேவனிடத்தில் கேட்பது தேவையற்றது என்பது தெளிவாகப் புரிகிறது.

சாமுவேல், புதுக்குடியிருப்பு

## ஆன்மீகம்

## அல்குர்ஆனின் போதனைகள்

அல்குர் ஆன் அல்லாஹ்வினால் அருளப்பட்டது. இது எல்லாக் காலத்துக்கும் பொருத்தமான போதனைகளை மனித குலத்திற்கு வழங்குகின்றது.

அல்குர் ஆனைப் பாதுகாப்பதாக அல்லாஹ் அவன் சிருஷ்டிகளுக்கு வாக்களித்துள்ளான். அதற்கிணங்க அது அல்லாஹ்வால் அருளப்பட்ட நாள் முதல் இன்று வரை எந்தத் திரிபுக்கும் மாற்றத்துக்கும் உட்படாமல் இருந்து வருகிறது.


இதனால் இஸ்லாம் மதம் அல்குர் ஆனை முதலாவது சட்ட மூலாதாரமாகக் கொண்டுள்ளது. அல்குர்ஆனின் சட்டங்களும் கட்டளைகளும் தெளிவானவை, தீர்க்கமானவை.

தன்னை அகிலங்களுக்கான போதனை என விளக்கிய அல்குர் ஆன் பின்வருமாறு கூறுகிறது.

மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக ஒரு நல்லுபதேசம் வந்திருக்கிறது. உங்கள் இதயங்களிலுள்ள நோய்களுக்கு அது சஞ்சீவியாகும். மேலும் அது விசுவாசம் கொண்டவர்களுக்கு நேர்வழிகாட்டியாகவும் ஓர் அருளாகவும் இருக்கிறது.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## வாசகர் சாலை



### எதிர்பார்ப்பு

உன் நீண்ட நாள் வாசகன் என்ற வகையில் பெருமையடைகின்றேன். எனது பிந்திய புத்தாண்டு வாழ்த்துக்கள். புதுப்புது பல தகவல்களை இப்பொழுது இரு வாரங்களாக வழங்கி வருகின்றாய். எனக்குப் பிடித்தது, தீண்டும் இன்பம், பாப்பா முரசு, சினிமா என்பவையாகும். புதிததாக வெளிவரும் அந்தரங்கப் பகுதி மிகவும் அருமையாக உள்ளது. இன்னும் பல மாற்றங்களையும், புதிய அருமையான விடயங்களையும் எதிர்பார்க்கின்றேன்.

என்.விதுஷன்,
வெள்ளவத்தை.

### வாழ்த்துக்கள்

முரசுக்கு எனது பிந்திய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள். புத்தாண்டு சிறப்பிதழ் புதுப்பொலிவுடன் மிகவும் சிறப்பாக வெளிவந்துள்ளது. எனது பாராட்டுக்கள். பல வகையான மாற்றங்களுடனும், பிரமிப்புமிக்க தகவல்களுடனும் உள்ளது. இவ்வாறு சிறப்பாக ஒவ்வொரு வாரமும் வெளிவந்தால் நன்றாக இருக்குமென்பது வாசகனாகிய எனது கருத்தாகும்.

க.சதீஷ்
திருகோணமலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772, கொழும்பு,
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல் (Fax): 0212221811
ஈ-மெயில்: (E-mail):- thinamurasu@live.com

## கவிதைப் போட்டி இல.907




எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.04.2011

கவிதைப் போட்டி இல. 907
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### வேடிக்கை வெளி

துள்ளிக் குதிக்கும்
இளம் கன்றுகளுக்கு
வெள்ளம் பெருக்கும்
வேடிக்கை வெளி...

ஜிந்து
கிண்ணியா -05

### பட்டவர்கள் நாங்கள்

ஐயய்யோ! ஓடிவாருங்கள்
திடீரென்று வருமாம் சுனாமி.
உங்களுக்கு எங்கே
தெரியப் போகிறது
பட்டவர்களல்லவா நாங்கள்!

யோ.புகழினி
திருமலை

### சுனாமி கவனம்

கடற்கரை மணல் மீது
கரம் கோர்த்து விளையாடும்
சுட்டிச் சிறுவர்களே
சுனாமி கவனம் - கடல்அம்மா
அலையாய் வருடி விட்டு
அள்ளியும் சென்றுவிடும்.
புன்னகையுடன் நீர் திரிய
புவியில் உமக்கு எங்கும்
நிம்மதியில்லை.

வேல்மகள்,
புளியம்பொக்கணை.

### நெஞ்சம் பதறுகிறது

ஒன்றாகக் கைகோர்த்து
மகிழும் நீங்கள்...
சுனாமி எழுந்தால்
ஒன்றாகப்
போகப் போகிறீர்களே!
நினைக்கவே நெஞ்சம்
நடுங்குகின்றது.

க.பிரிந்தா, வவுனியா.

### முன்னெச்சரிக்கை

பிஞ்சு உள்ளங்கள்
கொஞ்சமும் பயமின்றித்
துள்ளித் திரிகின்றன.
இவர்களுக்கு எப்படித் தெரியும்
சுனாமி அலை அடித்தது
இந்தக் கடல் தானென்று?

R.S.ஆனந்தன், தும்பளை

## கவிதைப் போட்டி இல.905

### பாராட்டுக்குரியது



### கவனம்

கள்ளமில்லாமல்
துள்ளும் அழகு...
அது கடற்கரையிலா
நிகழ வேண்டும்.
கடலுக்கு எப்படித் தெரியும்
நீங்கள் குழந்தைகள் என்று.

கிருக்கன்,
பருத்தித்துறை

### அறியாமை

கடலோரம் தம்மை
மறந்து இன்பமாய்
விளையாடும் இந்தப்
பிஞ்சுகளுக்குத் தெரியுமா?
இயற்கையின் கோர முகம்.

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.




## உங்கள் பக்கம்



### குப்பை போடுவது நிறுத்தப்படுமா?

புத்தளம் நகரை அண்மித்ததாக புத்தளம் நகர சபையின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற ஊர்களில் தில்லையடியும் ஒன்றாகும். இது கொழும்பு - புத்தளம் பிரதான வீதியையும் அண்டி அமைந்துள்ளது. குறித்த வீதியின் இரு மருங்கிலும் தில்லையடிச் சந்தியை அண்மிக்கும் வகையில் பல இறைச்சி விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன. இவ்விற்பனை நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை வியாபாரிகள் தில்லையடிப் பிரதான வீதியோரங்களில் கொண்டு வந்து கொட்டுகின்றனர்.

அத்தோடு இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களும் தமது வீட்டுக் கழிவுகளையும், குப்பை கூழங்களையும் குறித்த வீதியோரங்களில் கொண்டு வந்து கொட்டுகின்றனர். இதனால் இப்பிரதேசத்தில் கழிவுப் பொருட்கள் தேங்கி துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் இப்பாதை வழியே பயணம் செய்கின்ற மக்கள் அசௌரியங்களை எதிர்நோக்குகின்ற அதே வேளை இச்சுற்றாடலில் வாழ்கின்ற பொதுமக்களுக்கு தொற்றுநோய் ஏற்படும் அபாயநிலை தோன்றுகின்றது.

இது குறித்து சில அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே புத்தளம் நகரசபை, புத்தளம் சுகாதார அமைச்சு போன்ற பொறுப்புமிக்க அதிகாரிகள் தலையிட்டு வீதியோரங்களில் குப்பை போடுவதை தடுத்து நிறுத்த வேண்டுமென தினமுரசு ‘உங்கள் பக்கம்’ ஊடாக வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

எம்.எவ்.முனாவ், தில்லையடி.

# உயர் கல்வி அமைச்சு தலையீட்டால் கிழக்குப் பல்கலையில் பதற்றம் தணிகிறது

## மாணவர் ஒன்றிய தலைவர், செயலாளர் பிணையில் விடுதலை

**கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரைகளுக்கு மாணவர்களைச் சமுகமளிக்க வேண்டாமென உள்ளூர் பத்திரிகைகளுக்கு செய்தி வெளியிட்டதுடன் மாணவர்கள் மத்தியில் குழப்பநிலையினை ஏற்படுத்தி அமைதிக்குப் பங்கம் விளைவிக்க முயற்சிக்கக் கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.**

கடந்த 30 ஆம்திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட சர்ச்சையால் மாணவர்கள் தாக்கப்பட்ட தைத் தொடர்ந்து அங்கு கடமையில் ஈடுபட்ட பொலி சாரை வெளியேற்றக் கோரி நடாத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை அடுத்து காலவரையின்றி மூடப்பட்டிருந்த பல்கலைக்கழகம் கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட இருந்த நிலையில் குறித்த மாணவர் ஒன்றியத்தின் தலைவர மற்றும் செயலாளர் ஆகியோ-ரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட அறிக்கையில் தமது அறிவித்தல்வரை விரிவுரைகளுக்குச் சமுகமளிக்க வேண்டாமெனக் கூறப்பட்டிருந்தது. இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்ட தலைவர் கிருஷ்ணகாந்த், செயலாளர் மதன்ராஜ் ஆகியோர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது பொலிசாரின் கருத்துக்களைச் செவிமடுத்த நீதிபதி இருவரையும் தலா ஒரு இலட்சம் சரீரப்பிணையில் செல்வதற்கு அனுமதி அளித்ததுடன் மே மாதம் 23 ஆம் திகதி நீதிமன்றில் சமூகமளிக்குமாறும் கேட்டுக்கொண்டார். அதேவேளை கிழக்கு பல்கலைக்கழகத்தில் தொடர்ந்துகொண்டிருக்கும் குழப்பநிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக அங்கு நேரடியாக விஜயம் செய்த அமைச்சர் எஸ்.பி.திஷாநாயக்கா அவர்கள் பல்கலைக்கழக சமூகத்தின் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து நிலைமை சுமுகமடைந்து வருவதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பாணின் விலையும் அதிகரிக்கிறது

கூடிய விரைவில் ஒரு இறாத்தல் பாணின் விலை 3 ரூபா அல்லது 4 ரூபாவால் அதிகரிக்கப் படுமென அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார். ஒரு இறாத்தல் பாணின் விலை 3 ரூபா அல்லது 4 ரூபாவால் நாங்கள் அதிகரிக்கவுள்ளோம். பாணின் புதிய விலை அதிகரிப்பு குறித்து இன்னும் சில நாள்களில் பேக்கரி உரிமையாளர் சங்கம் கூடி ஆராயவுள்ளது என அவர் கூறினார். பாணின் விலை அதிகரிக்கப்பட மாட்டாதென்று பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்து ஒரு நாளின் பின்னர் பாணின் விலையை அதிகரிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், பிரிமா நிறுவனம் மாவின் விலையை அதிகரித்துள்ளதாகவும் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார். அதேவேளை தன்னிச்சையாக மாவின் விலையை அதிகரித்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக CAA அறிவித்துள்ளது

## இலங்கைக்கு உலக வங்கி பாராட்டு உதவித் தொகையும் இரட்டிப்பாகிறது

இலங்கையின் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு உலக வங்கி தொடர்ச்சியாக வழங்கிவரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், உலக வங்கியின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் அங்கு கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பில் நாட்டின் தலா வருமானத்தை அதிகரிக்கும் இலங்கை அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டத்துக்கு உலக வங்கி ஒத்துழைப்பு வழங்கும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. மேலும் பொருளாதார ரீதியில் நாடு முன்னேறிச் செல்வதற்கான திட்டங்களுக்கு உலக வங்கி தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் எனவும் ஒக்கொன்ஜோ குறிப்பிட்டார். இலங்கை பொருளாதார ரீதியில் துரித அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்பதை ஏற்றுக்கொண்டிருக்கும் உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் இலங்கையில் தற்பொழுது முன்னெடுக்கப் பட்டிருக்கும் அபிவிருத்திப் பணிகளைப் பாராட்டியுள்ளார். அத்துடன் நாடு புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்திக்காக வங்கியிலிருந்து நிதி உதவிகளைப் பெறுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளதாக தெரிவித்த அவர்,இலங்கைக்கு வழங்கி வரும் உதவித் தொகையை அடுத்த வருடம் இரட்டிப்பாக்குவதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

## இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள்

அமெரிக்க நாடாளுமன்றத் தின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் அமெரிக்க - இலங்கை உறவு வலிமையடைவதற்கு உதவ வேண்டுமென தமது சக நாடாளுமன்ற உறுப்பினர்களை வலியுறுத்தியுள்ளனர். புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கை அடைந்த முன்னேற்றத்தை கருத்தில் கொள்ளுமாறு கிறிஸ் ஹொலன், ரொபர்ட் அடேர்ஹோல்ட் ஆகிய இந்நாளுமன்ற உறுப்பினர்கள் தமது சக உறுப்பினர்களுக்கு ஏப்ரல் 15 ஆம் திகதி எழுதியுள்ள கடிதமொன்றில் கோரியுள்ளனர். இவ்விருவரும் அமெரிக்க நாடாளுமன்றத்தின் இலங்கை விவகாரக் குழுவின் இணைத் தலைவர்களாவர். இலங்கை ஒரு பல்கட்சி பல்லின ஜனநாயகமாகும் புலிகளுடனான நீண்டகால யுத்தத்திலிருந்து அது அண்மையில் மீண்டுவந்துள்ளது. 30 வருடகால உள்நாட்டு மோதலினால் ஏற்பட்ட உணர்வுபூர்மான காயங்க களைக் குணப்படுவத்துவதில் தனது சக்தியை குவித்து வருகிறது என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நலன்புரிநிலைய மக்கள் வெளியேறினர்

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களி லிருந்து கடந்த இரண்டு மாதங்களில் 100இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேறிச் சென்றுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார். இவ்வாறு வெளியேறிச் சென்றுள்ள மக்கள் அவர்க ளின் சொந்த மாவட்டங்களில் பதிவுகளை மேற்கொண்டு தங்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட்களை அந்தந்த மாவட்டங்களி லேயே பெற்றுக்கொள்ள வேண்டு மெனவும் அவர் கூறினார். வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்கள் மூடப்படவுள்ள தால் அங்கு தங்கியுள்ள மக்களை கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக அவரவர் சொந்த இடங்களுக்கு செல்ல வேண்டுமென கடந்த 6 மாதங்களுக்கு முன்னரே கடித மூலம் அறிவிக்கப்பட்டதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்திருந்தார். ஜனாதிபதி செயலணிப் பிரிவு இதற் கான அறிவித்தலை மாவட்ட செயலகத்திற்கு விடுத்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ள தாகவும் வவுனியா அரசாங்க அதிபர் முன்னர் குறிப்பிட்டிருந்தார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை சேர்ந்த இம்மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து 1995ஆம் ஆண்டு முதல் வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தனர். வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் சுமார் ஆயிரம் உட்பட்ட குடும்பங்களும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் சுமார் 350 குடும்பங்களும் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாந்தோட்டையில் பூமியதிர்வு

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கிரிந்த பிரதேசத்தில் கடந்த 18 ஆம் திகதி சிறியளவில் பூமியதிர்வு உணரப்பட்டதாகவும் இதன்போது 7 வீடுகள் சேதமாகியுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இரவு 10 மணியளவில் இந்த பூமியதிர்வு உணரப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

## மட்டக்களப்பில் அரபுமொழி

பல்லின மக்கள் வாழும் இலங்கையில் மூன்று மொழிகளும் அரச கரும மொழிகளாக பயன்படுத்தப் படுகின்றமை அறிந்ததே. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வீதிப் பலகைகள், பஸ் பலகைகள் போன்றவற்றில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்துடன் அரபு மொழியும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.




முஸ்லிம் மக்கள் செறிந்து வாழக்கூடிய மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் மாத்திரம் அரபு மொழியையும் உபயோகப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## யானை வதம் செய்தது

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு பிரதேசத்தில் யானை தாக்கியதில் இளைஞர் ஒருவர் பரிதாப கரமாக உயிரிழந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவில் இடம்பெற்றுள்ளது.

நள்ளிரவு 2 மணியளவில் குடிமனைகளுக்குள் யானைகள் ஊடுருவியதையடுத்து வீட்டின் வெளிப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் பாதுகாப்பான இடத்தை நோக்கி கொண்டு செல்லமுற்பட்ட போது யானை தாக்கியதில் 26 வயதான கணபதிப்பிள்ளை உருத்திரலிங்கம் இளைஞரே பரிதாப-கரமாக சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

# முரசம்

## பயணிக்காத கப்பலும் பொறுப்பில்லாத மாலுமிகளும்

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

சித்திரை தமிழ் புதுவருடத்தைக் கொண்டாடிய நமது வாசகப் பெருமக்களுக்கு வாழ்த்துக்கள்.

இவ்வருட சித்திரைக் கொண்டாட்டங்கள் பெரிதாக சோபிக்கவில்லை என்று பரவலாக உணரப்பட்டது. இதற்கு அதிகரித்த பொருட்களின் விலையுயர்வா? அல்லது யுத்தம் முடிந்து இரண்டு வருடங்களாகின்ற போதும் திருப்தி தரக்கூடிய அரசியல் தீர்வொன்று காணப்படவில்லையே என்ற ஏமாற்றமா? அல்லது இரண்டு காரணங்களும் தானா?.

தம்மிடம் எழும் கேள்விகளுக்கான பதில்களை தமக்குள்ளேயே தேடிக்கொள்ளவே முற்படுகின்ற நிலைமையே இன்று உள்ளது. இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு வேறு எல்லாவற்றையும்விட முதல் தேவை அழிவுகளிலிருந்து தம்மால் எழ முடியும் என்றும் தமக்கு கௌரவமான அரசியல் தீர்வு வழங்கப்படும் என்ற நம்பிக்கையுமேயாகும்.

நம்பிக்கைகளை நோக்கி நகர்த்தப்படாத எந்தவொரு முன்னெடுப்பும் மக்களின் அக்கறைக்குரியவையாக அமையாது.

பயணிக்க முடியாத உடைந்த கப்பலில் மீண்டும் தமிழ் மக்களை ஏறிக்கொள்ளுமாறு தமிழ் கூட்டமைப்பு அழைக்கின்றது. போனால் பயணம் சுகப்படும் இல்லையேல் மரணம் வசப்படும் இப்படித்தான் வீர வசனம் பேசுகின்றனர்.

உடைந்து தரைதட்டித் துருப்பிடித்துப்போன கப்பலின் அணியத்தில் ஏறி நின்று கொண்டு கூட்டமைப்பினர் கொடியசைக்கின்றனர். பணிக்காத கப்பலுக்கு எவரும் திசை காட்டலாம். பயணிக்கின்ற கப்பலுக்குத்தான் சரியான திசை காட்ட ஆள் வேண்டும். அந்தப் பொறுப்பு தமக்கு இல்லையென்பது கூட்டமைப்பினருக்கு நன்றாகத் தெரியும். அதுதான் அவர்களின் அரசியல் கோட்பாடாகவும் இருக்கின்றது.

பயணிக்கத்தயாரான ஒரு பயணத்தில் இணைந்து கொள்வதற்கு மக்கள் தயாராக வேண்டும். கணிசமானவர்களில் ஏற்பட்டிருக்கும் இந்தப்புரிதல் மாற்றமே ஏனையோரையும் பாதுகாத்துள்ளது என்பது உணரப்பட வேண்டும்.

ஒப்பீட்டளவில் தமிழ் மக்கள் தமக்கு வாய்க்கும் வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ளத் தவறியவர்கள் என்பதை மறுக்கமுடியாது. அது அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண கிடைத்தவாய்ப்புக்களாக இருக்கலாம். அழிவுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு கிடைத்த வாய்ப்புக்களாக இருக்கலாம். அரசியல் ரீதியாக உச்சபட்சமாக நன்மைகளைப் பெற்றுக் கொள்ள கிடைத்த வாய்ப்புக்களாகவும் இருக்களாம்.

இதில் துரதிஷ்டம் என்னவென்றால் சமகாலத்திலும் அத்தகைய தவறுகளுக்கு இடமளிப்பதுதான். இது எதுவுமற்ற தமிழ் தேசியத்தின் பெயராலும், உணர்ச்சியூட்டல்களாலும் நடந்து முடிவதுதான் கொடுமையிலும் கொடுமையாகும்.

இலங்கைக்கு வெளியே வாழ்கின்ற தமிழ் மக்களின் குஸ்திகளும் கொதிப்புகளும் இங்கே தாயக மண்ணில் வாழ்கின்ற மக்களுக்கு எவ்வித நன்மைகளையும் பெற்றுத்தரப்போவதில்லை என்றபோதும்கூட இங்கே வாழும் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான பிரச்சினைகள் உண்டு என்பதை உலக மக்களுக்கு உணர்த்த அவசியமாக்கப்பட்டிருக்கின்றது.

இந்த உண்மையை அண்மையில் உணரமுடிந்தது. தமிழ் கூட்டமைப்பு அரசாங்கத்தோடு பேசுகின்றது என்றதும் புலம்பெயர்ந்து வாழுகின்றவர்களும் உள்நாட்டிலுள்ள சில எழுத்துலக ஜாம்பவான்களும் கூட்டமைப்பை விமர்சனக் கணைகளால் வசைபாடி புத்திமதி சொல்ல பெரும்பாடுபட்டனர். கூட்டமைப்பு தம்மை முட்டாள்களாக்கிவிடுமோ என்று அவர்கள் மிகவும் ஆடிப்போனார்கள். இறுதியில் சம்மந்தர் மாற்றுவழியை நாடவேண்டியிருக்கும் என்று வாந்தி எடுத்த பிறகுதான் அவர்கள் ஆறுதலடைந்தார்கள்.

ஏற்கெனவே குறிப்பிட்ட உடைந்த கப்பலின் மாலுமிப் பெருமக்களும் இந்த புத்திஜீவிப் பெருமான்கள்தான். வாய்ப்புகளை பயன்படுத்தும் திறமை என்பது, எது நமக்கான வாய்ப்பு என்பதை தெரிந்து கொண்டு அதைக் கையாள்வதுதான். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு உள்ளூராட்சித் தேர்தல் எனும் இன்னொரு வாய்ப்பு வாய்க்கவிருக்கின்றது பார்க்கலாம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

சிவன்

# நிபுணர்குழுவின் அறிக்கை காத்திருக்கும் அதிருப்திகள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

2009 ஆம் ஆண்டு மே19 ஆம் திகதி முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் நடைபெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட மூவர் அடங்கிய நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை கடந்த 12 ஆம் திகதி பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பிரதி இலங்கை ஜனாதிபதி அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வமாக இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற விபரங்கள் ஊடகங்களுக்கு இதுவரை வெளியிடப் படவில்லை. எனினும் உத்தியோகப் பற்றற்ற முறையில் சில தகவல்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன. இவற்றில் இருந்து பார்க்கும்போது நிபுணர் குழுவின் அறிக்கையானது இலங்கை அரசிற்குச் சார்ப்பானதாக இல்லையென்றே எண்ணத் தோன்றுகின்றது.

இலங்கை அரச தரப்பிலிருந்து வெளிவருகின்ற கருத்துக்களும் அதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளது. நிபுணர் குழுவின் அறிக்கையானது இலங்கை அரசுக்கு எதிராகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார். இலங்கை அங்கம் வகிக்கின்ற ஐக்கியநாடுகள் சபையானது இலங்கையைக் காப்பாற்றாது விட்டால் ரஷ்யா, சீனா போன்ற அமைப்புக்களின் உதவியை அதிகளவில் நாடவேண்டியிருக்கும் என்று இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்துள்ளார். இதேபோன்று விமல் வீரவன்ச, சஜித் பிரேமதாச போன்றவர்களும் கடுமையான கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர். இதன் மூலம் நிபுணர்குழுவின் அறிக்கையானது இலங்கை அரசுக்கு விரும்பத்தகாத கருத்துக்களை உள்ளடக்கியுள்ளதென்பதை ஊகிக்க முடிகின்றது.

கடந்த ஆண்டு... நிபுணர் குழு அமைக்கப்பட்டபோது கடுமையாக எதிர்த்த இலங்கை அரசு, நிபுணர்குழுவின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை எனவும், நாட்டினுள் நுழைய அனுமதிப்பதில்லை போன்ற உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருந்தது. ஐக்கியநாடுகள் சபைக்கு எதிரான போராட்டங்களும் நடாத்தப்பட்டன. அதன் உச்சக்கட்டமாக தமது அமைச்சுப்பொறுப்பைத் திறந்த விமல் வீரவன்ச உண்ணா விரதப் போராட்டத்தை நடத்தியிருந்தார். இவ்வாறு நிபுணர்குழு விடயத்தில் இலங்கை அரசு உறுதியாக இருந்தபொழுதும், மனித உரிமை அமைப்புக்கள் மேற்குலக நாடுகள் போன்றவற்றின் தொடர்ச்சியான அழுத்தங்கள் பான் கீ மூனினை நிபுணர் குழு விடயத்தில் பின்வாங்க முடியாத நிலைக்கு இட்டுச்சென்றது. எனவே தொடர்ச்சியாக பான் கீ மூன் மேற்கொண்ட இராஜதந்திர முயற்சிகளின் பயனாக நிபுணர் குழு இலங்கை வருமென அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெலவினால் கூறப்பட்டது. பின்னர் இலங்கை வருவார்கள், ஆனால் விசாரணை நடத்தமாட்டார்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்குச் சாட்சியளிப்பார்கள் என்று கூறப்பட்டது. இந்த இழுபறி தொடர்ந்ததினால் நிபுணர்குழுவின் வருகை இரத்துச் செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே தற்பொழுது நிபுணர்குழுவின் அறிக்கை பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் கூறப்படுவது போன்று இலங்கை அரசுக்குப் பாதகமான விடயங்கள் கூறப்பட்டிருப்பினும் கூட சில ஊடகங்களும் புலி சார்பு அமைப்புக்களும் கூறுவது போன்று



இதனூடாக இலங்கை அரசுக்கு கடுமையான நெருக்கடிகளைக் கொடுக்க முடியாது. முதலில் அவ்வாறான அதிகாரங்கள் எதுவும் நேரடியாக பான் கீ மூனின் கைகளில் கிடையாது என்பதை அவதானிக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் ஊடாக ஏதாவது செய்ய வேண்டும். அல்லது ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் ஊடாக அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

இவ்வறிக்கையானது எதிர்வரும் யூன் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கலாம் என்றும் அதன் பின்னர் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டு செல்லலாம் என்றும் சில விமர்சகர்களால் கருதப்படுகின்றது.

எதிர்பார்க்கப்படுவது போன்று பாதுகாப்புச் சபை மற்றும் மனித உரிமை பேரவை ஆகியவற்றின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டாலும் அங்கு தோற்கடிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாக இருக்கின்றது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த காலப்பகுதியில் மெக்சிக்கோவினால் இலங்கை விவகாரம் மனித உரிமை பேரவைக்குக் கொண்டுவரப்பட்டபோது இந்தியா, சீனா போன்ற நாடுகளின் கடும் எதிர்ப்பினால் தோற்கடிக்கப்பட்டது. அதேபோன்று பாதுகாப்புச் சபையிலும் இவ்விவகாரம் இலங்கைக்குப் பாதகமாக அமைவதற்கான சாத்தியக் கூறுகள், இல்லையென்றே சொல்லலாம். இந்தியா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் தொடர்ந்தும் இலங்கை பக்கமே இருக்கின்றன. தமிழக மக்களின் அதிருப்திகளைக் குறைப்பதற்கும் வேறு சில இராஜதந்திரக் காரணங்களுக்காகவும் இந்திய அரசு இலங்கையை ஆதரிப்பதற்குப் பின்வாங்கும் என எடுத்துக்கொண்டாலும் சீனா, ரஷ்யா போன்றவை இலங்கைக்கு ஆதரவாகவே நிற்கின்றன. எந்தத் தீர்மானத்தையும் இறுதி நொடியில் தூக்கி வீசக் கூடிய வீற்றோ அதிகாரத்தை அவை கொண்டிருக்கின்றன. எனவே சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்துவது பொருளாதாரத் தடைபோன்ற நெருக்கடிகளை ஏற்படுத்துவது என்பவை எல்லாம் வெறுமனே புலிசார்புச் சக்திகளின் விருப்புகளேயன்றி வேறொன்றுமில்லை. வேண்டுமென்றால் சம்பிரதாயத்திற்கு நீதியான முறையில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று அறிக்கைகள் விடப்படலாம்.

இவையெல்லாம் இலங்கை மீது மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களைக் கடுமையாகவும் தொடர்ச்சியாகவும் சுமத்தி வருகின்ற அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றிக்குத் தெரியாததல்ல. அப்படியிருந்தும் ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் உற்சாகப்படுத்தப்படுவதற்கு இலங்கை மீது உலக நாடுகளுக்கு இருக்கின்ற புவியியல்சார் நிலைப்பாடே காரணமாகும். தென்னாசிய வலயத்தில் தங்களுடைய பிடிப்பை வலுப்படுத்த விரும்புகின்ற மேற்குலகு அதற்குப் பொருத்தமான இடமாக இலங்கையைக் கையாண்டுவருவது வரலாறு. அதற்கு இப்போது கிடைத்திருப்பது மனித உரிமை மீறல். இவர்களின் இந்த நிகழ்ச்சி நிரலுக்குப் புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்களினுடைய தொடர்ச்சியான வற்புறுத்தல்கள், கோரிக்கைகள் என்பன ஒரு நியாயப்படுத்தல்களாக அமைகின்றன.

அதேவேளை இவ்வாறான அழுத்தங்களினால் இலங்கை அரசிற்குப் பாரிய பாதிப்பு ஏற்படாது. இருப்பினும், தம்மீதான கறையை அகற்ற வேண்டும். அல்லது குறைக்க வேண்டும் என்பதோடு மாறிவருகின்ற உலகப்போக்குகளில் எதுவும் நடைபெறலாம் என்ற நிலை இருப்பதினால் முற்றாக மேற்குலகை முறைத்துக்கொள்வதற்கும் இலங்கை அரசு விரும்பவில்லை. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகைப் பகைத்துக்கொள்வதானது எப்பொழுதுமே புலி வாலைப் பிடித்த கதையாகவே இருக்கும் என்ற உலக அனுபவங்களில் இருந்துகொண்டே இலங்கை அரசின் இராஜதந்திர நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேவேளை அமைக்கப்பட்ட நிபுணர்குழு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துவிட்டது, அது சர்வதேசக் கவனத்தை ஈர்த்துவிட்டது. என்ன அதற்குள் அடங்கியிருக்கின்றது என்பதும் ஓரளவிற்கும் வெளியே கசிந்துவிட்டது என்ற வகையில் ஏதாவது அடுத்த கட்டத்தை நோக்கி பான் கீ மூன் நகர வேண்டும். இல்லையேல் சர்வதேச அளவில் அவரின் செயற்பாடு கேள்விக்குரியதாக மாறிவிடும். தொடர்ந்தும் பலமான நிலையில் இருக்கின்ற புலம்பெயர் சமூகமும் நெருக்குதல்களை அதிகரிக்கும்.

எனவே அடுத்தகட்ட நகர்வுகள் இலங்கை அரசிற்கும் மேற்குலக இராஜதந்திர தரப்பினரிற்கும் இடையிலான முக்கியமான திருப்பங்களுடையவையாகவே அமையும். அவை எவ்வாறான திருப்பங்கள் என்பது இருதரப்பினருடைய விட்டுக்கொடுப்புக்களிலும் நெளிவு சுழிவுகளிலுமே தங்கியிருக்கின்றது.

# தமிழர் அரசியலின் வரலாற்றுத் தவறுகள்





**எஸ்.ஜே.வீ.செல்வநாயகம்**

அவர்களின் மறைவுக்குப் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக ஆகும் முழுத் தகுதிகளும் கொண்டிருந்தவர் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராயிருந்த செல்லையா இராசதுரை அவர்களாகும். 1956ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக மட்டக்களப்பு மக்களால் பாராளுமன்றத்துக்கு தெரிவாகி வந்த இவர், தமிழர்கள் மத்தியில் பழம்பெரும் தலைவராக மதிக்கப்பட்டு வந்தவர். ஆனால் தனது சொந்த தொகுதி மக்களாலேயே 1970 ஆண்டு தேர்தலில் வட்டுக்கோட்டையில் தோல்வி கண்ட அமிர்தலிங்கம் இராசதுரையின் வளர்ச்சியையோ அவர் தலைவராவதையோ விரும்பியிருக்கவில்லை. 1970 ஆண்டின் பின்னர் அமுலான கல்வித்தரப்படுத்தல் சட்டத்தை எதிர்க்க வேண்டும் என்கின்ற தமிழ் தரப்பினரின் முடி வினை கட்சிக்குள்ளேயே ஆட்சேபித்தவர்கள் எனும் வகையில் இராசதுரையும் தங்கத்துரையும் முக்கியம் வாய்ந்தவர்கள். இதன் காரணமாகவும் இவர்கள் மீது அமிர்தலிங்கத்துக்கு இவர்களை ஓரங்கட்டியாக வேண்டும் என்கின்ற நீண்டநாள் திட்டம் இருந்தது. அத்தோடு யாழ்ப்பாணத்துக்கு வெளியே தமிழ் மக்களுக்கான தலைமைப் பதவி செல்லுகின்ற வாய்ப்பை அமிர்தலிங்கம் போன்றவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. இதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த த.வி.கூட்டணியின் முக்கியஸ்தர்கள் பலரும் அமிர்தலிங்கத்துடன் சேர்ந்து இராசதுரையை ஓரம் கட்டும் முயற்சிக்கு ஆதரவு அளித்தனர்.

இந்த யாழ்ப்பாணத்தினுடைய மேல்தட்டு வர்க்க பண்பு முதன்முறையாக மட்டக்களப்பு மக்களால் மெதுவாக உணரப்படும் வாய்ப்பினை 1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலே வழங்கியிருந்தது. இத்தேர்தலில் தனது வெற்றி வாய்ப்பின் மீது சந்தேகம் கொண்ட அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட அஞ்சினார். அவ்வேளை தந்தை செல்வாவின் இறப்பினால் அவரது தொகுதியான காங்கேசன்துறைக்கான இடம் வெறுமையானதைப் பயன்படுத்தி அங்கே போட்டியிட முன்வந்தார். அதுமட்டுமன்றி மட்டக்களப்பில் இராசதுரையின் வெற்றி வாய்ப்புகளை குறைப்பதற்கான சாத்தியப்பாடுகளையும் அதிகரிக்கச் செய்தார். இதற்காக காசி ஆனந்தனையும் மட்டக்களப்பு தேர்தல் களத்தில் இறக்கி தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட வைத்தார் அமிர்தலிங்கம். இந்த முடிவை மட்டக்களப்பின் கூட்டணிக் கட்சிக் கிளைகள் கடுமையாக எதிர்த்தன.

பொத்துவில் தொகுதியில் போட்டியிடுவதற்கு கூட்டணியின் சார்பில் பொருத்தமான ஆள் இல்லாத நிலையில் அங்கு காசிஆனந்தனைப் போட்டியிட வைக்க முடியும் என அவர்கள் வாதிட்டனர். ஆனாலும் அமிர்தலிங்கத்தின் விடாபிடியும் அதிகாரமும் மட்டக்களப்பு மக்களை பிரித்தாளும் சூட்சியுமே இறுதியில் வெற்றி கொண்டது. அதாவது த.வி.கூட்டணியின் சார்பில் சூரியன் சின்னத்தில் இராசதுரை போட்டியிட தமிழரசுக்கட்சி சார்பில் வீடு சின்னத்தில் காசிஆனந்தனை மட்டக்களப்பில் போட்டியிட வைத்ததன் மூலம் மட்டக்களப்பு தமிழர்களின் வாக்கை இரண்டாகப் பிரிக்கும் முயற்சியை அமிர்தலிங்கம் மேற்கொண்டார். அதனூடாக இராசதுரையின் வெற்றி வாய்ப்புக்களை இல்லாதொழித்து கட்சிக்குள் முடிசூடா மன்னனாக தானே திகழ வேண்டும் என அமிர்தலிங்கம் கனவு கண்டார். ஒரே கட்சிக்குள்ளேயே கிழக்கில் ஒரு தலைமை உருவாகி விடக்கூடாது என்பதற்காக இந்தக் குழிபறிப்பு அரங்கேறியமையானது எமது வரலாறுகளில் காணக் கிடைக்கும் உண்மைகள்.

காசி ஆனந்தனும் மட்டக்களப்பைச் சேர்ந்தவரே ஆயினும் ஒரு யாழ்ப்பாண ஆதிக்க சூதில் அகப்பட்டு பகடைக்காயானார். இராசதுரையின் வெற்றி வாய்ப்புக்களை குறைப்பதற்காக காசி ஆனந்தனுக்கு பிரச்சார உதவிகளை அமிர்தலிங்கம் திட்டமிட்டு தயார் செய்தார். யாழ்ப்பாணத்தில் இருந்து ஈழவேந்தன், கோவை மகேசன், மாவை சேனாதிராஜா போன்ற உணர்ச்சிமிகு பேச்சாளர்களும் மட்டக்களப்பில் முகாமிட்டுத் தங்கி காசி ஆனந்தனுக்காக தேர்தல் வேலைகளில் ஈடுபட்டனர். இந்த நிலையில் காசி ஆனந்தனுக்கு மட்டும் வழங்கப்பட்ட இந்தப் பிரச்சாரங்களின் முன்னுரிமையானது மட்டக்களப்பு மக்களின் சந்தேக நரம்புகளை மெல்லியதாக அருட்டிவிட்டது. இதன் காரணமாக மட்டக்களப்பில் படித்த இளைஞர் கூட்டம் இராசதுரையை வெல்ல வைப்பதற்கு கங்கணம் கட்டிக்கொண்டு பிரச்சாரக் களத்தில் குதித்தனர். மட்டக்களப்பில் நடந்த இறுதி நாள் பிரச்சாரக் கூட்டத்தில் இராசதுரையே கட்சிக்குள் நடக்கும் குழிபறிப்பை தெளிவாகவும் பகிரங்கமாகவும் மக்களிடம் வெளிப்படுத்தினார். யாழப்பாணமா? மட்டக்களப்பா? என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள் என அவர் உரையாற்றினார்.

இறுதியில் காசி ஆனந்தன் படுதோல்வியடைய வழமை போல் இராசதுரையே மட்டக்களப்பில் முதலாவது எம்.பியாக தெரிவானார். இந்தத் தேர்தலில் இரட்டை அங்கத்தவர் தொகுதியான மட்டக்களப்பில் இருந்து இரண்டாவது எம்.பியாக ஐ.தேசியக் கட்சியைச் சேர்ந்த பரீட் மீராலெப்வை தெரிவு செய்யப்படார்.

தேர்தலில் வென்ற இராசதுரை, தமிழ் அரசியல் வானில் தன்னை ஒரு தமிழனாக அன்றி மட்டக்களப்பானாக நடாத்தி கேவலப்படுத்திய யாழ்ப்பாணத் தலைமைகளின் புறக்கணிப்பிற்கு பாடம் புகட்ட எண்ணி விரக்தியுற்று யு.என்.பி. அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டார். கட்சிமாறி யு.என்.பி.யில் சேர்ந்தது பெரும் துரோகம் என்று அமிர்தலிங்கம் உட்பட யாழ்ப்பாணத் தலைமைகள் கூக்குரலிட்டன. ஆனால் மட்டக்களப்பு மக்களுக்கு அமிர்தலிங்கத்தினுடைய கீழ்த்தரமான அரசியல் சூதுகளுக்கு முன்னால் இராசதுரை கட்சிமாறியது ஒன்றும் துரோகமாகப்படவில்லை. இராசதுரை யாழ்ப்பாணத் தலைமைகளுக்கு தகுந்த பாடம் கற்பித்ததாகவே அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

இருந்தபோதிலும் இந்த தேர்தலில் 13 ஆசனங்களை பெற்றுக் கொண்ட த.வி.கூட்டணி இலங்கையில் வரலாற்றின் முதலாவது தடவையாக பிரதான எதிர்க்கட்சியாகும் வாய்ப்பு பெற்றது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியடைந்த படுதோல்வியே த.வி.கூட்டணிக்கு இந்த வாய்ப்பை வழங்கியது. ஆனால் இலங்கையின் எதிர்கட்சியாகிவிட்ட தகுதி ஒன்றே தமக்கு தமிழீழக் கோரிக்கைக்கான ஆணையை வழங்கி விட்டதாக பரபரப்பாக த.வி.கூட்டணி பிரச்சாரத்தில் ஈடுபட்டது. இந்த ஆணையைத் தான் இன்றுவரைப் புலிகளுக்குச் சார்பானவர்களும் முன்னிறுத்திப் பேசிவருகின்றனர்.

இதேவேளை தேர்தல் வெற்றி வாய்ப்புகளுக்காக யாழ்ப்பாணத்தில் வன்முறைகளுக்கு தூபமிட்டு வந்த தமிழ்த் தலைமைகளின் செயற்பாடுகள் அங்கிருந்த இளைஞர் குழாமை தீவிரவாதப் பாதைக்கு அணிதிரட்டியிருந்தது. ஆகவே அவர்கள் த.வி.கூட்டணி பெற்றுக் கொண்ட ஆணையைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தில் தமிழீழத்தை பிரகடனப்படுத்துமாறு அமிர்தலிங்கத்துக்கு நெருக்குவாரம் கொடுத்தனர். தேர்தல் கணக்கு வழக்குகளை அனுசரித்து தமிழ்த் தலைமைகள் மேற்கொண்ட தில்லுமுல்லுத்தனமாக வட்டுக் கோட்டைத் தீர்மானமும் தேர்தலில் தமிழீழத்துக்கு மக்களிடம் ஆணை கேட்ட கோமாளித்தனமும் தமிழீழம் பற்றிய கற்பனாவாதப் பிரச்சாரங்களும் உண்மையென்றே இந்த இளைஞர் குழாம் நம்பியிருந்தது.

(22ஆம் பக்கம் தொடர்ச்சி)

“

பொத்துவில் தொகுதியில் போட்டியிடுவதற்கு கூட்டணியின் சார்பில் பொருத்தமான ஆள் இல்லாத நிலையில் அங்கு காசி ஆனந்தனைப் போட்டியிட வைக்க முடியும் என அவர்கள் வாதிட்டனர். ஆனாலும் அமிர்தலிங்கத்தின் விடாப்பிடியும் அதிகாரமும் மட்டக்களப்பு மக்களை பிரித்தாளும் சூட்சியுமே இறுதியில் வெற்றி கொண்டது. அதாவது த.வி.கூட்டணியின் சார்பில் சூரியன் சின்னத்தில் இராசதுரை போட்டியிட தமிழரசுக்கட்சி சார்பில் வீடு சின்னத்தில் காசிஆனந்தனை மட்டக்களப்பில் போட்டியிட வைத்ததன் மூலம் மட்டக்களப்பு தமிழர்களின் வாக்கை இரண்டாகப் பிரிக்கும் முயற்சியை அமிர்தலிங்கம் மேற்கொண்டார். அதனூடாக இராசதுரையின் வெற்றி வாய்ப்புக்களை இல்லாதொழித்து கட்சிக்குள் முடிசூடா மன்னனாக தானே திகழ வேண்டும் என அமிர்தலிங்கம் கனவு கண்டார். ஒரே கட்சிக்குள்ளேயே கிழக்கில் ஒரு தலைமை உருவாகி விடக்கூடாது என்பதற்காக இந்தக் குழிபறிப்பு அரங்கேறியமையானது எமது வரலாறுகளில் காணக் கிடைக்கும் உண்மைகள்.

”

நன்றி இணையம்

**மலையாள மாந்தரீக முறைப்படி**







**45 வருட காலம் தொட்டுச் செய்யும் எமது தெய்வீக சேவை**

மழைக்கு முளைக்கும் காளான் பயிரைப் போல் அல்லாது தொன்று தொட்டு பரம்பரை பரம்பரையாக, வாழையடி வாழையாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை ஆணிவேராகக் கொண்டு வளர்ந்து வரும் எமது மகத்தான மாந்திரீக சேவையின் நிமித்தமே நாம் வாரா வாரம் செய்து வரும் விளம்பரம்.

வாடிக்கையாளர் ஒருவர் தன் பிரச்சினையை என்னிடம் ஒப்படைத்த அடுத்த விநாடியே ஒருவர் புது வீடு கட்டத் திட்டமிட்டு அஸ்திவாரம் போட்டு அவ்வீடுவரை உறுதியாக, உண்மையாக உழைக்கின்றாரே, அதேபோல் வாடிக்கையாளரின் பிரச்சினைகளை உள்வாங்கி முழுமனதோடு அவரின் பிரச்சினை தீரும் மட்டும் இருந்து இரவு பகலாக தியான பூஜைகள் நடைபெறுவது என்பது உறுதி.

தொடர்ந்து வாராவாரம் விளம்பரம் செய்வது என்றாலே அது எமது மாந்திரீக உச்சாடன பீடம் மட்டுமே. கருணை, அன்பு, நேர்மை, உண்மை, உழைப்பு இவை அனைத்தையும் கொண்டு வாடிக்கையாளர்களுக்குச் சேவைபுரிந்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து அவர்களின் சிரிப்பிலே இறைவனைக் காண ஆதி பராசக்தி எனக்கு இந்த அற்புத அருள்ஞான சக்தியை அருளியுள்ளார்.

“நேரம் காலம் பாராது காலா காலம் பழைமை வாய்ந்த ஜோதிட மாந்திரீக சேவை என்றால் அது எனது சேவையே!” என நான் சொல்வதில் பெருமிதம் அடைகிறேன். நல்லது நடக்க நல்வாழ்வு பெற என்னை ஒரு முறை சந்திக்கலாமே!

ஒரே கூரையின் கீழ் சகல சாந்தி பரிகாரங்களும் செய்வதற்கு விசேட பிரிவுரைகள் உண்டு. உண்மையையும், நேர்மையையும் அடித்தளமாகக் கொண்டு, பரிசுத்தமாகச் செய்யும் என் பரிகாரத்தால், எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்குப் பிரச்சினைகள் தீரும், நல்லது நடக்கும் எனத் திட்டவட்டமாக உறுதியாக உறுதிமொழி வழங்குவது மட்டுமல்லாது உறுதிக்கடிதம் வழங்குவது மாந்திரீக சேவை யில் நான் மட்டுமே.!

வெளிநாட்டவர்கள் அவரவர் குறைநிறைகளுக்கு ஜாமபிரம்ப முகூர்த்தத்தில் தியான பூஜைகள் கடல் கடந்து செயல் புரியும் வண்ணம் உத்வேகத்துடன் நடைபெறுகின்றது. மேலும் வெளிநாட்டவர்கள் என்னிடம் தொடர்புகொள்ள 24 மணிநேர தொலைபேசி சேவையும் எம்மால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திட்டவட்ட ஜாதக குறிப்பு என்றால், என் கணிப்புத் திட்டவட்டமாக இருக்கும். செல்வாக்கு, செல்வாக்கு அருளியது எனது குருநாதர், சிவகாமியின் செல்வ குமரகுருபரனே!

நல்லது செய்ய நினையுங்கள், நல்லது நடக்கும்,
நழ்வாழ்வு பெற என்னிடம் வாருங்கள்.
எல்லாம் நன்மைக்கே!

(என்னைச் சந்திக்க முன் அனுமதி பெற்று வருவது மிக முக்கியம்.)

*** வெளிநாட்டவர்கள் ஐயாவிடம் நேரடியாக கதைக்க விரும்பினால் முன் அறிவித்தலுடன் (ஸ்கைப்) (Skype:drpksamy) மூலம் கதைக்கலாம்.**

**DESABANTHU Prof.P.K.SAMY (J.D.G.A.N.) JP. ஐயா**

SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO.23.MAYFIELD ROAD, KOTAHENA, COLOMBO-13.
011-2470615, 011-2342463, 011-2342464. FAx.094-112344831
நுவரெலியா கிளை இல.33, Daily Fair Complex052-2222508



# அதிக இலாபத்தைப் பெற்றிட நிலக்கடலை பயிரிடுவோம்

எண்ணெய் உற்பத்தியின் பிர-தான உற்பத்திப் பொருளாகவும், கைத்தொழிற் பயிராகவும் நிலக்கடலை(கச்சான்) காணப்படுகிறது. இருவாட்டி மணல் தரையில் மிக நன்றாக வளரக் கூடிய ஓர் அவரையி-னப் பயிராகும் நிலக்கடலையை இரண்டு போகங்களிலும் பயிரிடலாம்.

**நடுகைக் காலம்:**
காலபோகம்: ஐப்பசி மாதம் தொடக்கம் கார்த்திகை மாதம் வரை. சிறுபோகம்: சித்திரை மாதம் தொடக்கம் வைகாசி மாதம் வரை.

**நிலம் பண்படுத்தல்:**
6-9 அங்குல ஆழத்திற்கு உழுது பண்படுத்திய நிலத்தில் மண் கட்டிகளை உடைத்து தூர்வையாக்க வேண்டும். களித்தன்மையான நிலமாயின் 24 அங்குல இடைவெளியில் வரம்புகளை அமைத்தல் வேண்டும்.

**விதைத் தெரிவு:**
நல்ல வீரியமுள்ள விதைகளையே நடுகைக்கு பயன்படுத்த வேண்டும். விரைவாக வளர்ச்சியைப் பெற்றிட கோது உடைத்த விதைகளைப் பயன்படுத்த வேண்டும்.

**பசளைப் பயன்பாடு:**
அடிப்பசளையாகவும், இடைப் பசளையாகவும் இரசாயன பசளைகள் பயன்படுத்தப்படுகின்ற போதும் சேதனப் பசளைகளைப் பயன்படுத்துவது சிறந்தது. நிலப் பண்படுத்தலின் போது ஏக்கருக்கு 100kg Npk யினையும், பூக்கும் பருவத்தில் ஏக்கருக்கு 13kg யூரியாவையும் பயன்படுத்தலாம்.

**நீர்ப்பாசனம்:**
முதல் நான்கு வாரமும் மூன்று நாட்களுக்கு ஒரு தடவை நீர்ப்பாசனம் செய்தல் வேண்டும். பூக்க ஆரம்பிக்கும் போதும், காய்கள் உருவாகும் போதும் மண்ணில் போதியளவு ஈரப்பதன் இருத்தல் வேண்டும்.

**மண் அணைத்தல்:** பூக்கும் பருவத்தில் (30 -35 நாட்களில்) தாவரப் பகுதியைச் சுற்றி மண் அணைத்தல் வேண்டும். இதன்மூலம் காய்கள் மண்ணுள் செல்வது இலகுவாக்கப்படுகின்றது. தாவரங்கள் பூப்பதற்கு முன்னர் நிலம் இறுகிக் காணப்பட்டால் நிலத்தை கொத்தி மண்ணை இலகுவாக்க வேண்டும்.

**பீடைக்கட்டுப்பாடு:**
இலை சுறுங்கறுப்பின் அந்துக்கள் இலையில் முட்டையிடுவதனால் முட்டை பொரித்து வெளிவரும் குடம்பிகள் இலையினை துளைத்து உண்ணுகின்றன. இதனால் இலைகள் மஞ்சள் நிறமாகி காய்ந்து விடுகின்றன.

**காய் துளைக்கும் எறும்புகள், கறையான்கள்:**
இளம் காய்களைத் துளைத்து விதை களை உண்கின்றன. இதனை கட்டுப்படுத்த தாவர அடியைச் சுற்றி கபோபியூரான் குறுணலை மண்ணுடன் கலப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.
இவற்றுடன், கௌபி காய் துளைப்பான், செம்மயிர்க் கொட்டிகள், வெட்டும்புழு, சிற்றுண்ணிகளாலும் இலைகளிற்கும் தாவரத்திற்கும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இவற்றை கட்டுப்படுத்த உங்கள் பகுதி விவசாய போதனாசிரியரை நாடி வேண்டிய தகவல்களைப் பெறலாம்.

**நோய்களும், கட்டுப்பாடும்:**
இலைப்புள்ளி நோய், துரு நோய், கழுத்தழுகல் நோய் இவற்றினைக் கட்டுப்படுத்த உங்கள் பகுதி விவசாய பே-ாதனாசிரியரின் சிபார்சின்படி கிருமிநா-சினிகளைப் பயன்படுத்தலாம்.

**அறுவடை**: 3 1/2 - மாதங்களில் அறுவடையினை மேற்கொள்ளலாம். தாவரங்கள் முதிர்ந்து மஞ்சள் நிறமாக மாறியிருக்கும். ஆங்காங்கே ஓரிரு தாவரங்களை பிடுங்கியும் பயிரின் முதிர்ச்சியை அறியமுடியும். அறுவடை யின் பின்னர் 2-3 நாட்கள் வெயிலில் காயவிடல் வேண்டும்.

பிரதானமாக நிலக்கடலையினை எண்ணெய் உற்பத்திக்கும், சிற்றுண்டி வகைகள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. நிலக்கடலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதால் நிலக்கடலையின் விலை உயர்வடைந்து காணப்படுகின்றது. எனவே விவசாயிகள் நிலக்கடலையினைப் பயிரிட்டு நல்ல இலாபத்தை ஈட்டலாம்.

**சீ.ஜெயதீபன்**

# கண்ணதாசனின்

## அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 08

166



'உடல்தான் எல்லாம். உயிர் என்பதே கை, கால்கள் முதலிய அங்கங்களைச் சேர்ப்பதால், தானே ஏற்படும் ஓர் அற்புதமே!'

"அவர்கள் வாதத்தில், உயிர்க்கும் இந்த உயிரின் இனிய வெம்மை, உடலின் இன்ப துன்பங்களுக்கு இறைவனாக நிற்கும் அந்தத் தெய்வ சக்தியல்ல. ஆனால், அது தானாகச் சேர்க்கையின் பொழுது ஏற்பட்ட ஒரு சினைப் பொருள். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு சேர்த்து மென்றால் ஒரு செந்நிறம் தனித்துத் தானாக நேர்கிறதல்லவா? அந்த மாதிரி அந்த நிறம், இந்தத் தனித்தனி ஒன்றிலுமே இல்லையே! அதேபோல அவர்கள் கட்சி, உடலின் அங்கங்களைச் சேர்த்தால், அதாவது இயற்கை அவ்விதம் சேர்க்கும் பொழுது உயிர் தோன்றுகிறது! அப்படிப் பேசுகிற குழுவினருக்குச் சாவு என்பது உடல் மறைவு; உயிரின் சூனியம் அவ்வளவுதான். சூனியத்திலிருந்து உயிர் வெளியாகிறது; கொஞ்ச நேரத்திற்கு நிச்சயமற்ற சில ஆட்டங்கள் போடுகிறது; பிறகு சூனியத்திலே மறைந்துவிடுகிறது.

"பகுத்துச் சிந்திக்கும் ஒருவனுக்கு அந்தத் தத்துவம் தகர டப்பா சத்தம் என்று தெரியும். சூனியத்திலிருந்து ஒன்றும் ஆகாது. அதற்குள் ஒன்றும் மறையவும் முடியாது. - மீண்டும் சூனியமாக!

"புத்த மதத்தைச் சேர்ந்த சூனியவாதிகளின் கட்சி வாதங்களை எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் சொல்வதையே அவர்கள் வாதம் கண்டிருக்கிறது. இதை நாம் வெகு சுலபத்தில் புரிந்துகொள்ளலாம். பரம உண்மை என்பது நிர்வாணம் அல்லது இல்லாதிருக்கும் தன்மை என்று நிலைநாட்ட அவர்கள் வாதம் புரிகின்றார்கள். அதுவே முன்னுக்குப் பின் முரணான வாதம். சங்கர பகவத் பாதாள், அதே வாரத்தையையே எடுத்துக்கொண்டு பேசுகிறார்கள். வாதக் களத்திலிருந்தே அவர்களை விரட்டி விடுகிறார்கள்.

"அவர்கள் சொல்லுகிறதை அப்படியே ஒப்புக் கொள்வோம் என்றால் என்ன முடிவு ஏற்படும்? அவர்கள், இல்லாதிருக்கும் இருப்பை அறிந்தவர்கள் என்று ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கும். சங்கரச்சாரியார் மற்றும் வேதாந்திகள் கருத்துப்படி, 'இல்லாதிருக்கும் நிலை' யை அறிகிறவன் அல்லது அந்த அறிவாகிய ஞானம்தான் பரம தத்துவம். நம் முன் இருக்கும் இந்த ஞானம் அல்லது அறிகின்ற அந்தப் பொருள் தேய்வதில்லை; சாய்வதில்லை.

"ஆகவே, வெறும் ஏட்டுப் படிப்பெல்லாம் ஞானம் விழைபவனைக் குழப்பப்படுத்தும். பலதரப்பட்ட சிந்தனையாளர்கள் தங்கள் முறையில் தங்கள் மனப்பாங்கு, பண்பாட்டுக்கு ஏற்றவாறு தனித்தனியே எண்ணி வாதம் புரிந்து முடிவு காணுகிறார்கள். அந்த முடிவு-களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாயிருக்கின்றன. உண்மையான தீர்ப்பைத் தருவது தான் யார்? எந்தத் 'தர்மபுத்திரன் நமக்கு உண்மையைச் சொல்லுவார்? அந்த உண்மையை உள்ளபடி அனுபவித்துணர்ந்த ஆர்மஞானி தான் செய்ய முடியும். ஆகவே நசிகேதன், யமதர்மனைப் பார்த்து இந்த ஆத்யாத்மிகக் கேள்வியைக் கேட்டது முற்றிலும் சரியே!

"இந்தக் கேள்வியால் யமதர்மனுக்குப் பயம் வந்துவிடுகிறது.

"நசிகேதா! இந்த விஷயத்தில் தெய்வங்ளே சந்தேகம் கொண்டிருக்கின்றன. உண்மையில் அதைப் புரிந்து கொள்வது சுலபமில்லைதான். தயவு செய்து என் பொருட்டு நீ இதைக் கேட்காதே!"

நசிகேதன் சொல்லுகிறான்.

"மரணத்தின் தந்தையே! இறைவனுக்குக் கூட இதில் சந்தேகம் உண்டு என்று நீ சொல்லுகிறாய். இதை அறிய முடியாது என்கிறாய். ஆகவே எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது; இதற்குப் பதில் சொலலக் கூடியவன் நீ ஒருவனே! எனது இந்த மூன்றாவது வேண்டுகோள் மிக முக்கியமானது."

நசிகேதன் விடவில்லை; மரண இரகசியத்தை வெளியிட யமதர்மனும் தயாராக இல்லை.

"உனக்கு என்ன வேண்டுமானாலும் தருகிறேன். மக்கள், பேரர்கள், நூறு வயது, தங்கம், பசுக்கள், ராஜாங்கம் எல்லாம் தருகிறேன். அழகான பெண்களைத் தருகிறேன்; சேவகர்களைத் தருகிறேன். அனுபவி. மரணத்தின் இரகசியத்தை மட்டும் கேட்காதே!" என்றான் யமதர்மன்.

"யமதர்மா, மரணத்தை மடியில் கட்டிக்கொண்டு இவற்றை அனுபவிப்பது எப்படி? ஆகவே அந்த இரகசியத்தை நீ சொல்லியே ஆக வேண்டும்" என்கிறான் நசிகேதன்.

யமதர்மன் வேறு வழியின்றிச் சொல்லத் துவங்குகிறான்.

"நசிகேதனுடைய வாதம் மிகவும் ஆணித்தரமானது. கடோபநிஷத்தின் முக்கியமான பகுதி அதுதான். ஆனால், அவன் நின்ற இடம், மரணத்தின் இரகசியத்தைத் தவிர வேறு ஒன்றும் கேட்கமாட்டேன் என்பதே. ஒரு இலட்சியப் பிடிப்பை இதில் காண்கிறோம்.

"ஒரு ஏழை. பணக்காரப் பெண்ணைக் காதலிக்கிறான். இலட்ச ரூபாய் தருகிறேன், என் பெண்ணை மறந்துவிடு" என்று சொன்னால், சிலர் மறந்து விடுகிறார்கள்.

ஆனால் நசிகேதனோ, பூலோகம் தெரிந்துகொள்ள விரும்பும், 'மரண இரகசியத்திலேயே நிற்கிறான்.

யமன் சொல்லும் இரகசியமோ, திடுக்கிடத்தக்கதாக இல்லை. அது. பகவத்கீதையின் மற்றொரு பதிப்பாக நின்று ஆன்மாவையும், பற்றற்ற தன்மையையும் அதிகம் பேசுகிறது.

நித்தியும், அநித்தியம் இரண்டுக்கும் உள்ள வேற்றுமையைக் கூறுகிறது.

தொடரும்...

**ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிற்கு இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கும் பொருட்டு அமைக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் அறிக்கை கடந்த 12 ஆம் திகதி பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்டது. அதில் ஒரு பிரதி இலங்கை ஜனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற சில விடயங்களை வெளியிட்டுள்ளன. அவையே இங்கு மீள்பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து நிபுணர் குழுவின் அறிக்கை அதிகாரபூர்வமாக வெளியிடப்படாத நிலையில் இந்த அறிக்கை இலங்கையில் உள்ள ஊடகம் ஒன்றின் வாயிலாக கசிந்துள்ளது.

இந்த நிபுணர் குழுவின் அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்க சுதந்திரமான அனைத்துலக பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று ஐ.நா நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ளது.

இந்த அறிக்கையில், அரசாங்கம் அமைத்துள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் முயற்சிகளை நிராகரித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளும் அரச தரப்பும் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் மற்றும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து 'அரசு நீதியான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்' என்று கோரப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் வாழ்ந்த மக்களை பணயக் கைதிகள் போன்று தடுத்து வைத்திருந்ததாகவும் தப்பிச் செல்ல முயன்றவர்கள் தண்டிக்கப்பட்டதாகவும் இந்த அறிக்கை குற்றம்சாட்டியுள்ளது.

அரசாங்கம் மனிதாபிமானப் போரை நடத்தியதாகவும், பொதுமக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுத்தவில்லை என்றும் கூறினாலும் அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மீறும் பாரதூரமான நடவடிக்கைகளில் அரசும், விடுதலைப் புலிகளும் ஈடுபட்டுள்ளனர். இந்த மீறல்களில் சில போர்க்குற்றங்களாகவும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவும் கருதப்படத்தக்கவை. போரின் இறுதிக்கட்டத்தில் 2008 செப்டெம்பர் தொடக்கம் 2009 மே 19ஆம் திகதி வரையான காலப்பகுதியில் படையினர் வன்னியில் முன்னேறிச் சென்ற போது மேற்கொண்ட பரவலான எறிகணைத் தாக்குதல்களில் ஏராளமாக பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

வெள்ளை வானில் ஆட்கள் கடத்தப்பட்டதுடன் காணாமற் போன போன சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. வன்னியில் மூன்று தாக்குதல் தவிர்ப்பு வலயங்களின் மீது அரசாங்கம் கனரக ஆயுதங்களின் மூலம் கடுமையான பீரங்கித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

போரின் இறுதிக் கட்டத்தில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பெரும்பாலான இழப்புகளுக்கு அரசின் பீரங்கித் தாக்குதல்களே காரணம். மருத்துவமனைகளின் மீதும் அரசு பீரங்கித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

வன்னியில் இருந்த அனைத்து மருத்துவமனைகளும் மோட்டார் மற்றும் ஆட்லறி போன்ற பீரங்கிகளால் தாக்கப்பட்டுள்ளன. பல மருத்துவமனைகள் திரும்பத் திரும்பத் தாக்கப்பட்டுள்ளன.

2009 ஜனவரி தொடக்கம் மே வரையான காலத்தில் பத்தாயிரம் உயிர்கள் பலியாகின. இதில் போரின் இறுதி நாட்களில் அடையாளம் காணப்படாமல் பெருமளவானோர் இறந்தனர்.

போரின் முடிவில் விடுதலைப் புலிகளின் போராளிகள் தனியாக பிடித்துச் செல்லப்படனர். அவர்களில் பலர் கொல்லப்பட்டனர். பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டிருக்கக் கூடும். ஏனையோர் காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மூடப்பட்ட முகாம்களுக்குள் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களின் அடிப்படை சமூக பொருளாதார உரிமைகள் மீறப்பட்டன. அநாவசியமாக பலர் உயிரிழக்க நேரிட்டது. பலர் சித்திரவதை செய்யப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் இயக்க சந்தேக நபர்களுக்கு வசதிகள் மறுக்கப்பட்டன. அவர்கள் வெளியுலகுடன் தொடர்புகொள்ள முடியாமல் தடுக்கப்பட்டனர். முன்னேறி வந்த அரச படையினரைத் தடுக்க பொதுமக்களை புலிகள் மனித கவசங்களாகப் பயன்படுத்தினர்.

கட்டாய ஆட்சேர்ப்பை நடைமுறைப்படுத்தினர். இளவயது சிறார்களையும் படையில் சேர்த்தனர். 2009 பெப்ரவரியில் தமது பிடியில் இருந்து தப்பிக்க முயன்ற பொதுமக்கள் மீது புலிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

அதிகளவு பொதுமக்கள் தங்கியிருந்த அவர்களுக்கான விநியோகப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த பகுதிகளில் இருந்து பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர். போர் நடைபெற்ற பகுதிக்கு வெளியே தற்கொலைத் தாக்குதல்களை நடத்தினர்.

ஐ.நா. நிபுணர் குழு இலங்கை அரசு மீது ஐந்து விதமான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

1. பரந்தளவிலான பீரங்கித் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைப் படுகொலை செய்தமை.
2. மனிதாபிமான இலக்குகள், மருத்துவமனைகள் மீது பீரங்கித் தாக்குதல்களை நடத்தியது.
3. பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதை தடுத்தமை.
4. போரில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த பொதுமக்கள் மற்றும் விடுதலைப் புலிச் சந்தேக நபர்களின் மனித உரிமைகளை மீறியது.
5. ஊடகங்கள் மற்றும் அரசை விமர்சிப்பவர்கள் மீதும், போர் நடைபெற்ற பகுதிகளுக்கு வெளியே மனிதஉரிமை மீறல்களில் ஈடுபட்டது.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஆறு குற்றச்சாட்டுகளையும் நிபுணர்கள் குழு முன்வைக்கிறது.

1. பொதுமக்களை மனித கவசங்களாக பயன்படுத்தியது.
2. தமது பிடியில் இருந்து தப்பிச்செல்ல முயன்ற பொதுமக்களைக் கொன்றது.
3. பொதுமக்கள் வாழ்ந்த பகுதிகளில் இருந்து படைக்கருவிகளை இயக்கியது.
4. சிறுவர்களைக் கட்டாயமாக படைகளில் சேர்த்தது.
5. பொதுமக்களிடம் கட்டாயமாக வேலை வாங்கியது.
6. போர் நடைபெறாத பகுதிகளில் தற்கொலைத் தாக்குதல்களின் மூலம் பொதுமக்களைக் கொன்றது.

இலங்கையில் அனைத்துலக மனிதஉரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டுள்ளதற்கு பொறுப்புக் கூறுவது உள்நாட்டு அனைத்துலக சட்டங்களின்படியான கடமையாகும்.

இந்த வலுவான குற்றச்சாட்டுகள் குறித்து தீவிரமான விசாரணை நடத்தி அதற்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் இராணுவத் தளபதிகள், மூத்த அரச அதிகாரிகள், குறிப்பாக இராணுவ, குடியியல் மற்றும் புலிகளின் தலைவர்கள் மீது அனைத்துல்க குற்றங்களில் ஈடுபட்டதற்காக முன்னிறுத்தப்பட வேண்டும். அரசு நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக்குழு அனைத்துலக தரத்துக்கு அமைவானதல்ல.

அதில் ஆழமான குறைபாடுகள் உள்ளன. போரின் இறுதிநாட்களில் ஐ.நாவின் அரசியல் அங்கங்களோ அல்லது அமைப்புகளோ வன்னியில் பொதுமக்களைப் பாதுகாக்கத் தவறியுள்ளன.

**பரிந்துரை -1**

அ. ஆயுதப்போரின் போது இருதரப்பினாலும் மீறப்பட்ட அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்கள் தொடர்பான நீதியான விசாரணைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

ஆ. இலங்கை தொடர்பாக ஐ.நா பொதுச்செயலாளர் உடனடியாக சுதந்திரமான அனைத்துலக பொறிமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பரிந்துரை - 2**

கீழ் குறிப்பிடும் விடயங்கள் குறித்து இலங்கை அரசு குறுகிய காலநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**பரிந்துரை - 3**

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையிலான நீண்டகால நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**பரிந்துரை - 4**

இலங்கை தொடர்பாக 2009 இல் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை அழைப்பது குறித்து ஐ.நா மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தோனேசிய முன்னாள் சட்டமா அதிபர் மர்சூகி தருஸ்மன் தலைமையிலான நிபுணர்கள் குழுவின் அறிக்கை 196 பக்கங்களை உள்ளடக்கியதாகும்.

# அதிரடி அய்யாத்துரை



**யாழ்.நகரசபையில ஊழல், கீழல் எண்டு அந்தச் சபையின்ர எதிர்க்கட்சிக்காரர் ஒப்பாரி வைச்சுக்கொண்டு இருக்கினமெல்லோ. அதுபற்றி கொஞ்சம் விசயம் தெரிஞ்ச நாலுபேரோடை டிஸ்கஸ் பண்ணிப் பார்த்தனானுங்கோ. அவையள் என்ன சொல்லினம் தெரியுமோ?**

**அந்தக் கடைத் தொகுதியைக் கட்டிறதுக்கு எக்கச்சக்கமான தொகை வேணுமாம். அந்தத் தொகை சபையிட்ட இல்லையாமுங்கோ. அதை லோன் போட்டு எடுத்தாலும் கடைகளின்ர வாடையில இருந்து கிடைக்கிற தொகையில இப்போதைக்குக் கட்டி முடிக்க ஏலாதாமுங்கோ.**

**அதாலதானாம் பாருங்கோ, தனியாரிட்டக் குடுத்துக் கட்டுவிச்சால், யாழ். பட்டிணத்துக்குத் தரமான வியாபார கட்டடமும் கிடைக்கும். சபைக்குச் சொந்தமாய் சொத்தும் கிடைக்குமாமுங்கோ. இதுகள் எல்லாத்தையும் கல்குலேட் பண்ணி பார்த்து, எல்லா கட்சிக்காரருக்கும் எக்ஸ்பிளேன் பண்ணித்தானாமுங்கோ தனியாளிட்ட உரிய ஆவணங்களோடை பொறுப்புக் குடுத்தவையள்.**

**எல்லாத்துக்கும் கோயில் மாடுகள் மாதிரி தலையாட்டிக் கொண்டிருந்த எதிர்க்கட்சிக்காரர் இப்ப ஒப்பாரி வைக்கினமாமுங்கோ. அதிலயும், சட்டம் படிச்சவர் விசயத்தை விளங்கிக்கொண்டு அடக்கி வாசிக்கிறாராம். ஆனால் சொல்புத்திக்கு ஆடுறவையள்தான் சவுண்ட் குடுக்கினமாமுங்கோவ்.**

**'கேட்போருக்கு** கேட்டும் வரம் கொடுக்கிறவர் நடராசன்' ஆனால் புகலிடம் தேடி லண்டனில போய் செட்டிலாகியிருக்கிற நடராஜாக்களில ஒருத்தர் இப்ப கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறாராமுங்கோ. ஏனப்பா மனிசனுக்கு இந்த நிலை எண்டு கேட்டால், 'கஸ்டப்பட்ட எங்கட சனத்துக்குக் கைகொடுத்துக் கொண்டிருந்ததுதான் அந்த மனிசன் செய்த தப்பு" எண்டு லண்டன் பண்டின மகாஜனங்கள் சொல்லினமுங்கோ.

கஷ்டத்துக்கு உதவினதுக்கு ஜெயில் வாழ்க்கையா? எண்டு ஆச்சரியப்படாதேங்கோ. நடராஜர் தான் செய்த உதவிக்கு, அறாவட்டி கறந்து கொண்டிருந்தவராமுங்கோ. முன்னமெல்லாம் இஞ்ச இருந்து போனவையள், எங்கட நாட்டுப் பழக்கத்தில் "மனிசன் வட்டிக்குக் குடுத்து உழைக்குது" எண்டு அலட்டிக் கொள்ளயில்லையாமுங்கோ. ஆனாப் பாருங்கோ, அங்க வளர்ந்து கொண்டிருக்கிற இப்பத்தய ஜெனறேஷனுக்கு இந்த வட்டி குட்டியெல்லாம் இலீகல் விசயமாய்த்தானாம் தெரியுதுங்கோ. அவையள்ள யாரோ ஒரு புண்ணியவான் போட்டுக் குடுக்க, லண்டன் பொலிசுக்காரர் லபக் பண்ணி உள்ள போட்டிட்டினமாமுங்கோ.

போன இடங்களில சட்டதிட்டங்களை மதிக்காமலுக்கு ஊர் சட்டியன் பானியில திரிஞ்சால் எண்டைக்காவது பருப்பு தின்ன வேண்டி வரும் என்கிறதுக்கு நடராஜன் நல்ல பாடமாக இருக்கிறாரெல்லோ.

**இதுவுமொரு** லண்டன் மாநகரத்துச் சமாச்சாரம் தானுங்கோ... புலம்பெயர்ந்து போய் லண்டனில குழந்தை குட்டியோட செட்டிலாகியிருக்கிற மகன், தன்ர மகளின்ர தண்ணி வாக்கிற நிகழ்ச்சிக்கு நாட்டில இருந்த தன்ர தகப்பனும் நிண்டா நல்லாயிருக்கும். பேத்தியின்ர விசயத்தை நேரடியாகப் பார்த்தால் வயசுபோன நேரத்தில அப்பு சந்தோஷப்படுவார் எண்டு நினைச்சு ஸ்பொன் ஷர் பண்ணி அப்புவை கூப்பிட்டவராமுங்கோ.

லண்டன் போன அப்பு லண்டனில எல்லாரோடையும் ஜாலியா இருந்துட்டு வந்திட்டாராமுங்கோ. கொஞ்ச நாள் கழிச்சு மகளுக்கு உடம்பு சரியில்லையெண்டு டாக்குத்தரிட்ட போனப்பதான் மகனுக்கு விளங்கியிருக்குது 'அப்புவை நம்பி வீட்டிலை விட்டுட்டுப் வேலைக்குப் போக, அப்பு பயிர்களையே மேய்ஞ்சு நாசம் பண்ணிப்போட்டார் எண்டு.

இந்த விசயம் இன்ரபோலுக்குப் போக, இன்ர போல் எங்கட காக்கிச்சட்டைக்கு அறிவிக்க, இவையள் அப்புவை 'லபக்' பண்ணி அனுப்பி வைச்சிருக்கினமாமுங்கோ.

கொஞ்ச நாளைக்கு முன்னம், குடாநாட்டுப் பத்தி ஒண்டில அந்த 'பத்தி' கந்தோரைக் கொழுத்த லைட்டர் கொண்டு போனவரை மடக்கிப்பிடிச்சுக் காக்கிச் சட்டையிட்ட குடுத்திட்டம் எண்டு கட்டம் கட்டின செய்தி வந்ததல்லோ.

கொளுத்தப் போனவரைச் சட்டத்துக்கு முன்னுக்கு நிப்பாட்டினபப், சம்பந்தப்பட்டவரை அங்கொடைக்கு அனுப்புங்கோ எண்டு தீர்ப்பு எழுதப்பட்டிருக்குதாமுங்கோ. பார்த்தியளோ எப்பிடியெல்லாம் ஊடகம் தர்மம் வேலை செய்யுது. சேறுவாரிப் பூசப்படுதெண்டு பத்திரிகையளைப் பிடிச்சு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு வைத்தியத்திற்கு அனுப்ப வேணுமெண்டு விவஸ்தையில்லாதவையள் எல்லாம் ..........! யாரை குறை சொல்லுறது... எல்லாம் எங்கட சனத்தின்ர தலையெழுத்தா இருக்குதுங்கோ.

# களையிழந்த சித்திரைப் புத்தாண்டு

**துப்பாக்கி** வெடியோசைகளும் ஷெல் வீச்சுக்களும் அழிவு நாச வேலைகளும் முடிவுக்கு வந்து விட்டன என்பதாலும் மக்கள் இப்போது வேடிக்கை விநோத நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கிறார்கள், புது வருடத்திற்காக பலகாரம் சுடுகிறார்கள் என்பதாலும் நம்பிக்கையூட்டும் வகையில் இம்முறைச் சித்திரைப் புத்தாண்டைப் பார்க்க முடியுமா என்ற கேள்விக்கு ஆழமான பதில்களைத் தேடவேண்டியிருந்தது.

பொதுவான அடிப்படையில் நோக்கினால் எல்லாம் சுபம் என்றுதான் எண்ணத்தோன்றும். ஆயினும், கடந்த கால் நூற்றாண்டு காலப் பகுதியில் பல்வேறு இழப்புக்களையும் சொல்லொண்ணாத் துயரங்களையும் சுமந்து, சலித்து வாழ்ந்தவர்களுக்கு இப்போதுள்ள சூழல் ஒப்பீட்டளவில் சிறப்பானதாகத்தான் தெரிகிறது.

துப்பாக்கி வெடியோசைகளுக்குப் பதிலாக பட்டாசுச் சத்தங்கள் கேட்கின்றன. வாண வேடிக்கைகளும் விநோத நிகழ்ச்சிகளும் விளையாட்டுக்களும் இடம்பெறுகின்றன. வீட்டை விட்டு வெளியே சென்றவர்கள் ஆபத்து எதுவுமின்றி வீடு திரும்புவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அகதி முகாம்களிலுள்ள அன்றாடக் காய்ச்சிகளான கூலிகளும் இந்த முறை சித்திரைப் புத்தாண்டில் பலகாரங்கள் சுட்டு சமைத்துப் பசியாறி மகிழ்ந்ததோடு விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றியிருந்தார்கள்.

இது இவ்வாறிருந்த போதிலும் பல்வேறு கண்ணோட்டங்களினதும் யதார்த்தத்தினதும் அடிப்படையில் இம்முறை தமிழ் சிங்கள புத்தாண்டு நிறைவும் நிம்மதியும் நம்பிக்கையும் தரக்கூடியதாக நிஜத்தில் சோபிக்கவில்லை என்பதுதான் வெளிப்படை.

இம்முறை சித்திரைப் புத்தாண்டு தமிழ், சிங்கள மக்களால் பெரிதாகக் கொண்டாடப்படவில்லை என்று பெரு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண விவசாயிகளின் நிலைமையை கவலையோடு விவரிக்கிறார் மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் கலாநிதி. ஆர்.ருஷாந்தன்.

“கடந்த வெள்ளத்தின் போது விவசாயம் முற்றாக அழிவடைந்து விட்டது. அதனால் மக்களின் கையில் காசு இல்லை என்று கூறும் அவர், விவசாயிகளின் வாழ்க்கை முறைமையைப் பற்றி விவரிக்கும் பொழுது “இப்பொழுது சிறுபோக விதைப்புக் காலம் தொடங்கிவிட்டது. மரபு ரீதியாக தமிழ் மக்களின் வாழ்க்கையை எடுத்து நோக்கினால் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில், பெரும்போக விதைப்பு முடியும். அது முடிந்தவுடன் அறுவடைக்குத் தயாராகுவார்கள். பிறகு பொங்கல் வரும். அதை கொண்டாடி முடிந்த பிறகு, மக்களின் கையில் காசு இருக்கும். அதனைக் கொண்டு சித்திரை வருடத்தைக் கொண்டாடுவார்கள். சித்திரை வருடத்தை பெரிதாக கொண்டாடுவதன் காரணம் என்னவென்றால், பெரும்போக அறுவடை முடிந்து ஓரிரண்டு மாத காலத்துக்குள் சித்திரை புத்தாண்டு வருவதால் பெரியளவில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். சித்திரைப் புதுவருடத்தைக் கொண்டாடி முடிய மீண்டும் அடுத்த போகத்தை விதைப்பார்கள். அந்த நேரத்தில் கோயில் திருவிழாக்கள் இடம்பெறும். அதிலே கூத்து, நாட்டார் பாடல்கள் எல்லாம் நடக்கும். ஏனென்றால், விதைப்பு முடிந்தால் அவர்களுக்கு ஓய்வு கிடைக்கும். பின்னர்

**(கிருபா-ஜனோ)**

அறுவடைக்குத் தயாராகும் போது விரதங்கள் வரும். விரதங்கள் முடிய, அடுத்த போகம் வரும். இதுதான் விவசாயிகளின் வாழ்க்கை முறைமை. இதில் ஒன்று தவறினாலும் அவர்களது வாழ்க்கை அடிபட்டுப்போகும்.

கடந்த பெருவெள்ளத்தின் போது பெரும்போகம் முற்றாக பாதிக்கப்பட்டு விட்டது. மக்களின் கையில் காசு இல்லை. இப்பொழுது திரும்பவும் பாசன விதைப்பு தொடங்கிவிட்டது. விதைப்பதற்கும் மக்களிடம் காசு இல்லை. அதனால் இம்முறை சித்திரைப் புத்தாண்டு பெரிதாக கொண்டாடப்படவில்லை.

மொத்தமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 43 ஆயிரம் ஏக்கர் செய்கை பண்ணப்பட்ட விளை நிலங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. கால்நடைகளும் பெருமளவில் அழிந்து போயுள்ளன” என்றும் மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் கலாநிதி. ஆர்.ருஷாந்தன் தெரிவித்தார். மேலோட்டமான பார்வையில் சித்திரைப் புத்தாண்டு சிறப்பாக இருந்தது என்ற தோற்றப்பாடு இருக்கின்ற சூழ்நிலையில் அதுபற்றிய யதார்த்தத்தை விளக்குகிறார் இலங்கை அபிவிருத்திக்கான ஊக்க மையத்தின் அதிகாரி ஏ.சொர்ணலிங்கம் அவர்கள்.

“இடருக்குப் பிறகு இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் இருந்து மீண்டெழுவதற்கு மக்கள் கடுமையாக முயற்சி செய்வார்கள். அந்தப் போக்கு இந்த சித்திரைப்புத்தாண்டு காலப்பகுதியிலும் காணப்பட்டது. (22ஆம் பக்கம் தொடர்ச்சி)

**சித்திரை வருடத்தை பெரிதாக கொண்டாடுவதன் காரணம் என்னவென்றால், பெரும்போக அறுவடை முடிந்து ஓரிரண்டு மாத காலத்துக்குள் சித்திரை புத்தாண்டு வருவதால் பெரியளவில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். சித்திரைப் புது வருடத்தைக் கொண்டாட முடிய மீண்டும் அடுத்த போகத்தை விதைப்பார்கள். அந்த நேரத்தில் கோயில் திருவிழாக்கள் இடம்பெறும். அதிலே கூத்து, நாட்டார் பாடல்கள் எல்லாம் நடக்கும். ஏனென்றால், விதைப்பு முடிந்தால் அவர்களுக்கு ஓய்வு கிடைக்கும். பின்னர் அறுவடைக்குத் தயாராகும் போது விரதங்கள் வரும். விரதங்கள் முடிய, அடுத்த போகம் வரும். இதுதான் விவசாயிகளின் வாழ்க்கை முறைமை. இதில் ஒன்று தவறினாலும் அவர்களது வாழ்க்கை அடிபட்டுப் போகும்.**

# திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவமும் இரசாயனப் பாவனைத் தவிர்ப்பும்!

**இலங்கையில்** திண்மக் கழிவு முகாமைத்துவம் என்பது மிகப்பெரிய சவால் நிறைந்த ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. கழிவுகளைச் சேகரிக்கும் முறையற்ற வழிமுறைகள், முறைகேடான போக்குவரத்து, ஆத்திரத்தைத் தூண்டும் வகையிலான கழிவகற்றும் முறைமைகள் திண்மக் கழிவகற்றல் நடவடிக்கைகளில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. தற்போது நடைமுறையிலுள்ள கழிவகற்றும் முறைமைகள் சுற்றாடல் சூழல் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதோடு பொதுமக்கள் மத்தியில் அதிக ஆத்திரத்தையும் தோற்றுவித்துள்ளது. இந்தவித நடைமுறைகளால் ஒட்டுமொத்த சமூகங்களும் பாதிக்கப்பட்டுள்ளதோடு சுகாதார, சமூக, பொருளாதார, கலாசாரப் பிரச்சினைகளுக்கும் வழி வகுத்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கழிவுகள் சேகரிப்பு மற்றும் கழிவுகளை ஒதுக்கும் நடவடிக்கைகளை நோட்டமிடுமிடத்து அதற்கான உட்கட்டமைப்புகளும் வளங்களும் மிகக் குறைவாக, அன்றேல் ஒன்றுமே இல்லாத நிலைமைதான் காணப்படுகிறது. கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கட்டுப்பாடற்ற விதத்தில் குப்பைகளை வீசுவதும், புதைப்பதும் நாட்டில் சூழல் சம்பந்தமான உணர்வலைகளை உசுப்பி விடுவதற்குக் காரணமாய் அமைந்துவிடுகிறது.

வீடுகளிலும் உற்பத்தித் தொழிற்துறை இடங்களிலும் இருந்து கடைசியாக ஒதுக்கப்படும் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான ஒழுங்கான முறைமைகள் இல்லை. ஒழுங்கற்ற முறையில் புதைக்கப்படும் கழிவுகளால் வடிகான்கள் தடைப்படுத்தப்படுவதோடு, ஆபத்து விளைவிக்கக்கூடிய நோய்களைப் பரப்பும் நுளம்புகள், எலிகள் போன்றவை உருவாவதற்கும் தோதாய் அமைந்துவிடுகிறது. இயற்கைச் சூழலில் அமைந்த திறந்த வெளிகளில் கழிவுகளைக் கொட்டுதல் நிலம், நீர் முகங்கள் மாசடைவதற்கும் அத்துமீறிய குடியேற்றங்கள் நிகழ்வதற்கும் வழி வகுத்து விடுகிறது. திறந்தவெளிகளில் கழிவுகளை எரியூட்டுதலும் பாரதூரமான சுகாதாரச் சீர்கேடுகளுக்கு வித்திடுகிறது.

**(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

இலங்கையில் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தைக் கையாளும் முழுப் பொறுப்பும் சட்டப்படி உள்ளூராட்சி நிர்வாகத்தையே சார்ந்ததாகும். மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என்பவற்றின் சட்டப்பிரமாணங்களுக்கமைய அந்தந்த உள்ளூராட்சி நிர்வாகம் கூடுதல் கவனமெடுத்து இயங்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதில் இலங்கையின் பெரும்பாலான பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி நிர்வாகம் ஒப்பீட்டளவில் மிகக்குறைந்தளவு அக்கறையே எடுத்திருப்பதால் கடந்த காலங்களில் பொதுமக்கள் ஒரு போராட்டமான நிலைமையையே எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இந்த நிலைமைகளைச் சீர்செய்து இந்தப் பிரச்சினைக்கு சரியான தீர்வைப்பெற்றுக் கொள்ளும் முகமாக சுற்றாடல் இயற்கை வள அமைச்சு திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தில் ‘பிலிசரு’ எனப்படுகின்ற புதிய திட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளது. ‘பிலிசரு’எனப்படுகின்ற சிங்களச் சொல்லுக்கு ‘மீள்-வளம்’ எனப் பொருள்படும். இந்தத் திட்டத்தின் பிரதான இலக்கும் இதுதான். இந்தத் திட்டத்தின் தூர நோக்கு வளங்களை ஆகக் கூடிய மட்டத்தில் மீள்பாவனைக்குட்படுத்துதல், வீண் விரயத்தைத் தவிர்த்தல், பாவிக்க முடியாத எச்ச சொச்சங்களை இயற்கைக்கு முரணாகாத விதத்தில் அழித்தலாகும்.

இந்தத் திட்டம் சுற்றாடல் இயற்கை வள அமைச்சுடன் இணைந்ததாக மத்திய சுற்றாடல் அதிகார சபை அத்துடன் பிற அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், இந்தக்களப் பணியில் செயலாற்றும் புலமை வாய்ந்தவர்கள் என்போரின் வழி நடத்தலில் அமுல்படுத்தப்படும்.

2007 ஆம் ஆண்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற இந்த ‘பிலிசரு’ நிகழ்ச்சித் திட்டம் 2008 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய கழிவகற்றல் கொள்கைகளை வகுத்தல், கழிவகற்றல் முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விழிப்புணர்வையூட்டி அவர்களது இயலுமையைக் கட்டியெழுப்புதல், உள்ளூராட்சி நிர்வாகத்தினருக்கு தற்போது நடைமுறையிலுள்ள முறைமைகளில் முன்னேற்றத்தையும் புதிய அணுகுமுறைகளையும் மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப உதவிகளையும் வளங்களையும் வழங்குதல், கழிவகற்றல் முகாமைத்துவத் திட்டத்தில் சமூக அணிதிரட்டலுக்கூடாகவும் மிகவும் சாதகமான முறையில் வளங்களைப் பாவிப்பதற்கான இலகுபடுத்தல்களை வழங்குதல், கழிவகற்றல் திட்டத்தைக் கண்காணித்தல், கேட்டுக் கொண்டபடி செய்யாத பங்காளர்களுக்கெதிராக நீண்ட கால வழிமுறையில் சட்ட நடவடிக்கை எடுப்பது சம்பந்தமான விளக்கத்தை அளித்தல் என்பவை உள்ளடங்கும்.

(22ஆம் பக்கம் தொடர்ச்சி)

**இயற்கை வள அமைச்சு திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தில் ‘பிலிசரு’ எனப்படுகின்ற புதிய திட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளது. ‘பிலிசரு’ எனப்படுகின்ற சிங்களச் சொல்லுக்கு ‘மீள்–வளம்’ எனப் பொருள்படும். இந்தத் திட்டத்தின் பிரதான இலக்கும் இதுதான். இந்தத் திட்டத்தின் தூர நோக்கு வளங்களை ஆகக் கூடிய மட்டத்தில் மீள்பாவினைக்குட்படுத்துதல், வீண் விரயத்தைத் தவிர்த்தல், பாவிக்க முடியாத எச்ச சொச்சங்களை இயற்கைக்கு முரணாகாத விதத்தில் அழித்தலாகும். இந்தத் திட்டம் சுற்றாடல் இயற்கை வள அமைச்சுடன் இணைந்ததாக மத்திய சுற்றாடல் அதிகார சபை அத்துடன் பிற அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், இந்தக்களப் பணியில் செயலாற்றும் புலமை வாய்ந்தவர்கள் என்போரின் வழி நடத்தலில் அமுல்படுத்தப்படும்.**

# அவலம் சுமந்த ஏதிலிகள்

அத்திமுகத்தோன்

அவலம் 25



நிலம் பிடிக்க வந்த இடத்தில் எதிர்பாராதவிதமாக இரண்டு மனிதர்களைக் கண்டதும் அந்த இரு இராணுவச் சிப்பாய்களும் பயந்தே போனார்கள்.

‘அடோ! கொட்டி.... கொட்டி’ சிப்பாய்களில் ஒருவன் கத்திக் குளறியபடி ... துப்பாக்கியை நீட்டிப் பிடித்த வண்ணம் அவர்களை நோக்கி ஓடிவர, அவனுக்குப் பின்பாக மற்றைய சிப்பாயும் வேகமாக ஓடிவந்தான்.

‘ஆங்... கொட்டி எங்க போறது...? நம்மள உளவு பாக்க வந்ததுதானே...’ என்று கூறியபடி ஒரு சிப்பாய் பெரியப்புவின் கன்னத்தில் அறைந்தான். பெரியப்பு இதைக் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.

‘முருகா... முருகப் பெருமானே...’ என்று அலறியபடி... அலக்கமலக்க அருகில் உள்ள வேலியோரமாய் போய் விழுந்தார். அவர் நிலத்திலே விழுந்ததும், சிப்பாயின் பார்வை பெரியப்புவோடு வந்த அவன் மீது திரும்பியது.

துப்பாக்கி முனையை அவனது தொண்டைக் குழியில் வைத்தபடி சிப்பாய் அவனைப் பார்த்துக் கேட்டான்.

‘அடோ கொட்டி எங்க போக வந்தது...?’

‘வீட்டுக்கு...’

வீட்டுக்கு...? இல்லே. நம்மளைக் காட்டிக்குடுக்குறதுக்குத் தானே கொட்டியளுக்கு வேவு பார்க்க வந்தது...’ சிப்பாய் பற்களைக் கடித்தபடி.. அவனை மிரட்டினான்.

‘இல்லை. உண்மையாத்தான் சொல்லுறன். வீடு பார்க்கத்தான் வந்தனாங்கள்’ அவன் கூறியது சிப்பாய்க்கு சரியாகப் புரிபடவில்லை. மொழி விளங்காத் தன்மையில், அவனுள் சினம் கொப்பளித்தது.

‘அடோ! பொறுக்கியண்ட எப்பா...’ என்று கூறியபடி.. ஏ.கே. 47 துப்பாக்கியின் அடிப்பாகத்தால் அவனது மார்பில் ஓங்கிக்குத்தினான்.

அடியின் தாக்கத்தில் அவனது மூச்சு நின்று விடும்போல் இருந்தது. திரும்பி பெரியப்புவைப் பார்த்தான். அவர் வாயிலிருந்து இரத்தம் வழிந்த நிலையில் விக்கித்துப் போய் முகம் வெளிறிய நிலையில் அழுதுகொண்டிருந்தார்.

‘கொட்டி பயிற்சி எடுத்தது...? சிப்பாய்களில் ஒருவன் கேட்டான். ‘இல்லை...’ என்று அவன் கூறியதும் சிப்பாயின் முகம் ஆத்திரத்தில் விகாரமடைந்ததை அவனது கண்கள் கண்டு கொண்டன.

‘அடோ! பொறுக்கியண்ட எப்பா...’ சிப்பாய் மீண்டும் எச்சரித்தான்.

அவன் எதுவும் கூறவில்லை. அமைதியாக நின்றான். ஏ.கே. 47 துப்பாக்கியின் அடிப்பாகத்தால் நெஞ்சில் அடித்தது மிகுந்த வலியைக் கொடுத்தபடியிருந்தது. மூச்சு இழுத்துவிடுவதற்கு சிரமப்படவேண்டியிருந்தது. நிலைமை கைமீறிச் சென்றுவிட்டதை அவன் உணர்ந்துகொண்டான். இரணைப்பாலையிலுள்ள மனைவி, பிள்ளை மற்றும் சகலன் குடும்பத்தினரின் முகங்கள் அவனது நினைவினில் வந்து மோதின.

ஏதோவொரு சக்தி என்னவோ ஒரு காரணத்துக்காக மனிதனை இயக்குகிறது. அந்த இயக்கச் செயலின் விளைவு நன்மையாகவும் முடியலாம்... தீமையாகவும் முடியலாம்... என்ற வரிகள் மீண்டும் அவனது ஞாபகத்துக்கு வந்தன.

மாத்தளனுக்கு வெளிக்கிடும் போது பெரியப்பு எதிர்ப்பட்டதும், அவரே வலிந்து தன்னைக் கூட்டிக்கொண்டு வந்ததும் தற்செயலாக நடந்த விடயமல்ல என்பதையும் அவன் உணர்ந்து கொண்டான்.

‘ஆண்டவர் கட்டளையிடாதிருக்க காரியம் சம்பவிக்கும் என்று சொல்லுகிறவன் யார்...? என்று வேதவசனம் அவனது நினைவுக்குவர, நடப்பது தேவசித்தம்... என்ற எண்ணப்பாட்டுடன் அவன் அதைியாக இருந்தான்.

> **“ மாத்தளனுக்கு வெளிக்கிடும் போது பெரியப்பு எதிர்ப்பட்டதும், அவரே வலிந்து தன்னைக் கூட்டிக்கொண்டு வந்ததும் தற்செயலாக நடந்த விடயமல்ல என்பதையும் அவன் உணர்ந்து கொண்டான்.**
>
> **‘ஆண்டவர் கட்டளையிடாதிருக்க காரியம் சம்பவிக்கும் என்று சொல்லுகிறவன் யார்...? என்று வேதவசனம் அவனது நினைவுக்குவர, நடப்பது தேவசித்தம்... என்ற எண்ணப்பாட்டுடன் அவன் அதைியாக இருந்தான். ”**

வேலியோரம் போய் விழுந்த பெரியப்பு அவனருகில் வந்து நின்றார். அவர் வாயிலிருந்து இரத்தம் வழிவதை அவன் கண்டதும் பெரியப்பு கூறினார்.

‘பல்லொண்டு விழுந்து போச்சுது. அதுதான் ரத்தம் வழியுது...’

‘பொல்லுக்கொடுத்து அடிவாங்குகிறது எண்டு கேள்விப் பட்டிருக்கிறியளே..? அவன் அப்புவிடம் கேட்டுவிட்டு மெல்லச் சிரிக்க, அப்பு கோபத்துடன் அவனை முறைத்துப் பார்த்தார்.

இராணுவச் சிப்பாய் இருவரும் சற்றுத்தூரத்தில் தங்களுக்குள் ஏதோ கதைத்துக்கொண்டிருந்த நிலையில், இவன் சிரிப்பதைக் கண்டதும் சிங்களமொழியில் அவனைத் திட்டியபடி அவர்கள் நிற்கும் இடத்துக்கு வந்தார்கள் இருவரும்.

‘அடோ! என்ன சிரிக்கிறது...?

அப்புவும் அவனும் எதுவும் கூறத்தோன்றாது மௌனமாக நின்றார்கள்.

‘ஏய் கிழடு! வீடு எங்க...?

பெரியப்பு தனது வீட்டிற்குப் போகும் பாதையைக் காட்டினார்.

‘ஹரி... ஹரி... யண்ட.. ’ சிப்பாய் கூறியது அப்புவுக்கு மொழி விளங்கவில்லை. திரும்பி தன்னோடு வந்த அவனிடம் வெகுளித்தனமாகக் கேட்டார்.

‘என்னவாம் பொடியா கேட்கிறான் கரி அண்டாவாமோ..?

அவன் அப்புவை ஒருமுறைப்பு பார்வை பார்த்துவிட்டு பேசாமல் நடந்தான்.

முல்லைத்தீவு - பரந்தன் நெடுஞ்சாலையில் இருந்து தெற்குத் திசை நோக்கிய கிரவல் ஒழுங்கையில் இறங்கிய அவர்கள் இருவரும் இராணுவச் சிப்பாய்களால் பிடிக்கப்பட்டு, கைவேலிக் கிராமத்தின் காட்டுப்புற எல்லை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

போகும் வழியில் அப்பு தனது வீட்டைக் கண்டதும், ஒருவித முகமலர்ச்சியுடன் அதனைப் பார்த்தபடி நடையின் வேகத்தைக் குறைத்தபோது... இராணுவச் சிப்பாய் ஒருவன், அவரை முன்னே போகும்படி அவர் முதுகில் தள்ளினான்.

‘இது என்ர வீடு... அழாத குறையாக அப்பு சொன்னார்.

‘அடோ!... யண்ட.

கூறிவிட்டுச் சிரிக்க மற்றையவனும் அவனோடு சேர்ந்து சிரித்தான்.

தூரத்தே ஊர் எல்லையை அண்டிய காட்டுப் பகுதி தெரிந்ததும் அப்பு அச்சம்படர்ந்த முகத்தோடு அவனைப் பார்த்தார்.

‘எடபொடியா! காட்டுக்கை கொண்டு போறாங்களடா. சாக்காட்டப் போறாங்கள் போலக்கிடக்குது. ஐயோ... முருகா!.. முருகப்பெருமானே...’ அப்பு அந்த இடத்திலேயே குளறி அழத் தொடங்கினார்.

‘அடோ! என்ன சவுண்டு பண்ணுறது...? சிப்பாய்களில் ஒருவன் அவரது இடுப்பு வேட்டியை இறுக்கிப் பிடித்தபடி அவரை உலுக்கிக் கேட்டான்.

‘ஐயோ! நாங்கள் புலியள் இல்லை. வீடு பார்க்க வந்தனாங்கள். எங்களை விட்டிடுங்கோ’

“நாம உங்கள விடுகிறதில்லே. கொட்டியளைப் புடிச்சுப்புட்டு விடுகிறது. ஹரித! யண்ட... யண்ட”



சிப்பாய் அப்புவின் இடுப்புப் பிடியைக் கையைவிட்டிட்டு பிடரியில் கைவைத்து தள்ளிக்கொண்டு போனான். காட்டு எல்லை நோக்கி.

அவன் மௌனமாக அப்புவுக்குப் பின்பாக நடந்து கொண்டிருந்தான். காட்டின் எல்லையை அண்மித்து அதற்குள் நுழைந்ததும் அவனுக்கு மட்டுமல்ல, அப்புவுக்கும் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாக இருந்தது. இனி மீளுவதற்கு வாய்ப்பே இல்லை என்றதான உணர்வே அவர்களிடத்தில் மேலெழுந்து கொண்டது.

(அவலம் தொடரும்...)

# பாப்பா முரசு

# வினையாகும் கோபம்

**பாப்பா முரசு சிறுகதை**



ஜிங்ஜுவுக்கு பொசுக்கு பொசுக்கென்று கோபம் வந்துவிடும். எங்கும், எதிலும், எப்போதும், எதற்கெடுத்தாலும் அவனிடம் கோபம்தான்.

அவன் தாயாரும் ஜிங்ஜுவின் கோபத்தை குறைக்க என்னென்னவோ மன வைத்தியம் எல்லாம் செய்து பார்த்தாயிற்று. முடிவு கடுகளவும் பிரயோசனம் தரவில்லை.

அப்போது அந்த ஊருக்கு புகழ் பெற்ற ஜென் துறவி வந்திருந்தார். அவரிடம் அனுப்பி வைத்தால் மகனின் கோபத்துக்கு நல்லதொரு நிவாரணம் கிடைக்கும் என்று ஜிங்ஜுவின் தாயார் நம்பினார். மகனை துறவியிடம் அனுப்பி வைத்தார்.

நேராக துறவியிடம் போய் துறவியே, என்னிடம் அடக்க முடியாத கோப உணர்வு இருக்கிறது. அதை நான் எப்படி சரி செய்வது? என்று கேட்டான்.

உன்னிடம் ஏதோ மிகவும் வித்தியாசமான ஒன்று இருக்கிறது. அதுதான் கோபம். எங்கே, அதை சற்று என்னிடம் காட்டு பார்க்கலாம், என்றார் துறவி.

'இப்பொழுது என்னால் காட்ட முடியாது.' இது ஜிங்ஜு

'எப்போதுதான் என்னிடம் காட்ட முடியும்' இது துறவி.

'அது எதிர்பாராமல் வரும். அப்போதுதான் கோபத்தை அடக்க என்ன செய்வது என்று தெரியவில்லை' என்றான் ஜிங்ஜு

'கோபம் என்பது உண்மையானது, இயல்பானது என்றால் எந்த சமயத்திலும் அதை என்னிடம் உன்னால் காட்ட முடியும். நீ பிறந்த போது கோபம் உன்னிடம் இருந்தது இல்லை. உன் பெற்றோரும் கொடுத்தது இல்லை. பிறகு எப்படி உன்னிடம் கோபம் வந்தது?' என்று கேட்டார்.

ஜிங்ஜு குழம்பினான்.

துறவியே விளக்கினார், கோபம் என்பது ஏமாற்றத்தில் விளைந்த ஒரு பின்செயல். எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் முடிகிறது. ஏமாற்றத்திலிருந்து கோபம் உண்டாகிறது என்று புரியவைத்தார்.

நீதி: பொன், புகழ், செல்வம் என்று ஒவ்வொன்றின் மேல் எதிர்பார்ப்பு வைப்பதால் ஏமாற்றம் உருவாகிறது. ஏமாற்றம் கோபமாகிறது. இடையில் வந்து போகும் செல்வங்களின் மீது எதிர்பார்ப்பு வைக்காமல் வாழ்ந்தால் சலனமில்லாத நிம்மதியான வாழ்வு உருவாகும். □

**இல்லறத்தாருக்கும் துறவறத்தாருக்கும் பிரம்மச்சாரியம் அவசியம். ஏனெனில் உடல் மீதான ஆசை ஒழிந்தாலன்றி ஆத்மானந்தம் கிடையாது.**

**-ஸ்ரீசாரதாதேவி-**

## வாரம் ஒரு திருக்குறள்



**வாய்மை**

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.**

வாய்மை என்று கூறப்படுவது எதுவென்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

குறள்:291

## தெரிந்து கொள்ளுங்கள்

*அமெரிக்காவில் உள்ள சுதந்திரதேவி சிலையின் சுட்டுவிரல் நீளம், 8 அடி.

*தொலைபேசியைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகம்பெல்லின் தாயும், மனைவியும் காது கேளாதவர்கள்.

*ஆந்தை மட்டுமே தன்னுடைய மேல் இமையை விரிக்க முடியும். மற்றப் பறவைகள் கீழ் இமையை மட்டுமே விரிக்க முடியும்.

*கடவுளின் பெயர் சூட்டப்படாத ஒரே கிரகம், பூமி.


கண்களைத் திறந்து கொண்டே உங்களால் தும்ம முடியாது.

*பன்றிகளின் நாக்கில் சுமார் 15 ஆயிரம் சுவை நரம்புகள் உள்ளன.

*கி.மு. 2737ஆம் ஆண்டில் தேயிலை கண்டுபிடிக்கப்பட்டது.

* நீண்ட காலம் வரை கெட்டுப்போகாமல் இருக்கும் ஒரே உணவுப்பொருள், தேன்.

# சுக்ரு



பசைத்தன்மை கொண்ட சுக்ரு, வெளிர் வண்ணத்தில் இருக்கும் சிலிக்கான் இறப்பராகும். இதை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் கையாளலாம் இழுக்கலாம், அழுத்தலாம். இரும்பு முதல் துணி வரை எல்லாவற்றிலும் ஒட்டும் தன்மை கொண்டது இந்த சுக்ரு. 5 ஆண்டுகள் தீவிர ஆராய்ச்சிக்குப் பின்னர் இது உருவாக்கப்பட்டிருக்கிறது.

## வழிகாட்டுங்கள்

**மரத்தின் உச்சியில் உள்ள வண்டுக்கு, தரையை அடைய வழிகாட்டுங்கள்.**



# புதுவித கார்



குறைந்த எடைகொண்ட 'எடிசன் 2' கார், குறைவான எரிபொருளில் இயங்கக் கூடியது. 3.783 லீற்றர் (ஒரு கலன்) எரி பொருளில், ஏறக்குறைய 16.5 கிலோமீற்றர் வரை பயணம் செய்ய முடியும். இந்தக் காரின் எடை வெறும் 30 கிலோகிராம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 27.04.2011

வர்ணம் தீட்டும் போட்டி இல.886

தினமுரசு வாரமலர்

த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 884


**பரிசுக்குரியவர்:** ஆர்.சினோன் அஞ்சலோ, க/கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி.

**பாராட்டுக்குரியவர்கள்**

01. எம்.விதுஷன்,கடற்கரை வீதி, திருகோணமலை.
02. ரா.தேனுஜா,தாளையடி.
03. அ.கீர்த்திகா,மானிப்பாய்.
04. ர.சஞ்சீவன், மூளாய் மேற்கு, சுழிபுரம்.
06. ச.தபிஷன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
07. எச்.பிரதாப், வாளைச்சேனை, மட்டக்களப்பு.
08. எச்.எம்.எவ்.ஹயூன்ஷா, கொழும்பு-06


## தகவல் துணுக்குகள்...

# பிளாஸ்ரிக் கப்பல்



பிரிட்டனைச் சேர்ந்த டேவிட் ரோட்செல்ட் என்பவர், குளிர்பான பிளாஸ்ரிக் போத்தல்களைப் பயன்படுத்தி நீரில் செல்லும் கப்பலை வடிவமைத்துள்ளார். 8.7 பில்லியன் பிளாஸ்ரிக் போத்தல்கள் இந்தக் கப்பலை உருவாக்கப் பயன்பட்டன. 18 மீற்றர் நீளமுடைய இந்தக் கப்பல், மறுசுழற்சிசெய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் போத்தல்களை ஒட்டுவதற்கு, முந்திரிக்கொட்டை மற்றும் கரும்பினால் தயாரிக்கப்பட்ட பசையைப் பயன்படுத்தியுள்ளனர். பிளாஸ்ரிக்கை மறுசுழற்சி செய்து பல புதிய பொருள்களை உருவாக்குவதற்கான முயற்சி இது.

# விரைவாக வளரும் மீன்



அமெரிக்கர்களின் விருப்பமான உணவு, சால்மன் மீன். குளங்களில் வளர்க்கப்பட்டு இந்த மீன் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், ஒரு கிலோ மீன் வளர, 3 கிலோ உணவு கொடுக்க வேண்டும். தற்போது ஒருவகைக் கடல்பாசி உயிரினத்தின் உயிரணுக்களைக் கொண்டு, சால்மன் மீன்களின் உயிரணுக்களில் சில மாற்றங்களைச் செய்துள்ளனர். இதன்மூலம் முன்பைவிட இருமடங்கு வேகத்தில் இந்த மீன்கள் வளருமாம்.

# கண் எழுத்தாளர்



**பக்கவாதம் போன்ற காரணங்களால் உங்களுடைய உடல் செயலற்று இருக்கும்போது, மூளையின் செயற்பாடுகளை மட்டும் அறிய முடியுமா? முடியும் என்கிறார் இந்தக் கண் எழுத்தாளர். கண் கண்ணாடியில் மென்பொருள்களை உள்ளடக்கி, கண்களின் அசைவின் மூலம் உங்கள் எண்ணங்களுக்குச் சொற்களை அளித்து, அதைத் திரையிலும் காட்டுகிறது.**

பல வேளைகளில், நடக்க விருக்கும் நிகழ்ச்சி தொடர்பாக சில நாட்கள் கழித்து ஈமெயில்களை அனுப்புவோம் என்று திட்டமிடுவோம். குறிப்பாக பிறந்தநாள் வாழ்த்துகள், திருமண நாள் வாழ்த்துக் கடிதங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்ட நாட்களில் அனுப்பினால்தான், பெறுபவர் மகிழ்ச்சி அடைவார். குறிப்பிட்ட நாட்களில் நம் வேலைப்பளுவின் காரணமாக அல்லது மறதியாய் அனுப்பத் தவறிவிடுவோம்.

இதற்கு பல வழிகள் உள்ளன. இதுபோல எதிர்காலத்தில் அனுப்ப வேண்டிய ஈமெயில்கள், குறிப்பிட்ட நாளில் வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் அனுப்ப வேண்டிய ஈமெயில்கள் என முன்கூட்டியே தயாரித்து வைத்து அனுப்ப பல இணையத்தளங்கள் நமக்கு வசதியை அளிக்கின்றன. அவற்றை இங்கு பார்க்கலாம்.

1. Letter MeLater: எதிர்கால ஈமெயில் அனுப்பும் வசதிகளைத் தருவதில் இந்த வசதிதான் சிறப்பாகச் செயல்படுவதுடன், கூடுதல் வசதிகளையும் அளிக்கிறது. http://www.lettermelater.com என்ற முகவரியுள்ள தளத்தில் இந்த வசதி அளிக்கப்படுகிறது. இங்கு சென்று உங்கள் மின்னஞ்சல் முகவரியினைக் கொடுக்க வேண்டும். உங்களைப் பதிந்து கொள்ள வேண்டும். பின் மின்னஞ்சல் கடிதத்தினைத் தயார்செய்து, அனுப்ப வேண்டிய முகவரி மற்றும் நாளினையும் பதிந்து வைக்க வேண்டும். உடனேயே உங்களின் பதிவு செய்த மின்னஞ்சல் முகவரிக்கு நீங்கள் பதிந்து வைத்த எதிர்காலத்தில் அனுப்ப வேண்டிய ஈமெயில் குறித்த செய்தி அனுப்பப்படும். பின் குறிப்பிட்ட நாளில், நேரத்தில் நீங்கள் பதிந்த ஈமெயில் அனுப்பப்படும். பதிந்த நாளுக்குப் பின், தயாரித்த ஈமெயில் செய்தியில் ஏதேனும் மாற்றம் செய்திட வேண்டுமானால் இந்த தளம் சென்று, பாஸ்வேர்ட் கொடுத்து, மெயிலைத் திறந்து சேர்க்கலாம். பைல்களை சேர்த்திடலாம்.

2. Eternity Message: இந்த வசதியும் மேலே குறிப்பிட்ட வசதியைப் போலவே செயல்படுகிறது. இந்த தளத்தின் மூலம் எச்.டி.எம்.எல். குறுந்தகவலை தயார் செய்திடும் வசதி கிடைக்கிறது. இதில் ட்ராப்ட் வடிவில் ஈமெயில்களைத் தயாரித்து ஜஸ்ட் சேவ் செய்து வைத்திடலாம். அவற்றை அனுப்ப எண்ணினால், பின் அனுப்ப வேண்டிய திகதி குறிப்பிட்டு மார்க் செய்து வைக்கலாம். இந்த வசதியைப் ngw http://eternity message. com என்ற முகவரியில் உள்ள தளத்தை அணுகவும்.

3. FutureMail: எதிர்காலத்திற்கென மார்க் செய்யப்படும் ஈமெயில்களை இந்த வசதியின் மூலமும் அனுப்பலாம். அவ்வாறு குறிக்கப்பட்ட ஈமெயில்களை ஆர்.எஸ்.எஸ். பீட்ஸ் ஆகவும் காணலாம். இந்த வசதி http://futuremail.bensinclair.com என்ற முகவரியில் உள்ள தளத்தில் கிடைக்கிறது.

4. Email Future: பத்து ஆண்டுகளுக்குப் பின்பு அனுப்ப வேண்டிய ஈமெயில் கடிதங்களை எங்காவது பதிந்து வைத்து அனுப்புமாறு செய்திடலாமா? அந்த வசதியை Email Future தருகிறது. இந்த வசதியைப் பெற நீங்கள் அணுக வேண்டிய தள முகவரி, http://emailfuture.com.

5. Future Me: எதிர்காலத்தில் அனுப்ப வேண்டிய ஈமெயில்களைக் குறிப்பிட்டு சேமித்து செய்திட முடியும் என்றால், நமக்குத் தேவையான நினைவூட்டும் கடிதங்களையும் எழுதிப் பதிந்து வைக்கலாமே. அவற்றை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே அனுப்புமாறு செய்திடலாமே. அப்படிப்பட்ட ஒரு ஈமெயில் வசதிதான் Future Me ஆகும். இதனைப் பெற http://www.futureme.org என்ற முகவரிக்குச் செல்லவும்.


6. Email Capsule: இதுவும் எதிர்காலத்தில் ஈமெயில் அனுப்பும் வசதியாகும். இதனைப் பெற நீங்கள் செல்ல வேண்டிய இணைய தளமுகவரி: http://www.bored.com/ email-capsules

7. Mail Freezer : வேடிக்கையான எதிர்கால ஈமெயில் வசதி இது. இதன் பெயர் கூறுவது போல, இந்த தளத்தில் ஈமெயில்களை வெகு காலத்திற்கு ப்ரீஸ் செய்து வைக்கலாம். ஒன்று, இரண்டல்ல, நூறு ஆண்டுகளுக்குக் கூட இதில் ஈமெயில்களைச் சேர்த்து வைக்கலாம். ஆனால் குறிப்பிட்ட ஆண்டு, நாள் குறித்து அனுப்பும் வசதி இதில் இல்லை. இதனைப் பெற நீங்கள் செல்ல வேண்டிய தள முகவரி : http://www.mail-freezr.com.

இவற்றின் மூலம் உங்கள் ஈமெயில் அனுப்பும் வசதிகளை இலகுவாக்கிக் கொள்ளுங்கள்.

**(நன்றி இணையம்)**

# eMail தொடர்பாடலின் நுணுக்கங்கள்






# 50 திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

**எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.**

விசையைத் தட்டினான்.

இப்போது பின் பிடறியில் துப்பாக்கிக் குண்டு குபுக்கென்று துளைத்தது.

அப்படியே முன்புறமாய் சரிந்து விழுந்து மண் கவ்வினான் குஜார்.

எனக்கு இப்போது பயம் வரவில்லை. கண்முன்பாகக் கண்ட சாவுகளால் அதிர்ச்சி வரவில்லை. ஐயோ பாவம் என்று இரக்கம் வரவில்லை.

உள்ளமெல்லாம் குளிர்ந்தது போல இருந்தது. விக்ரம் மல்லாவைக் கட்டிக்கொண்டு ஆடவேண்டும் போல இருந்தது. கைகளை விரித்துக்கொண்டு ஓடி ஓடிக் கூவ வேண்டும் போல இருந்தது.

விக்ரம்மல்லாவின் ஆட்கள் துப்பாக்கிகளை உயர்த்திக் கொண்டு மல்லாவைச் சுற்றி நின்றுகொண்டார்கள்.

கொள்ளைக் கோஷ்டியில் இருந்த முப்பதுபேரில் 10 பேர்தான் மல்லாவின் விசுவாசிகள். மீதிப்பேர் எல்லாம் குஜாரின் ஆட்கள்.

குஜாரின் ஆட்கள் தங்கள் துப்பாக்கிகளோடு நாம் நின்ற இடத்தை நோக்கி நகரத் தொடங்கினார்கள்.

குஜாரின் ஆட்கள் எண்ணிக்கையில் அதிகம். அதனால் எனக்குச் சற்றுப் பயமாக இருந்தது. மல்லாவோ அவனது ஆட்களோ பயந்ததாகத் தெரியவில்லை. துப்பாக்கிகளை உயர்த்திக்கொண்டு தயாராக நின்றார்கள்.

பாபுசிங் குஜாரின் ஆட்கள் சட்டென்று மண்டியிட்டு அமர்ந்தார்கள். நிலத்தில் தமது ஆயுதங்களை வைத்தார்கள். மல்லாவை நோக்கித் தலைவணங்கினார்கள்.

“விக்ரம்மல்லாவுக்கு ஜே” என்று கத்தினார்கள் மல்லாவின் ஆட்கள். குஜாரின் ஆட்களும் “தலைவர் விக்ரம்மல்லாவுக்கு ஜே” கத்தியபோது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில் “விக்ரம் மல்லாவுக்கு ஜே” என்று நானும் சேர்ந்து கத்தினேன்.

மல்லா திரும்பி என்னைப் பார்த்தான். முதன் முதலாக கனிவாகச் சிரித்தான். அந்தச் சிரிப்புக்குள் நான் என்னை மறந்துபோனேன்.

முதன் முதலாக, என் வாழ்க்கையில் நான் நினைத்தது எல்லாம் நடக்கத் தொங்கி இருக்கின்றன.



பாபுசிங் குஜார் என்ற நாய் செத்துத் தொலைந்துவிட்டது. என் மல்லா-விக்ரம்மல்லா இந்தக் கூட்டத்தின் தலைவனாகிவிட்டான்.

மல்லா என்னைப் பார்த்துச் சிரித்த சிரிப்பில் விருப்பம் தெரிந்துவிட்டது. அவனும் என்னை விரும்புகிறான் என்று.

அய்யோ... அய்யோ... நான் எப்படிச் சொல்வேன். என் கால்கள் தரையில்தான் நிற்கின்றனவா?

என் வாழ்நாளில் நெஞ்சு நிறைய இப்படியொரு சந்தோஷத்தை எனக்கு எந்நாளும் தா. என்னைத் துரத்திய நாய்களை நான் இனித் துரத்தப்போகிறேன். இனித்தான் பூலான் எழப்போகிறாள். உன் மகள் எழப்போகிறாள்” முணுமுணுத்துக் கொண்டிருந்தேன்.

மல்லா தலைவனாகவும் அவனுக்கு நெருக்கமான மாதுசிங், பரத்சிங் இருவரும் லெப்டினண்களாக நியமிக்கப்பட்டனர்.

மல்லா என்னைத் தனியாக அழைத்தான். எனக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. நன்றிசொல்ல வேண்டும். பாராட்டுச் சொல்ல வேண்டும். மனம் திறந்து நெகிழ வேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டுதான் போனேன்.

மல்லாவின் முன் சென்றதும் எல்லாமும் மறந்து போய்விட்டது.

“நீ இங்கிருக்க விரும்பாவிட்டால் வீட்டுக்குச் செல்லலாம்! இங்கே இருக்க விரும்பினால் எங்களில் ஒருவராக இருந்துகொள்ளலாம். பயப்பிடாமல் உன் முடிவைச் சொல்லலாம்!” என்றான் மல்லா. விட்டால் என்னை அலாக்காகத் தூக்கிக்கொண்டுபோய் வீட்டில் விட்டுவிடுவான் போலிருந்தது.

நான் அவசரமாகச் சொன்னேன்,

“இங்கேயே இருக்கிறேன்!”

“ஆபத்துக்கள் வரும்!”

“தெரியும். ஆனாலும் நான் இங்கேயே இருக்கிறேன்!”

கொள்ளையடிக்க வேண்டும். தேவைப்பட்டால் கொலையும் செய்ய வேண்டும்!”

“தெரியும். நான் உங்களோடுதான் இருக்கப்போகிறேன்!” உங்களோடு என்ற வார்த்தையை அழுத்திச் சொன்னேன். ஆனால் மல்லாவுக்கு மரமண்டை.

“எங்களோடு இருப்பவர்களில் நீ மட்டும்தான் பெண். அதனால் உனக்குப் பாதுகாப்பு இருக்காது. பயமில்லையா?” என்றான். உங்களோடு என்பதை தன் ஆட்களையும் சேர்த்து அர்த்தப்படுத்திக்கொண்டான். மரமண்டை மரமண்டை.

சே... எப்படித்தான் இந்த மரமண்டைக்குப் புரிய வைக்கப்போகிறேன் என்று சலிப்பாக இருந்தது. “பயமில்லை, நீங்கள் தான் இருக்கிறீர்களே!” என்று சொல்லிக்கொண்டே தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மல்லாவை நேராகப் பார்த்தேன்.

“அப்படியானால் சரி, மாதுசிங்!” என்று மல்லா கூப்பிட குரலுக்கு மாதுசிங் ஓடிவந்தான்.

“பிணங்களை என்ன செய்தாய்?”

“குழிவெட்டிப் புதைத்துவிட்டோம்!”

“உடுப்புக்கள்!”

“கழற்றி வைத்திருக்கிறேன்!”

“அதில் ஒன்றை இவளுக்குக் கொடு. இன்று முதல் இவள் எங்களில் ஒருத்தி” என்றான் மல்லா.

மாதுசிங் தன் பூனைக் கண்களால் என்னை வியப்பாகப் பார்த்தான். அடுத்ததாக விக்ரம்மல்லா சொன்ன வார்த்தைகள்தான் என்னைத் தரையில் இருந்து தூக்கி வானத்தில் எறிந்தது.

இன்று முத்ல் இவள் என் சொத்து. எனக்கு உரியவள்.

(திருப்பங்கள் தொடரும்...)

## கவிஞர் சினேகனின் புதுமைக் காதல்!

ரிச் இந்தியா டாக்கிஸ் சார்பில் 'உயர்திரு 420' எனும் படத்தை தொழில் அதிபர் சந்திரசேகர் தயாரித்துள்ளார். நாயகனாக கவிஞர் சினேகன் நடித்துள்ளார். இவருக்கு ஜோடியாக தமிழ் சினிமாவின் ஜூனியர் நயன்தாரா என்று அழைக்கப்படும் மேக்னா நடிக்கிறார். படத்தில் சினேகன், மேக்னா இருவரின் காதல் புதுமையானது. 'கண்களால் கைது செய்' படத்தில் நடித்த வசீகரன், எட்டு வருட இடைவெளிக்கு பிறகு முக்கியமான பாத்திரத்தில் நடித்துள்ளார்.

இவர்களுடன் ஜெயபிரகாஸ், ராஜ்கபூர், சிட்டி பாபு, பாஸ்கி, ரமேஷ் கண்ணா, அக்ஸரா, தீபக், அக்ஷயா மற்றும் பலர் நடித்துள்ளார்கள். இப்படத்தின் கதையை எழுதி இயக்கியிருப்பவர் பிரேம்நாத். நகைச்சுவைக்கு ரமேஷ் கண்ணா, பாஸ்கி, தீபக் ஆகியோர் உள்ளனர். சென்னை, பெங்களூரு, மலேசியா என பல இடங்களில் படப்பிடிப்பு நடத்தப்பட்டு மிகவும் உயர்தரத்தில் பிரமாண்டமாக தயாரிக்கப்பட்டிருப்பதாக கூறுகிறார்கள். தயாரிப்பாளர் சந்திரசேகரும் இப்படத்தில் நடித்துள்ளாராம்.



## தயாரிப்பில் கால் பதிக்கும் இசைப்புயல்

தமிழ், தெலுங்கு, இந்தி படங்களுக்கு இசையமைத்து பிரபல இசையமைப்பாளர் என்ற அந்தஸ்தையும் தாண்டி ஒஸ்கார் நாயகனாக வலம் வந்து கொண்டிருக்கிறார் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான். சமீபத்தில் தயாரிப்பு நிறுவனம் ஒன்றை தொடங்கினார். ஒய். எம். மூவிஸ் என்ற பெயரில் தொடங்கப்பட்டிருக்கும் இந்த புதிய நிறுவனத்தின் மூலம் சினிமாக்களை தயாரிக்க திட்டமிட்டிருக்கும் ரஹ்மான், முதலாவதாக தமிழ் படங்களை தயாரிக்கப் போகிறாராம். இதற்காக புது இயக்குனர்களிடம் கதை கேட்கும் பணியை தொடங்கியிருக்கும் அவர், புதுமுகங்களை வைத்தே குறைந்த பட்ஜெட்டில் படங்களை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளாராம்.



## பிடித்த பாத்திரத்தில் நடிக்க ஆசை – டாப்சீ

ஆடுகளத்தில் தனுஷ், வந்தான் வென்றான் படத்தில் ஜீவா, ஆகியோருடன் நடித்தவர் டாப்சீ. தமிழ், தெலுங்கு, மலையாள படங்களில் நடித்து வருகிறேன். டபுள்ஸ் என்ற இரட்டையர் பற்றிய மலையாள படத்தில் மம்முட்டி, நதியா இருவருடனும் நடித்துள்ளேன். தென்னிந்திய வர்த்தக ரீதியிலான படங்களில் நடிக்க விரும்புகிறேன் என்று கூறுபவர், வழக்கமான கவர்ச்சி நாயகியாக நடிக்க மாட்டேன் என்கிறார். முன்னணி நாயகர்கள் நடிக்கும் படங்களில் இணைந்து நடிக்க அழைக்கிறார்கள். ஆனால், எல்லாவற்றையும் நான் ஒப்புக்கொள்வதில்லை. எனக்கு பிடித்தமான பாத்திரங்களில் மட்டுமே நடிக்க விரும்புகிறேன் என்றும் கூறுகிறார் டாப்சீ.



## விறுவிறுப்படையும் பருவகால மோதல்

ஹொலிவுட், பொலிவுட், தெலுங்கு மலையாள படங்களோடு இந்த கோடை பருவகாலத்தில் மோத தமிழ் படங்களும் தயாராகி வருகின்றன. இன்னும் சில தினங்களில் காமெடி, ரொமான்ஸ், பெரிய அக்ஷன் படங்கள் வர உள்ளன. ரசிகர்களை குறித்தே வசூலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இயக்குநர் கே.வி.ஆனந்த் இயக்கியுள்ள 'கோ' படம், பொலிடிகல் திரில்லர் படம். மாஸ் ரசிகர்களை குறி வைத்து எடுத்துள்ளார்கள், ஹரிஸ் ஜெயராஜின் இசையில் பாடல்கள் இரசிக்கும்படியாக இருக்கின்றன. குடும்பமாக வந்து படத்தை இரசிப்பார்கள்.

அதேபோன்று சிம்பு, பரத், அனுஷ்கா, சோனியா அகர்வால், பிரகாஷ்ராஜ், சரண்யா மற்றும் பலர் நடித்துள்ள 'வானம்' படத்தை டைரக்டர் க்ரிஸ் இயக்கியுள்ளார். இதே வரிசையில் பிரபுதேவா இயக்கத்தில் ஜெயம் ரவி, ஹன்சிகா நடித்துள்ள 'எங்கேயும் காதல்' படம், டைரக்டர் விஜய் இயக்கத்தில் விக்ரம், அனுஷ்கா, அமலா பால் ஆகியோர் நடித்துள்ள 'தெய்வ திருமகன்' படம், ஆர்யா-விஷால் இணைந்து நடித்துள்ள டைரக்டர் பாலாவின் 'அவன் இவன்' படம் என ஏப்ரல்-மே மாத நாட்களில் தமிழில் படங்கள் வெளியாகின்றன. தெலுங்கு, மலையாளம், பொலிவுட், ஹொலிவுட் படங்களோடு இந்த தமிழ் படங்களும் ரசிகர்களின் ரசனைக்கு விருந்தாக காத்திருக்கின்றன என்கிறார்கள். தமிழ் படங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் நாளுக்கு நாள் எதிர்பார்ப்பு கூடி வருகிறது என்பது மிகவும் பாராட்டிற்குறிய விடயமாகும்.

## மீண்டும் பிரியங்க

தமிழன் படத்தில் ஜோடியாக நடித் சோப்ரா அப்ப படுதோல்விக்கு பக்கமே வரவில் அவரை மீண்டு வந்திருக்கிறார் இயக்கவிருக்கு செல்வன்' படத் பாத்திரத்தில் ந இன்னொரு மு பாத்திரத்தில் அனுஷ்கா நடிக்கிறார். இவர்கள் போக திடீரென்று படத்தில் சேர்க்கப் பட்டிருக்கும் முக்கியஸ்தர் ராஜ்கிரண்.



# ...சைப்புயல் விஜய்க்கு மறுத்தார் அனன்யா!



முன்னணி நாயகர்களுடன் ஒரு பாட்டிலாவது ஆட வாய்ப்பு கிடைக்குமா? என ஏங்கிக் கொண்டிருக்கும் நடிகைகள் மத்தியில் நடிகை அனன்யா கொஞ்சம் வித்தியாசமானவர்தான். நடிகர் விஜய் நடிக்கும் புதிய படத்தில் நடிக்க அனன்யாவை கேட்டிருக்கிறார்கள். கதை சொல்ல யார் போனாலும் கவர்ச்சிக்கு ரெட்சிக்னல் என்ற கண்டிஷனோடுதான் உள்ளேயே அனுமதிக்கும் அனன்யா, விஜய் படம் என்றதுமே கதை, காட்சி என எதையுமே கேட்காமல் மறுத்து விட்டாராம்.

'விஜயுடன் ஜோடி சேரும் படமென்றால் கண்டிப்பாக பாடல் காட்சிகளிலாவது கவர்ச்சியாக ஆட வேண்டியிருக்கும். என்னால் பாடல் காட்சிகளில்கூட அப்படி தோன்ற முடியாது. பெரிய நாயகன் என ஆசைப்பட்டு ஒப்புக் கொண்டு விட்டு, பின்னர் கவர்ச்சி காட்டமாட்டேன் என்று கூறக்கூடாது.' அதனால்தான் மறுத்தேன், என்று சின்ன விளக்கம் கொடுத்திருக்கிறார் அனன்யா. என் கொள்கைக்கு யாருடன் நடிக்க வாய்ப்பு கிடைக்கிறதோ... அதுவே போதும் எனக்கு என்று கூறும் அனன்யா, ஏற்கனவே கவர்ச்சியை காரணம் காட்டி பல படங்களை மறுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலியானாக்கு 'ரேட்' அதிகமாம்

டைரக்டர் ஷங்கர் இயக்கும் 'நண்பன்' படத்தில் விஜய், ஸ்ரீகாந்த், ஜீவா ஆகியோருடன் நடிக்கிறார் இடையழகி இலியானா. அதேபோன்று ஹிந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளிலும் நடித்துவருகிறார், அண்மையில் தெலுங்கில் 'சக்தி' படத்தில் நடித்திருந்தார், இந்த படம் சரியாக போகாததை சுட்டிக்காட்டி இலியானாவிடம் கேட்டிருக்கிறார்கள். படத்தின் வெற்றி, தோல்விக்கு நான் மட்டுமே முழு காரணம் என்று கூற முடியாது. ஒரு படத்தின் வெற்றி தோல்வி என் கையில் இல்லை. நடிப்பை பொறுத்தவரை நன்றாக நடித்து விட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பேன். சம்பளத்தை கூட்டி கேட்டதாக சொல்கிறார்கள், கெமரா முன் நான் நடிப்பதற்கு உரிய சம்பளத்தைத்தான் கேட்கிறேன், அதைத்தான் கொடுக்கிறார்கள். பொலிவுட் படத்தில் நடிக்க அதிக 'ரேட்' கேட்டதாக கூறுவதிலும் உண்மையில்லை. வேறு எந்த வகையிலும் நான் அதிகமாக எதிர்பார்ப்பதில்லை. முழுக்க,முழுக்க பொலிவுட் படங்களில் மட்டுமே நடிப்பதாகவும் இல்லை. ஹிந்தி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் நடிக்கிறேன் என்று இலியானா புலம்பிவிட்டாராம்.



# ஏ.ஆர்.ரஹ்மான் அதிர்ச்சி நீதிமன்றம் செல்லத் தயார்!

பிரபல இந்தி நடிகை கத்ரினா கைப் நடித்த விளம்பர படம் சமீபத்தில் ரிலீசானது. அதில் ஸ்லம்டாக் மில்லினர் பாடலை பயன்படுத்தி இருந்தனர். இந்த விளம்பரத்தை பார்த்த இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் அதிர்ச்சியடைந்தார். காரணம், பாடலின் முழு உரிமையும் ரஹ்மானிடம்தான் உள்ளது. குறித்த விளம்பரத்தை உருவாக்கியவர்கள் ரஹ்மானிடம் எந்த அனுமதியும் பெறவில்லை.

இதையடுத்து அந்த விளம்பரத்துக்கு எதிராக வழக்கு தொடர ஏ.ஆர். ரஹ்மான் முடிவு செய்துள்ளார். இதுபற்றிய சட்ட விவகாரங்களை கவனிக்கும்படி தனது வக்கீல்களுக்கு உத்தரவிட்டுள்ளார். ரஹ்மான் தரப்பில் இதுபற்றி கூறும்போது, விளம்பர படத்தை தயாரித்தவர்களிடம் எனது வக்கீல்கள் தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டு வருகிறார்கள். விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடவடிக்கை கத்ரீனாவுக்கு எதிரானதல்ல. விளம்பரம் தயாரித்தவர்கள் மீதுதான் என்றனர். கத்ரினாவும் ஏ.ஆர்.ரஹ்மானும் ஏற்கனவே ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிதி திரட்ட அல்பம் ஒன்றில் இணைந்து பணியாற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் தமிழில் பிரியங்கா சோப்ரா

தமிழன் படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடித்த பிரியங்கா சோப்ரா, அப்படத்தின் படுதோல்விக்குப் பின் தமிழ்நாட்டு பக்கமே வரவில்லை. இப்போது அவரை மீண்டும் அழைத்து வந்திருக்கிறார் மணிரத்னம். இவர் இயக்கவிருக்கும் 'பொன்னியின் செல்வன்' படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறாராம் பிரியங்கா. இன்னொரு முக்கிய பாத்திரத்தில் அனுஷ்கா நடிக்கிறார். இவர்கள் போக திடீரென்று படத்தில் சேர்க்கப் பட்டிருக்கும் முக்கியஸ்தர் ராஜ்கிரண்.



# தேன் கிண்ணம்

## மௌனமாக இருக்காதீர்கள்!

கோபம், சண்டை வரும்போது ஆவேசமாக கத்தி சண்டை போடும் தம்பதியர், அதிவிரைவில் மீண்டும் ஒன்று சேர்ந்து கொள்வதும், பிடிக்காத காரணத்தால் பேசாமல் இருக்கும் தம்பதியர் மீண்டும் ஒன்று சேர நாட்களாவதும் கண்கூடாக நாம் பார்க்கும் உண்மை.


ஏனென்றால், மௌனம் என்பது ஒரு கூர்மையான ஆயுதம். அதனை முறையான சரியான விஷயத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். கணவன்-மனைவிக்குள் சண்டை வரும் சமயத்தில் இருவரும் மௌனமானது பெரும் ஆபத்தாகும்.

ஏனென்றால் மௌனமாக இருக்கும்போது, மூளையில் சாத்தான் வந்து அமர்ந்து கொள்ளும். காதலிக்கும் போது நடந்த விஷயங்கள் எல்லாம் நாடகமாகவும், இப்போது இருப்பதுதான் நிஜம் என்றும் எடுத்துக்காட்டும். மேலும் இதுவரை என்னென்ன குறைகள் அநீதிகள் இழைக்கப்பட்டிருக்கிறது என்று கெட்ட விஷயங்கள் மட்டுமே மனதில் திரைப்படமாக ஓடிக்கொண்டிருக்கும்.

மேலும் இருவரும் மௌனமாக இருப்பதால் யார் முதலில் பேச்சைத் தொடங்குவது என்பதில் தற்பெருமை வளர்ந்து வெட்ட முடியாத பெரிய மரமாக மாறிவிடும்.

முதலில் அவர்தான் பேசவேண்டுமென இவரும், இவர்தான் பேசவேண்டுமென அவரும் கொஞ்ச நாள் காத்திருப்பார்கள். இருவரும் பேசாமல் இருக்கும் பொழுது, இனிமேல் அவராக வந்து பேசினாலும், பேசக்கூடாது என்ற நிலைமைக்குப் போய்விடுவார்கள். அதற்குப்பின் சமாதானம் என்பது மிகவும் கஷ்டப்பட்டு அடைய வேண்டிய விஷயமாகிவிடும்.

அதனால் ஏதாவது பிரச்சினை என்றால் திட்டுங்கள், சண்டை போடுங்கள், ஆனால் பேசாமல் மட்டுமே இருக்கவே இருக்காதீர்கள். பேசுங்கள், நிறைய பேசிக்கொண்டே இருங்கள்.



## உடைந்த நிலவும் உறங்காத விழிகளும்...

உடைந்த
நிலவையும
உறங்காத
விழிகளையும்
தேடாதே!

உன்னைத்
தொலைத்த
நாள் முதல்
என் இதயம்
உடைந்த
நிலவாய்
சிதறியது!

மையிட்ட
என் விழிகள்...
மையிருட்டிலும் கூட...
உறங்காத
வழிகளாய்
காத்திருக்கிறது...

உடைந்த
நிலவையும்...
உறங்காத
விழிகளையும்...
தேடாதே!

ஏனெனில்,
நானும்
ஓர் உடைந்த
நிலவுதான்!

ஆஷிகா,
கொழும்பு-12



## நாகரிக நங்கையே...

மேனி தெரிய
நட்டு நடு வீதியில்
கெட்ட கண்கள்
பார்த்துத் தூற்ற
ஒய்யாரமாய் உலாப்போகும்
பூமகளே!

நாகரிகமெனும்
நாமங் கொண்டு
நவனமெனும்
நாணங் கொண்டு
நீ -நடக்கையிலே
ஏராளமான கரங்கள்
கைகொட்டிச் சிரிக்கும்!

பட்டுப் புடவையும்
பாவாடைத் தாவணியுமே
பெண்டிர்க் கழகென இல்லை!

முன்னால் வருபவரை
முகம் சுளிக்க வைக்காமல்
நீ -எது போட்டாலும்
அதுதான் பெண்மையின்
புகழ் கூறும் பெருமையம்மா!

அடக்குமுறை என்று
ஆர்ப்பாட்டம் செய்யாமல்
ஆழமாய் யோசித்தால்
அர்த்தம் புரியும்!

உடற்பாகங்கள
குழறியழ -நீயோ
உவகையோடு இதுதான்
உயர்ரக ஆடையென
அணி செய்து கொள்கிறாய்!

ஆடம்பரத்தாலும்
ஆபாசத்தாலும் ஆகப்போவது
எதுவுமில்லை!

தாய்மையெனும்
தனித்துவம் கொண்ட
பொக்கிஷ பெண்களே!!

ஆடைகளே நமக்கு
அழகான ஆபரணங்கள்!
நாகரீகம் என்று சொல்லி
பெண்மையை இழிவாக்காதீர்கள்!

இராமசாமி ரமேஷ்,
முல்லைத்தீவு.

## வாடிய பூ...

மொட்டொன்று பூப்பெய்து
தேன் இங்கு வடியுது!
காமம் கொண்ட வண்டு ஒன்று
தன் காமப் பசியைத்
தீர்த்துக்கொள்கிறது!
மானம் தாங்க முடியாத (து)
மரணித்துக் கொள்கிறது
தன் பாதடியில்
பூ ஒன்று!

வ.பிரபாஜி
அளவெட்டி.

## இனிப்பான எதிர்காலத்துக்கு...

வேதனத்தைக் கூட்டுவதைவிட
பொருட்களின
விலைகளைக் குறைப்பது மேல்!

தேனொழுகும் பேச்சைவிட
சிறந்த திட்டங்களைச்
செயற்படுத்துவது மேல்!

குற்றங் குறைகளை
கூறிக் கொண்டிருப்பதை விட
குறை மறந்து
சிறப்பான திட்டங்களுக்கு
ஆதரவளிப்பதே மேல்!

கடந்தகால கசப்பான
சம்பவங்களை மீண்டும் மீண்டும்
அலசுவதைவிட நிகழ்கால
நிதர்சனங்களை நினைவு கூர்ந்து
எதிர்காலத்திற்கு ஏற்றபடி
எல்லோரும் சுதந்திரமாய் வாழ
இனிய தீர்வுத் திட்டத்திற்கு
சகல தரப்பினரும்
முன்வருவதே மேல்!

சேனையூரன்-மூதூர் கிழக்கு

## என்னவள்

பால்போல் வதனமிடை
பிறை நெற்றியில்
சிறு திலகம் !
சென்னிறக் கன்னம் மின்ன
மேகலாபரணம் பூண்டிருப்பாள்
என் கண்களையே
பார்த்தாள்
என்னைக் காதலித்தாளோ?!
கண்களைக் காதலித்தாளோ
தெரியவில்லை!
பவளவாயில் ததும்பும்
இசையால் என்
இதயத்தில் சுடர்விட்டவள்
சேல்விழி மண்ணை நோக்க
புன்னகை பூத்த அதரத்தாள்
புரிந்திடா மொழிகள் பேசினாள்
குச்சொழுங்கையில் உள்ள
குமரிதான்-அந்தக்
குடும்பத்தின் கடைக்கு
முதலானவள் – என்
இதயத்தின் சொத்தானவள்
அவள்தான் என்னவள்.

கஜீர்-நெடுந்தீவு.

## அகதி...

சொந்தமிலா தேசத்துள்
சொத்துக்கள் ஏராளம்
பத்திரம் தீட்டுகையில்
காத்திரமான
கேள்விகள் பல...

தேசமில்லா அகதி-நீ
தேறிய சொத்துக்கே
பதில் சொல்லியே
செத்துப் பிழைக்கின்றேன்.

யாழ்.அஞ்சனா,
கல்லுவம்.






# சீதனம் இல்லாவிட்டால் திருமணம் இல்லை

**அன்பு,** அறிவு, அழகு, நல்ல குணம் இருந்தாலும் நகையும், பணமும் இருந்தால் தான் சமுதாயத்திலும், புகுந்த வீட்டிலும் பெண்ணானவள் மதிக்கப்படுகிறாள். எங்கோ ஓரிடத்தில் பெண்ணுக்கு மரியாதை கிடைத்தால் போதுமா? எல்லாப் பெண்களும் மதிப்பும், மரியாதையும் பெறவேண்டுமே. இதுதானே ஒட்டுமொத்த பெண் சமுதாயமும் எதிர்பார்க்கும் விஷயம். காதலித்தவனை கைப்பிடித்து செல்லும்போது வெறுங்கழுத்தோடு சென்றால்,



புகுந்த வீட்டில் மரியாதை கிடைக்காது. வசதியான பெண்ணாக இருந்தால், புகுந்தவீட்டினரின் அன்பும், பாராட்டும் எளிதாக கிடைத்துவிடும். வரதட்சணை கொடுக்காமல் திருமணம் செய்யும் பெண்ணிற்கு, புகுந்த வீட்டில் கௌரவம் கிடைக்குமா?

வரதட்சணை இருந்தால் தான் புகுந்த வீட்டில் மதிப்பு கிடைக்கும். அதேசமயம் படித்த குடும்பங்களை சேர்ந்தவர்கள், பெண்ணிடம் அறிவை மட்டுமே எதிர்பார்க்கின்றனர். பொன், பொருள் இன்றைய உலகில் அவசியம். இது இருந்தால்தான், புகுந்த வீட்டில் மரியாதை கிடைக்கும். படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற வேறுபாடெல்லாம் வரதட்சணைக்கு கிடையாது. எவ்வளவுதான் படித்தாலும், கைநிறைய சம்பளம் வாங்கினாலும் வரதட்சணை கொடுக்க வேண்டும்.


பெண் சிவப்பு நிறமாக இருந்தாலும், கறுப்பாக இருந்தாலும் நகை, பணம் கொடுத்தால் தான் திருமணம். பெண்ணைப் பிடித்திருக்கிறது. ஆனால் வரதட்சணை வேண்டாம் என்று மாப்பிள்ளை பிடிவாதமாக திருமணம் செய்தாலும், புகுந்த வீட்டினர் மதிக்கமாட்டார்கள், அலட்சியப்படுத்துவது இன்று நடந்தேறிக்கொண்டுதான் இருக்கிறது.

ஒரே வீட்டில் மூத்த மருமகள் குறைந்த நகையுடனும், அடுத்த மருமகள் அதிக நகையுடன் வந்தால் இரண்டு பேரையும் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள். இளையவளை தாக்கிப் பேசியும், மூத்தவளை வேலைகளை செய்யச் சொல்லி ஏளனப்படுத்துவர். உறவினர்களிடம் இளையவளை பெருமையாக பேசுவர்.

காதல் திருமணத்திலும் வரதட்சணை எதிர்பார்ப்பு இருக்கத்தான் செய்கிறது. வரவு இருந்தால் தான் நல்ல உறவு இருக்கும். இதை, பெண்ணே தனது பெற்றோரிடம் வலியுறுத்துகிறார். அல்லது பையன், பெண்ணிடம் நகையணிந்து வரச் சொல்கிறார். இங்கே நகைக்கு மட்டுமே மரியாதை. பெண்ணுக்கு இல்லை.

புகுந்த வீட்டில் பெண் மனநிம்மதியுடன் வாழவேண்டுமெனில், மாப்பிள்ளை வீட்டார் கேட்ட வரதட்சணையை முகம் சுளிக்காமல் கொடுத்து விடவேண்டும். நகை குறைவாக கொடுத்தால், மாமியார், கணவரின் கொடுமைக்கு ஆளாக நேரிடுகிறது. நல்ல வாழ்க்கை அமைய வரதட்சணை தேவை. வரதட்சணைக் கொடுமை எக்காலத்திலும் மாறாத வடுவாக எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறது. இது மாற வேண்டும் என்பதே எனது எண்ணப் பாடாகும்.

# பெண் குழந்தைகள் குண்டாக இருப்பது ஏன்?



பருமனாக இருப்பது பெண்களுக்கு மட்டுமல்ல, பெண் குழந்தைகளுக்கும் கூட இந்த நிலை உண்டு. பிறக்கும் போதே, அதிக எடையுடன் மட்டுமின்றி, போகப்போக குண்டாகவே வளரும்.

பெற்ற தாயின் உடல் எடையை வைத்துத்தான் அவர் பெற்றெடுக்கும் குழந்தையின் எடை அமைகிறது. அதனால்தான், கர்ப்பிணிப்பெண்கள், எடை அதிகரிக்கக்கூடாது என்று சொல்வர்.கருத்தரித்த நிலையில், எடை கூடினால், அதனால், குழந்தைக்கும் அந்த உடல் எடை அப்போது கூடாவிட்டாலும், அதன் 20 வயதில் பருமனான அதிகமாகவே வாய்ப்பு இருக்கும் என்கின்றனர் நியூயோர்க் பல்கலைக்கழக மருத்துவ நிபுணர்கள்.

அதற்காக, கருத்தரித்த பெண்கள் எடை போடக்கூடாது என்று சொல்லவும் கூடாது. அப்படி எடை கூடினால் தான், குழந்தை பெறுவதற்கு எந்த சிரமமும் இருக்காது.

ஒரு குழந்தையின் வளர்ச்சி என்பது ஒரு வயது முதல் ஏழு வயது வரை உள்ளதுதான். அப்போது உடல் எடை கூடுவதை கொண்டே, அடுத்து வரும் ஆண்டுகளில் எந்த அளவுக்கு எடை கூடும் என்பதை கணிக்க முடியும்.

இப்போது இளம்வயதினர் பலரும் குண்டாகத்தான் இருக்கின்றனர். அவர்களின் பெற்றோர் ஒல்லியாக இருந்தாலும், இவர்கள் குண்டாவது எப்படி? அவர்கள் சாப்பிடும் உணவு வகைகள் காரணமாக இருக்கலாம். முன்பைவிட இப்போது சத்துள்ள உணவுகள் அதிகமாக இருக்கின்றன.

ஆனால், ஆண்களை விட, பெண்கள் குண்டாவதை தவிர்க்க வேண்டும். அப்போது தான் அவர்களின் குழந்தையை அழகாக வளர்க்க முடியும் என்பது தான் மருத்துவ நிபுணர்களின் கருத்து.

# குளிர்ச்சி தரும் எலுமிச்சை

**எலுமிச்சை காய், பழம், இலை என எல்லாமே மருந்தாகப் பயன்படுகிறது. பசியைத் தூண்டி, நா வறட்சியைப் போக்கும். இயற்கையாகக் கிடைக்கும் விற்றமின் சி, இதில் நிறைய உண்டு. அதுமட்டுமல்லாமல், இரும்புச்சத்து, கல்சியம், மக்னீசியம், மங்கனீஸ் போன்ற சத்துக்களும் இருக்கிறது.**

**வெயில் காலங்களில் வெளியில் சென்று வந்ததுமே பலருக்கு தலைவலி வந்துவிடும். எலுமிச்சம் பழத்தின் தோலை நன்றாக காயவைத்து, பவுடர் போல அரைச்சு வைத்திருங்கள். தலைவலி வரும்போது இந்தப் பவுடரை தண்ணீரில் கரைத்து வலிக்கும் இடங்களில் தடவ வேண்டும். இந்தப் பசை உலரும்போது தலை வலி காணாமல் போய்விடும்.**

**கோடைகாலத்தில் வரும் வியர்க்குருவுக்கு நல்ல மருந்து எலுமிச்சை. எலுமிச்சை சாற்றில் சந்தனத் தையும் சேர்த்துத் தடவ, வியர்க்குரு இல்லாமல் போய்விடும்.**



# வெயில் கால அழகு குறிப்புகள்

**வெயிலில்** அலைந்து திரியும்போது, உடலில் உள்ள வியர்வை துவாரங்கள் பெரிதாகி, தூசி அடைத்துக் கொள்ளும். இதனால் மாசுபடும் அதற்கு நீங்கள் செய்யவேண்டியவை. ரோஜா இதழ், எலுமிச்சை தோல், கடலைப் பருப்பு, மஞ்சள் ஆகியவற்றை ஒரு வாரம் வெயிலில் காய வைத்து அரைத்து மாவாக வைத்துக் கொள்ளுங்கள். தினமும் காலை குளிக்கும்போது உடலுக்குத் தேய்த்துக் குளிக்கலாம்.

*காலை நேரங்களில் சுளீர் வெயில் தலைதூக்கத் தொடங்கிவிட்டது. முட்டி வலி, மூட்டு வலி உட்பட பல உபாதைகளும் நீங்க, இளங்காலை வெயில் மேலே படும்படி உடற்பயிற்சி செய்ய வேண்டும். 10 நிமிடமாவது வெயிலில் காலாற நடந்து விட்டு வாருங்கள்.

*விற்றமின் 'டி' சத்து குறைபாட்டால் நிறைய பேர் அவதிப்பட்டு வருகின்றனர். சூரியன் நம் உடலில் பட்டால் மட்டுமே விற்றமின் 'டி' சத்து கிடைக்கும் உணவு வகைகள் மூலம் விற்றமின் 'டி' சத்து கிடைப்பது மிக மிகக் கடினம். செலவில்லாத முறை. முயன்று பாருங்கள்.



*கோடையில் கண்கள் எளிதில் சோர்ந்து போய்விடுவதால் எரிச்சல் கொடுக்க ஆரம்பித்துவிடும். அதைப் போக்க, இரவில் தூங்கும்முன் கண்களை சுற்றி சுத்தமான விளக்கெண்ணெயை தடவி விடுங்கள். அப்படிச் செய்வதால் கண்கள் குளிர்ச்சி பெறும்.

*குளிக்கும்போது சவர்க்காரத்திற்குப் பதிலாக கடலைமா, தயிரை தேய்க்கலாம். வெந்தயத்தூள், பச்சைப்பயறு மா சேர்த்து உடல் முழுவதும் தேய்த்து ஊறவிட்டு குளியுங்கள். உங்கள் தோல் மென்மையாகிவிடும்.

*கோடை காலத்தில் கண்கள் எளிதில் சோர்வடைந்துவிடும். தவிர கண்ணுக்கு அடியில் கரு வளையமும் விழும். இதற்கு வெள்ளரிக்காய், தக்காளி, உருளைக்கிழங்கு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை சிறிதளவு வட்டமாக நறுக்கி கண்களில் வைத்துக் கொண்டால் கண்களுக்கு குளிர்மை கிடைக்கும். கண்களில் குளிர்மை, புத்துணர்ச்சி இருக்கும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 265**

கேள்வி : எலுமிச்சையில் இருக்கும் சத்துக்கள் எவை?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:
**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 265**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **27.04.2011**
சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

**பரிசுப் போட்டி இல:- 263 இற்கான விடை:- கிட்னி, ஈரல், வயிறு மற்றும் இதர உறுப்பு போன்ற கோளாறுகள்.**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:-கு.கிருஷாந்தி, 74/1 பத்திரகாளி கோவிலடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.**

265
பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
கையொப்பம் : ..............................




புஷ்பராஜ் யோசனையில் ஆழ்ந்தார்.

அதனால் ஐ.ஜி இஸ்மாயில் தன்னிடம் இந்த வேலையை ஒப்படைத்திருக்கிறார். தன்னைப் பற்றிய அவரது கணிப்புத் தவறவில்லை என்று அவருக்கு நிரூபித்தாக

அப்படி ஏதாவது ஒன்று நிகழ்ந்தால் அது இரண்டு நாட்டின் உறவுகளையும் பாதிக்கும். அது மட்டுமன்றி, எல்லா நாடுகளிலும் அவருக்கு ஆதரவாளர்கள் இருக்கின்றனர்." கபூர்பேசிவிட்டு. சுருட்டை ஆழ்ந்து இழுத்துப் புகையை வெளிவிட்டார்.

"நிலைமை தான் எதிர்பார்த்ததைப் போலவே சிக்கலானதுதான்." புஷ்பராஜ் நினைத்தால். 'அப்படியானால், தன்னுடைய பொறுப்பு அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.'

"எத்தனையோ நாடுகளைச் சேர்ந்தவர்கள் இங்கு இருக்கிறார்கள். அவர்களில் யார் நல்லவர், யார் கெட்டவர் என்பது தெரியாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான திட்டங்கள் இருக்கும். எனவே, எந்தச் சந்தர்ப்பத்தில் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. அதனால், எப்போதும் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும். இது நல்லபடியாக முடிவது வரை நிறைய விஷயங்களைத் தியாகம் செய்யவேண்டி இருக்கும்"

வேண்டிய கட்டாயம். இதெல்லாம் முடிவது வரையில் இதில் சம்பந்தப்பட்டுள்ள எவருமே நிம்மதியுடன் இருக்க முடியாது. யார், யாரிடமிருந்து, எப்படிப்பட்ட தகவல்களையெல்லாம் கறக்க முயற்சி செய்வார்களோ... கறப்பார்களோ? யார் கண்டது?

டாக்டர் டிக்சனைக் கடத்திச் செல்லும் திட்டமிட்டிருப்பவர்களில் கங்காபிரசாத்தும் ஒருவர். அவர் சாதாரண மனிதர் அல்ல. அவர் கட்டளைப்படி நடக்க ஒரு கூட்டமே காத்திருக்கிறது. அதுவும் பயங்கரமான கூட்டம். போதாக்குறைக்கு பிளாக்டைகரும் அவருடன் சேர்ந்து கொண்டிருக்கிறான். எனவே, மிகுந்த எச்சரிக்கை தேவை.

"மிஸ்டர் டிக்சனுக்கு உணவு பரிமாறுவது யார்?" புஷ்பராஜ் கேட்டார்.

"அவர் சகோதரியும் அவருடன் இருக்கிறார்."

"ஏன்... அவர் திருமணம் செய்து கொள்ளவில்லையா?"

"இல்லை... டிக்சனைப் போன்றவர்கள் திருமணம் செய்துகொள்வது ஆபத்தை அதிகமாக்கி விடும். மனைவி, மனைவியின் உறவினர் என்று பலவீனத்தின் அளவு அதிகமாகி விடும். மட்டுமன்றி, அவரால் நிம்மதியான ஒரு குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ள முடியாது. அவரைத் திருமணம் செய்யும் பெண்ணும் எந்த நேரமும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பயத்துடன் வாழ நேரிடும்."கபூர் விவரித்தார்.

"நான் ஒருமுறை மிஸ்டர் டிக்சனைச் சந்திக்க முடியுமா?"

"தாராளமாக! அதற்கு என்ன... என்னுடன் வாருங்கள்" கபூர் எழுந்தார்.

புஷ்பராஜ் அவரைப் பின் தொடர்ந்தார்.

அந்த அறையிலிருந்து வெளியேறிய அவர்கள் வராந்தாவில் சற்றுத் தூரம் நடந்து வலது புறம் திரும்பி, மற்றொரு வராந்தா வழியாக வந்து அறை ஒன்றின் வாசலுக்கு முன்னால் நின்றனர்.

கபூர் கதவைத் தட்டினார். அழைப்பு மணியைப் பயன்படுத்தவில்லை. நான்கு முறை தட்டினார். முதல் இரண்டு முறை உடனுக்கு உடனும் மற்ற இரண்டுமுறை சற்றுஅதிக இடைவெளியுடனும் தட்டினார். அது ஓர் அடையாளம் என்று புஷ்பராஜுக்கு விளங்கியது.

பெண்மணி ஒருவர் கதவைத் திறந்தார். முப்பது வயது மதிக்கலாம். நைட் கவுண் எனப்படும் இரவு உடை அணிந்திருந்தாள்.

புஷ்பராஜ் அறைக்குள் நுழைந்ததும் அப்துல்கபூர் அங்கிருந்து கிளம்பிவிட்டார். 'அந்தப் பெண்மணி புஷ்பராஜிடம் உட்காருமாறு சைகை செய்த பிறகு தானும் சோபா ஒன்றில் அமர்ந்தாள். 'புஷ்பராஜுக்கு எதிரில் அமர்ந்திருந்த அந்தப் பெண்மணி தெளிவான ஆங்கிலத்தில் பேசினாள்.

"மேடம், நீங்கள் அவர் சகோதரி என்று நினைக்கின்றேன். உங்களைப் பற்றி நான் தெரிந்து கொள்ளலாமா?" புஷ்பராஜ் மென்மையுடன் கேட்டார்.

"பெயர் டயானா, கெமிஸ்ட்ரியில் டாக்டர்ரேட் வாங்கியிருக்கிறேன்." சன்னமான புன்னகையுடன் அவள் பேசினாள். 'அழகியாகவும் இருந்தாள். பளபளப்பான கண்கள். துடிப்பான கன்னங்கள். கழுத்தில் மிகவும் விலை உயர்ந்த வைரமாலை ஒன்று கிடந்தது.

அதிகமான வெளிச்சம் இல்லாத அந்த அறையிலும் மாலையின் வைரங்கள், நட்சத்திரங்கள் போல் பளபளத்தன.

"மிஸ்டர் புஷ்பராஜ் உங்களுக்கு மிஸ்டர் மார்க்ஸைத் தெரியுமில்லையா?" அவள் கேட்டாள்.

"தெரியும். நாங்கள் ஒரு சில சந்தர்ப்பங்களில் இணைந்து வேலை செய்திருக்கிறோம்."

"ம்... நல்லது. நான் மகத்தான ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறேன். ஒரு பெரிய போரைக் கூட அதன் மூலம் சுலபமாகச் சமாளிக்கலாம். அதைப்பற்றி நாம் இன்னொரு தடவை பேசலாம். இருங்கள்... நான் மிஸ்டர் டிக்சனைக் கூப்பிடுகிறேன்."

டயானா எழுந்தாள்.

(தொடரும்....)

# பூத்த கொடிகள் பூக்களின்றி தவிக்கின்றது



சில பெற்றோர்கள் பிள்ளைகள் மீது கடுமையாகத் தான் இருப்பார்கள் ஏன்? பிள்ளைகள் நலன் கருதியே, மருந்து இருக்குது போடப் போட கசக்கும். ஆனால் கசக்கிற மருந்தால்" நோய் உண்டாகாது. இனிப்பால் நோய் உண்டாகும். ஆக நீங்களே தீர்மானியுங்கள். கசக்கிற மருந்து வேணுமா? இனிப்பு வேணுமா? புலி இரண்டு குட்டிகளை ஈன்று விட்டு இறந்துவிட்டது. ஒரு நாய்க்கு பல குட்டிகள் இருந்தது. அது புலிக்குட்டியையும் சேர்த்து பால் கொடுத்தது. இப்படிப்பட்ட தாய்ப்பாசத்தை மிருகங்களிடமே காண்கின்றோம்.

உயிரோடு இருக்கும் ஒரு மனிதனிற்கு கொள்ளி வைக்கும் செயற்பாட்டிற்கு சம-னா'ன செயற்பாடுதான் எமது மூத்தோரை முதியோர் இல்லத்தில் விடுதல் ஆகும். பூப்போல பிள்ளைகளை வளர்த்து புழுதிப் படிவம் சுமக்கின்றனர். பச்சை மரத்தில் ஆணி தைச்சது தைச்சதுதான். பச்சைப்பிள்ளையின் மனசில் பாசம் வைத்தது வைத்ததுதான். அடிபட்டு, காயப்பட்டுக் கஸ்ரப்பட்டு, கண்ணீர் வடிச்சு, கறையின்றி, குறையின்றி, முறையாக எம்மை வளர்த்தவர்கள் இன்று சிறையில் கிடக்கின்றார்கள்.

பட்டப் பகலில் பாழடைந்த கிணறில் பலர் முன்னிலையில் பிள்ளைகள் முதியோர் இல்லத்தில் விடுகிறார்களே, பாழடைந்த கிணற்றைக் கூட பழகிய கிணறு என்று நினைக்கும் பிள்ளைகளும் உள்ளனர். சகதியைப் போய் சம்பிரதாயம் என்று சொல்லுவதில் நியாயம் இல்லை.

எத்தனையோ தந்தையர்கள் சுரங்கத்திற்குக் கீழே கல்லுடைத்துத் தனது பிள்ளைகளை வளர்த்திருக்கிறார்கள். எத்தனையோ தந்தையர்கள் எத்தனையோ மேல்மாடிக் கட்டடங்களிற்கு மேல் நின்று வேலை செய்கிறார்கள். எத்தனையோ தந்தையர்கள் மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள், யாவரையும் பிரிந்து வெளிநாட்டிற்குச் சென்று உழைக்கிறார்கள். எத்தனையோ தந்தையர்கள் கடலிற்குச் சென்று தொழில் செய்து பிள்ளைகளை வளர்க்கின்றனர். எத்தனையோ தந்தையர்கள் விவசாயம் செய்து தமது பிள்ளைகளை வளர்க்கின்றார்கள். எத்தனையோ தந்தையர்கள் கூலி வேலை செய்து தமது பிள்ளைகளை வளர்க்கின்றனர்.

இவ்வாறான பெற்றோர் நெற்றிவியர்வை சிந்தி இரத்தத்தை வேர்வையாக்கிக் கஸ்ரங்கள், பயம் யாவற்றையும் தூக்கியெறிந்து விட்டுத் தமது பிள்ளைகள் நாளை உயர்ந்துநிற்க வேண்டும் என்பதற்காக அவர்கள் இப்படியெல்லாம் செய்ய, பிள்ளைகளோ செய்ந்நன்றி மறந்து எத்தனையோ பெற்றோரை முதியோர் இல்லத்திற்கு அனுப்பிவிடுகின்றனர்.

பிள்ளைகளோ, மனைவி இருக்குது என்றும், மனைவி கணவன் இருக்குது என்றும் அவர்களை ஒதுக்குகின்றனர். இந்த வானம் இருக்குது நிலா இருக்குது என்பதற்காக நட்சத்திரங்களை வேண்டாம் என்று சொல்லுவதா? சொகுசு வாழ்க்கைக்காக பிசாசு வாழ்க்கையல்லவா வாழ்கின்றோம்?

இன்று எத்தனையோ பெற்றோர்கள் பிச்சைப் பாத்திரத்தோடு, கடைத்தெருக்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், மூலை முடுக்குகளில் நின்று வேதனையோடு தட்டுக்களை நீட்டுகின்றனர். பெற்றோர்கள் அமைதியாக இருந்தால் மட்டும்போதாது, சந்தோசமாகவும் இருக்கவேண்டும்.

உலகில் உயிர்கள் பிறப்பது சந்தோஷமாக வாழ்ந்து விட்டுப் போவதற்குத்தான். இந்த உலகம் அமைதியாக இருக்க வேண்டும் என்று இயற்கை தீர்மானித்திருந்தால் இறைவன் நினைத்திருந்தால் காடு, மலை, கடல் என்பவற்றுடன் இயற்கைப் படைப்பு நின்று போயிருக்கும். அவ்வாறு நிற்கவில்லையே!

உயிர்கள் பிறந்த பிறகுதான் உலகம் உவகையுற்றது. படைப்பின் சிறப்பு உயர்ந்துநின்றது. மனங்கள் இயங்கத் தொடங்கியபோதுதான் கடவுள் உச்சத்தைத் தொட்டார். மகிழ்ச்சி பிறந்தது. பணத்தாலோ, பிரபல்யத்தாலோ, அதிகாரத்தாலோ உயர்ந்த வாழ்க்கையை அமைத்துவிட முடியாது.

**நெற்றிவியர்வை சிந்தி இரத்தத்தை வேர்வையாக்கிக் கஸ்ரங்கள், பயம் யாவற்றையும் தூக்கியெறிந்து விட்டுத் தமது பிள்ளைகள் நாளை உயர்ந்துநிற்க வேண்டும் என்பதற்காக அவர்கள் இப்படியெல்லாம் செய்ய, பிள்ளைகளோ செய்ந்நன்றி மறந்து எத்தனையோ பெற்றோரை முதியோர் இல்லத்திற்கு அனுப்பிவிடுகின்றனர்.**

**ஜெயம் கிறிஸ்துராசா–வவுனியா**

பட்டம் பதவி மாலை மரியாதை ஆட்பலம் அதிகாரம் என்பவற்றால் சாதிக்க முடியாததை அன்புச் சிந்தனைகளால் சாதிக்க முடியும் என்று நினைத்தார் புத்தர். அரசானாக இருந்திருந்தால் புத்தரைப் பற்றி இங்கு யார் பேசப்போகிறார்கள். யார் பேணப்போகிறார்கள். நல்ல எண்ணங்களை நெஞ்சில் வளர்த்தார். பிறருக்கு ஊட்டி தானும் உயர்ந்தார். இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகள் கழித்தும் பலகோடி மக்களை அவர்களின் நல்ல சிந்தனைகள் வாழ்விக்கின்றன. யேசு மறைந்து இரண்டாயிம் வருடங்கள் ஆகவிட்டன. அவரது எண்ணங்கள் மறைந்தனவா?

(தொடர்ச்சி அடுத்த வாரம்)






# ஆரோக்கியமான வாழ்வுக்கு!


ஜெர்மன் நாட்டு நிபுணர்கள் குழு ஒன்று நடத்திய நுணுக்கமான ஆய்வின் பயனாக, குறும்புத்தனமான ஆண்களின் இரசனையை ஊக்குவிக்கும் வகையிலான முடிவு கிடைக்கப் பெற்றுள்ளது. பெண் அதாவது, இந்த ஆய்வின் முடிவாக, பெண்களின் மேலழகை அடிக்கடி இரசித்து வருகின்ற ஆண்களுக்கு சிறந்த ஆரோக்கியம் நீடிக்கும் என்று கூறுகின்றது. இரத்த அழுத்தம், இதயக் கோளாறுகள், மன அழுத்தங்கள் போன்ற நோய்களில் இருந்து தப்புவது சாத்தியமாம்.

கடந்த 05 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில், 500 ஆண்கள் ஆய்வு செய்யப்பட்டனர். அரைவாசிக்கும் அதிகமானோர் பெண்களின் மேலழகை இரசிக்கின்றமைக்கு அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் பெண்களின் மேலழகை நோக்கவே கூடாது என்று தடுக்கப்பட்டனர். பெண்களின் மேலழகை இரசிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் ஏனையோரைக் காட்டிலும் சுகதேகிகளாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. நாளாந்தம் குறைந்தது 10 நிமிடங்களாவது ஒவ்வொரு ஆணும் குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்டோர் பெண்களின் மேலழகை இரசிக்கின்றமை ஆரோக்கியத்துக்கு சிறந்தது என்று பரிசோதனையின் முடிவில் சிபாரிசு செய்யப்பட்டு உள்ளது.

ஜெர்மன் நாட்டு நிபுணர்கள் குழுவிற்கு அந்த நாட்டின் கலாச்சார எல்லைகள் இச் சிபாரிசிற்கு பச்சைக் கொடி காட்டியுள்ளது. இது வெறுமனே தகவலுக்கும் சுவாரசியத்திற்குமாக மட்டுமே இங்கு தரப்படுகின்றது. நம்ம நாட்டுக் கலாச்சாரத்தின்படி மார்பழகை இரசித்தால் மாதர்குலத்தின் தர்மஅடி நிச்சயம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

# முத்தம் என்றால் சித்தம் கலங்கும்

முத்தம் என்ற உணர்வுபூர்வமான விசயத்திற்கு பெண்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தை ஆண்கள் கொடுப்பதில்லை என அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. பெண்கள் முத்தத்தை



தங்கள் தாம்பத்திய உறவின் ஒரு அங்கமாகக் கருதுகின்றனர். காதலை அர்த்தப்படுத்திக்கொள்ளவும், தங்கள் நீண்டகால உறவினை மாறாத கிளுகிளுப்புடன் வைத்துக் கொள்ளவும் அதன் நிலைப்பாட்டை மெருகேற்றிக் கொள்ளவும் முத்தத்தையே விரும்புவதாக கூறப்படுகிறது.

ஆனால் முத்தம் என்பது தம்பதியர்களின் அல்லது காதலர்களின் சந்தோஷத்திற்காகவும் உணர்வுகளைப் பரிமாறவும் பயன்படுகிறதே தவிர, முத்தம் என்பது நீண்ட கால உறவினைப் புதுப்பிக்க பயன்படும் ஒன்றாக இல்லை. ஆசை அதிகரிக்கும் போது ஒரு அடையாளமாக அது வெளிப்படுகிறது. ஆண்களும் பெண்களும் முத்தத்தை மிகவும் ரசிக்கிறார்கள் என்றாலும் பெண்களே அதற்கு ஒரு ஆத்மார்த்தமான அர்த்தத்தை கற்பிக்கிறார்கள். முத்தமே இல்லாமல் வாழ்வியலின் உச்சத்தைக் கூட ஆண்களால் எட்டிவிட முடியும். ஆனால் பெண்களுக்கு முத்தம் என்பது இன்றியமையாதது என்பது ஆய்வின் முடிவு. எனவே, ஆண்களே புரிந்து கொள்ளுங்கள், உங்கள் இணையை, வாழ்க்கையின் துணையை நேரம் கிடைக்கும் போதெல்லாம் முத்த மழையால் நனைத்திடுங்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி முத்தெடுத்திடுங்கள்.

# பித்தக்கற்கள் யாருக்கு வரும்?

**பித்தக்** கற்களின் பெரும்பகுதி பல கற்துகள்களால் ஆனவைதான். கொலஸ்ட்ரோல், கல்சியம், கார்பனேட், பிலிருபினேட் போன்ற கலவையின் கலவையாகத்தான் இருக்கின்றன.

பித்தக்கற்கள் ஏன், யாருக்கு ஏற்படுகின்றன தெரியுமா? உடல்பருமனாக இருப்பவர்களுக்கு, பரம்பரை காரணமாக கிட்னி, கல்லீரல் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கருத்தடை மாத்திரைகள் அதிகமாகச் சாப்பிடுபவர்களுக்கு, இரத்தச்சோகை நோய் இருப்பவர்களுக்கு, சிறுகுடல் பாதையில் ஏற்படும் வியாதிகள் காரணமாக, போன்ற காரணங்களால் பித்தக்கற்கள், அடிக்கடி விரதம் இருப்பது போன்றவை வருவதற்கான வாய்ப்பு உண்டாகும்.

அதாவது அந்தந்த நேரத்துக்கு போதுமான உணவு கிடைக்காதபோது, பித்தநீர் அளவுக்கு அதிகமாகச் சுரந்து, கற்களாக உறைந்துவிடும் அபாயம் இருக்கிறது.

தீவிர உணவு இருக்கும் இளம் பெண்களுக்கும் பித்தப்பையில் கற்கள் உண்டாவதன் காரணம்.

பித்தக் கற்களின் அறிகுறிகள் என்ன?

விதவிதமான வலிகள் ஏற்பட்டு, மாரடைப்பு வலியோ என்று கூடப் பயம் ஏற்படும். மார்பு எலும்புக்கும் தொப்புளுக்கும் இடையே வலிக்கும். வயிற்றின் மேற்புறம் தோன்றும் வலி, முதுகுப்பக்கம், ஏறி, வலது தோள்பட்டையில் கடுப்பெடுக்கும். வாந்தியும் குமட்டலும் அதிகமாக இருக்கும்.

ஒரு சிலருக்கு, குண்டூசியின் தலை அளவுக்குக் கூட வலி இருக்காது. ஆனால் பாதிப்புகள் நீண்டு வளர்ந்துகொண்டே இருக்கும்.

சத்திர சிகிச்சைதான் மட்டும்தான் தீர்வா?

இல்லை, பித்தப்பைக் கற்களைக் கரைப்பதற்கென்றே மருந்துகள் உள்ளன. சில சமயம் பித்தநீர்ப் பைக்குள் அதிர்வலைகளைப் பாய்ச்சி, கற்களைப் பொடியாக்கி, மலத்துடன் வெளியேற்றிவிடலாம். ஆனால், இந்த முறை கணையத்தில் வீக்கம், பித்தப்பையில் அழற்சி உள்ளவர்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் ஏற்றதல்ல.

லேப்ராஸ்கோப்பி எனப்படும் நுண்துளை அறுவை சிகிச்சை முறையில் பித்தக்கற்களை வலியின்றி, மிகச் சுலபமாக நீக்கிவிடும் வசதி உள்ளது. சில சமயம் குடல் ஒட்டுதல் அதிகம் இருந்தாலோ, பொது நாளத்தில் கட்டி, கல் இருந்தாலோ, சத்திரசிகிச்சை தேவைப்படலாம். பித்தப்பைக் கற்களை நீக்காவிட்டால் மஞ்சள் காமாலை நோய் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

# அன்பை மேம்படுத்தும் விளையாட்டு

**அளவிற்கு** அதிகமாக செலுத்தப்படும் அன்புதான் தாம்பத்தியத்தை முழுமைப்படுத்தி, அதை திருப்திக்குரியதாக மாற்றுகிறது. அதனால் தம்பதிகள் தங்களிடம் இருக்கும் சின்னச்சின்ன பிணக்குகளை மறந்து சிரித்துப் பேசி அன்பை மேம்படுத்திக் கொண்டே ஆடுகளத்திற்குள் நுழைய வேண்டும்.

தாம்பத்தியத்தை தங்களுக்கு பிடித்த நல்ல விளையாட்டாக எடுத்துக்கொண்டு, அதன்மீது ஆர்வம் செலுத்தி, மனதை ஒருமுகப்படுத்தி விளையாட்டுத்தனமாகவே அதில் ஈடுபட வேண்டும்.



இந்த விளையாட்டு வெற்றி, தோல்வி, திருப்தி போன்ற அனைத்துக்கும் அப்பாற்பட்டதாக அன்பை மட்டுமே பிரதானமாகக் கொண்டதாக அமையவேண்டும்.

நித்திரை என்பது ஒரு நாள் முழுக்க மனதும்- உடலும் அனுபவிக்கும் பரபரப்பைத் தீர்ப்பது. நேற்றுதான் தூங்கியிருக்கிறோமே, அதனால் இன்று தூங்கவேண்டாம் என்று யாரும் கருதுவதில்லை. தினமும் தூங்கித்தான் ஆக வேண்டும் என்பது கட்டாயம். அதுபோல தாம்பத்திய விளையாட்டுக்களை நினைக்கக்கூடாது. தூக்கத்திற்கு முன்னால் ஏற்படுத்திக்கொள்ளும் பொழுதுபோக்கு ஆட்டமெனக் கருதிவிடக்கூடாது. தம்பதிகளிடையேயான தனிமையில் இனிமை காணும் செயற்பாடானது, ஏதோ செய்யப்பட வேண்டிய கடமை என்ற நிலையிலும் இருந்து விடக்கூடாது.

இருவரையும் நித்திரைக்கு கொண்டு செல்லும் மருந்தாகவும் அதை கருதிவிடக்கூடாது. ஏதோ இதுவும் ஒரு வாழ்வின் அத்தியாவசிய தேவை என்ற மனநிலையில் கடமைக்காக ஆட்டத்தை ஆரம்பிக்கவும் கூடாது. ஆட்டத்திற்கு நீங்கள் இருவரும் தயாராக இருக்கும் நாளில் காலை யில் இருந்தே உங்கள் நினை வில் அந்த இன்பம் குடிகொண்டு இருக்கட்டும். அதை நினைவில் வைத்துக்கொண்டே உற்சாகத்தோடு வேலைகளைப் பாருங்கள். அன்று இரவு உணவை சற்று முன்பாகவே முடித்துவிட்டு, வேலைகளை எல்லாம் செய்து முடியுங்கள். வழக்கமாக கணவனும் - மனைவியும் பேசித் தீர்க்க வேண்டிய விஷய ங்களை எல்லாம் பேசிவிட்டு, அன்போடு, ஆவலோடு ஆட்டத்தை ஆரம்பியுங்கள். ஆரம்பித்த பின்பு கவனத்தை திசை திருப்பும் பேச்சு, சிந்தனை எதுவும் தேவையில்லை. உடல், மனது இரண்டையும் உற்சாகப்படுத்தவும்- அன்பை மேம்படுத்தவும் இது அவசியம் என்பதை உணர்ந்து ஆர்வமுடன் ஆட்டத்தை விறுவிறுப்பாக்குங்கள்.

# மாரி மழை பொழிகிறது

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நிறைவடைந்து விட்டன. 28 வருடங்களுக்குப் பின் இந்திய அணி வெற்றிவாகை சூடிற்று. பல தேசிய அணிகளின் கண்களில் கண்ணீர் இந்திய அணியின் கண்களில் சிறிது வித்தியாசமாக ஆனந்தக் கண்ணீர் அதோடு இரண்டாம் திகதி இரவு தொடங்கிய மழை இன்னும் இந்தியாவில் ஓயவில்லை. அதுவே பரிசு மழை. பிரமிப்பு, வியப்பு என்ற வார்த்தைகளின் உணர்ச்சி வெளிப்பாடு என்ன என்பதை இம்மழையில் நனைந்தால்தான் உணரலாம்.

உலகக்கிண்ணம் வென்றவுடனேயே ஒவ்வொரு வீரர்களுக்கும் ஒரு கோடி இந்திய ரூபாய் பரிசென்று BCCI அறிவித்தது. இது தவிர பதக்கங்கள் கௌரவ கலாநிதிப் பட்டங்கள் காணிநிலங்கள், வீடுகள், பணப் பரிசு என்று தொடர்கின்றன முடிவில்லாமல்.




சுரேஷரெய்னாவும், பியூஸ்சாவ்லாவும் உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். அம்மாநில முதலமைச்சர் மாயாவதி தலா பத்து இலட்சம் இந்திய ரூபாய்களை இருவருக்கும் மாநிலம் சார்பாகக் கொடுத்துள்ளார்.

மறுபுறம் டெல்லியின் பிரதம அமைச்சர் ஷீலா டிக்சிட் அம்மையார், இந்திய அணித்தலைவர் டோனிக்கு 20 மில்லியன் ரூபாயும், டில்லி வீரர்கள் நால்வருக்கும் தலா 1 மில்லியன் ரூபாயும் பணப் பரிசில்கள் வழங்கியுள்ளார். கர்நாடக அரசு தன் பங்கிற்கு ஒவ்வொரு வீரருக்கும் மிகப் பிரபலமான பகுதி யில் காணி நிலங்களை ஒதுக்கியுள்ளது. இந்திய ரயில்வே சும்மா இருக்குமா என்ன, ஒவ்வொரு வீரருக்கும் வாழ்நாள் முழுவதும் 1 ஆம் வகுப்பு ரயில் பயணத்துக்கு ( இரண்டுபேர்) இலவச ரிக்கெட் என்று அறிவித்துள்ளது.

அடுத்து தோனி மற்றும் நான்கு வீரர்கள் Air Indiaவின் உயர்தர ஊழியர்கள் உடனடியாகவே இன்றும் உயரமான பதவிகளை எயார் இந்தியா இவர்களுக்குக் கொடுத்துள்ளது.

மறுபுறம் தென்கொரியா கார் உற்பத்தி நிறுவனம் இந்தியாவில் இருந்து அவர்கள், வீரர்கள் அத்தனை பேருக்கும் ஒவ்வொரு கார் பரிசாகக் கொடுப்பதாக அறிவித்துள்ளது.

இந்திய வீரர்களின் வேலை விரும்பிய நிறத்தைத் தெரிவு செய்வதாக மட்டுமே இருக்கும். இன்னொரு கார் கம்பனியாகிய ஜேர்மனியின் Audi கம்பெனி ஆட்டத் தொடர் நாயகன் யுவராஜ்சிங்கிற்கு மிகவும் பெறுமதி வாய்ந்த ஆடம்பரக்கார் ஒன்றைப் பரிசாக அறிவித்துள்ளது. இப்படியாக எழுதிக்கொண்டிருக்கையிலேயே பட்டியல் இன்னும் நீண்டிருக்கும்.

இது ஒரு புறம் இருக்க ஜார்கண்ட் மாநி லம் தோனிக்கு இலவசமாக தான் விரும்பிய இடத்தில் கிரிக்கெட் அக்கடமி அமைக்க காணி நிலம் தருவதாக உறுதியளித்துள்ளது. எந்த இடத்தில் எத்தனை ஏக்கர் வேண்டும் என்பதை டோனி அறிவித்தால் போதுமானது என்று ஜார்கண்ட் மாநில அரசு அறிவித்துள்ளது.

இப்படியாக இந்திய வெற்றி அணியின் வீரர்கள் பரிசு மழையில் நனைந்து கொண்டே இருக்கின்றார்கள். அவர்கள் பட்ட கஸ்டத்துக்கும் தம் நாட்டுக்கு ஏற்படுத்திக்கொடுத்த பெருமைக்குத் இந்தப் பரிசுகள் காணுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?

## விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

# இது நல்ல சிந்தனை



**உலகக்** கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் முடிவடைந்த நிலையில், சற்றுத் திரும்பி பங்கு கொண்ட பதின்னான்கு அணிகளையும் பார்த்தால் எல்லோருமே ஏதோ ஒரு ஆட்டத்தில், அல்லது அணிகளாகவோ ரசிகர்கள் மனதில் விதைத்து விட்டுச் சென்ற இன்பமான பதிவுகள் அதிகம். அந்தவகையில் பார்த்தால் சாஹிட் அப்ரிடியின் பாகிஸ்தான் அணி ஏற்படுத்திய உணர்வுகள் மிகவும் அதிகம் என்றே தோன்றுகிறது. ஏனெனில் ஏதோ இவர்களும் இருக்கிறார்கள் என்று வந்தவர்கள் எவ்வளவு உச்சத்தில் சென்று முடிந்தார்கள் என்பதை இலட்சக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்கள் நன்கறிவார்கள்.

சாஹிட் அப்ரிடி எப்போதும் வெளிப்படையாகவே பேசுபவர். எல்லாரும் போலல்லாது ஒரு அணித்தலைவராக நான் தவறு செய்துவிட்டேன் என்று மனம் வருந்திக் கூறியிருக்கிறார். அதாவது அரைஇறுதி ஆட்டம் பற்றியே அவர் பேசுகிறார்.

இறுதி ஆட்டத்தில் இந்திய அணித்தலைவர் தோனி செய்ததை நான் செய்திருக்க வேண்டும். அதாவது இறுதி ஆட்டத்தில் வழக்கத்துக்கு மாறாக முன்னதாகவே களமிறங்கிய தோனியின் சாமர்த்தியம் வெற்றி அளித்தது. இதேபோல அரை இறுதிப் போட்டியில் முன்வரிசையில் களமிறங்கி இருந்தால் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகவே இருந்திருக்கும். ஏனெனில் பின் வரிசையில் மிகவும் அனுபவம் வாய்ந்த அப்துல்ரசாக் இருந்தார்.

நிலைமை சீராகச் சென்று கொண்டிருந்தால் பின் நிகழ்வுகளை அப்துல் ரசாக் சமாளித்திருப்பார். இந்தியா 260 ஓட்டங்கள் பெற்ற நிலையில் எங்களுக்கு நல்ல சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் என் தவறால் எல்லாம் தொலைந்து போயிற்று. உமர் அக்மல் ஆட்டம் இழந்ததுமே எனது நம்பிக்கை கைவிட்டுப் போயிற்று. எனவே முழுத்தவறும் என்னுடையது என்று ஏற்றுக்கொள்ளும் அப்ரிடி, தான் 21 விக்கெட்டுக்கள் சரிந்து சாஹீர் கானுடன் சமநிலைக்கு வருவேன் என்று எதிர்பார்க்கவில்லை என்றும் கூறுகிறார். நான் ஒரு மிகச் சிறந்த அணித்தலைவர் அல்ல, ஆனால் என்னால் இயன்றதைச் செய்தேன். 2015 உலகக் கிண்ணப் போட்டிகளின் முன் 2012 T20 உலகப் போட்டிகள் வருகின்றன. இதில் தான் உடனடிக்காரணம் செலுத்த வேண்டும். இதேவேளை மூத்த வீரர்களைச் சகட்டு மேனிக்கு விலக்குவதற்கு தான் ஆதரவில்லை என்றும் கூறுகிறார். மூத்த வீரர்களுக்கு ஓய்வு அவசியம். அதன் பின் அவர்களையும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அதோடு புதிய இரத்தமும் பாய்ச்சப்பட வேண்டும் என்று முடிக்கிறார். எதுஎவ்வாறாயினும் சர்வதேச கிரிக்கெட்டில் தாங்கள் மிகப் பெரிய சக்திதான் என்பதை உலகக் கிண்ணப் போட்டிகளில் நிரூபித்திருக்கிறார்கள் பாகிஸ்தான் அணியினர். அந்த அணியின் தலைவர் சாஹிட் அப்ரிடி பாராட்டுக்கு உரியவர்.

# தங்கமகன்


**2012** லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் நெருங்கி வரும் வேளையில் மெல்ல மெல்ல தடகளப் போட்டிகள் சூடுபிடிக்க ஆரம்பிக்கின்றன. அதுவும் கூடுதலான கவனத்தைக் கவர்வது 100மீற்றர் குறுந்தூர ஓட்டமாகும். உலகத்தின் வேகமான மனிதன் யார் என்பதைத் தீர்மானிக்க இப்பொழுதே களம் காண்கிறார்கள் மூவர். ஒருவர் உசைன் போல்ட். இன்னொருவர் அஸாபாபவல். மூன்றாமவர் அமெரிக்காவின் டைன்கே. அநேகமாகஇம்மூவரில் ஒருவரே ஒலிம்பிக் சாம்பியனாகும் வாய்ப்புள்ள வேளையில் முன்னோடியாக வைத்துப் பார்க்கப்படுவது டயமன்ட் ரீக் போட்டிகளாகும். இவ்வருடத்தில் நடைபெறவுள்ள பதின்னான்கு போட்டிகளும் இம்மூவருக்கும் தம்மை நிலைநிறுத்தும் போட்டிளாக அமையும். அடுத்து பர்மிஸ்ஹாமதில் நடைபெறவுள்ள டயமன்ட் லீக் போட்டிகளில் முன்னாள் உலக சாதனை நேர வீரன் அஸாபாபவலும் முன்னாள் சாம்பியன் டைசன்கேயும் சந்திக்க இருக்கிறார்கள். கடந்த வருடம் .02 செக்கன் நேர வித்தியாசத்தில் டைசன் கே, அஸாபாவலை வெற்றிகொண்டார். இதற்குப் பதிலை பேர்மிஸ்காமில் அஸாபாபவல் கொடுக்கக் கூடும். மேலும் உசைன் போல்ட் கலந்துகொள்ள இயலாத நிலையில் இவ்விருவருக்கும் இடையில்தான் முதல் இரண்டு இடங்களுக்குமான போட்டி இருக்கும்.




இதையடுத்து மே 26 ஆம் திகதி ரோம் மயமன்ட் லீக் தடகளப் போட்டியில் உலக, மற்றும் ஒலிம்பிக் சாம்பியன் உசைன் போல்ட், டைசன் கேயைச் சந்திக்கவுள்ளார். தொடர்ந்து ஜூன் 11 ஆம் திகதி நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள போட்டி மிக முக்கியமானது. இங்கு மூன்று வீரர்களுமே, யார் வேகமான மனிதன் என்பதை நிரூபிக்க களம் இறங்குவார்கள். ஆனால் அஸ்ரபாபவல் தான் ஆச்சரியங்களை நிகழ்த்துவேன் என்று கூறியுள்ளார். பீஜிங் ஒலிம்பிக்ஸ் (2008) 4x100 அஞ்சலோட்ட தங்கம் வென்றவர் அஸாபா. 2006 இல் கேட்ஸ்கெட் போட்டிகளில் 9.77 செக்கன்களில் 100 மீற்றர் ஓடிச் சாதனை புரிந்தவர் இவர்.




தற்போதைக்கு இம்மூவருள் அஸாபா பவல் கூடுதல் கவனத்துக்கு உரியவராக இருக்கிறார் என்பது தடகள விமர்சகர்களின் கருத்து. ஆனாலும் மற்ற இருவரும் இதேயளவு திறமை கொண்டவர்களே இப்போது நடைபெறப்போகின்ற 100 m ஓட்ட நிகழ்வுகள் இம்மூவரையும், தம்மைத்தாமே தீர்மானித்துக் கொள்ளவும் மற்றைய இருவரின் பலம் பலவீனங்களை அளந்துகொள்ளவும் உதவும். ஆனால் இலக்கு லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் தான். அந்த உலகமே வியக்கப்போகும் நாளில் ஒரு செக்கனிலும் குறைந்த நேர இடைவெளியில் இம்மூவரில் ஒருவர் ஒலிம்பிக் தங்கப்பதக்கத்தைப் பெறப்போகிறார். யார் அந்தத் தங்கமகன்? யார் அறிவார்?



## மனதுக்கு நிம்மதி



# மன்னிப்பின் மகத்துவம்!

**எதிர்மறை உணர்வுகளிலிருந்து எழுகிற அலைகள் நோய்களை உருவாக்க வல்லவை. தண்ணீரை அடிப்படையாகக் கொண்டே ஆவியும் எழுகிறது. ஐஸ்கட்டியும் உருவாகிறது. அதுபோல, உங்கள் உணர்வுகளின் வெளிப்பாடாகவே உங்கள் உடலும் மனமும் இருக்கிறது. ஒருவரை மன்னிப்பதால் மனதிலிருக்கும் எதிர்மறை எண்ணங்கள் அகற்றப்படுகின்றன. அதனால் உங்கள் ஆரோக்கியமும் முகப்பொலிவும் கூடுகிறது.**

**தவறு** செய்பவர்களையும், துரோகம் செய்பவர்களையும் நாம் மன்னிக்கின்றபோது அவர்களுக்கு நன்மை நிகழ்கிறது என்றுதான் பொதுவாக எண்ணுகிறோம். ஆனால், உண்மையில், மன்னிக்கப்படுபவர்களைவிட, மன்னிப்பவர்களே நன்மை அடைகிறார்கள். மற்றவர்களை மன்னிக்கும்போது நமக்கு என்னென்ன நன்மைகள் நிகழ்கின்றன என்று பார்ப்போமா?

ஒருவர் செய்த தவறு உங்களை உறுத்துவதால்தான் அவர்மேல் கோபம் வருகிறது. அவரை மன்னிக்கும்போது உங்கள் மனம் லேசாகிறது. உங்கள் புன்னகை, தடையில்லாமல் பொங்குகிறது. ஆறிய காயத்தின் சுவடே காலப்போக்கில் காணாமல் போவதுபோல், கோபம் என்ற தழும்பின் தடயமே அற்றுப்போகிறது. கோபத்தில் இருந்த நாட்களைவிட கூடுதலாக வாழ்வில் வளங்களையும் வெற்றிகளையும் நீங்கள் பெறுகிறீர்கள்.

எதிர்மறை உணர்வுகளிலிருந்து எழுகிற அலைகள் நோய்களை உருவாக்க வல்லவை. தண்ணீரை அடிப்படையாகக் கொண்டே ஆவியும் எழுகிறது. ஐஸ்கட்டியும் உருவாகிறது. அதுபோல, உங்கள் உணர்வுகளின் வெளிப்பாடாகவே உங்கள் உடலும் மனமும் இருக்கிறது. ஒருவரை மன்னிப்பதால் மனதிலிருக்கும் எதிர்மறை எண்ணங்கள் அகற்றப்படுகின்றன. அதனால் உங்கள் ஆரோக்கியமும் முகப்பொலிவும் கூடுகிறது.

மிகக் கடுமையான விதிமுறைகளோடும் கோபத்தோடும் வாழ்கிற மனிதர்களின் மனதிலிருந்து எழுகிற அலைகள், எல்லோரையும் எட்டி நிற்கச் செய்பவை. முள்ளம்பன்றியின் முட்கள்போல் அவை சிலிர்த்தெழுந்து வறட்டுப் பிடிவாதத்தின் நுனிகளை நீட்டுபவை. உங்கள் மனம் மலர்ந்து, அதில் மன்னிப்பு என்கிற மணம் பரவுகிறபோது, அந்த நறுமணம் அனைவரையும் ஈர்க்கிறது. காரணம் தெரியாமலேயே பலரும் உங்கள்பால் ஈர்க்கப்படுகிறார்கள். அனைவராலும் விரும்பப்படுகிற மனிதராக நீங்கள் ஆகிறீர்கள்.

ஒருவரின் தகாத செயல் நடந்து முடிந்து நீண்ட காலம் ஆகியிருக்கலாம். ஆனால் அதுகுறித்த உங்கள் அதிர்ச்சியும், மனப்பொருமலும் தொடர்ந்து கொண்டே போகிறபோது நீங்களே துன்பத்திற்கு ஆளாகிறீர்கள். யாரோ செய்த தவறுக்கு நீங்கள் துன்பம் அனுபவிப்பது என்ன நியாயம்? அந்த மனிதரை மன்னிக்கிறபோது உங்களின் துன்பம் முடிவடைகிறது.

ஒரு சம்பவத்தில் அநியாயமாய் இழைக்கப்பட்ட அவமானம் என்பது, நம்மைப் பொறுத்தவரை ஒரு தகாத தண்டனை. திரும்பத்திரும்ப அந்த நினைவுச் சுழலுக்குள் சிக்கும் போதெல்லாம் நம்மை நாமே தண்டித்துக்கொள்கிறோம். அந்த சம்பவத்தை ஒருபாடமாக மட்டுமே பார்க்கிற பக்குவத்தை வரவழைத்துக் கொள்கிறபோதுதானே அதிலிருந்து அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியும். நடந்துமுடிந்த சம்பவத்தை மாற்றமுடியாதே தவிர அடுத்து நாம் செய்வது மிகச்சிறந்த செயலாக அமையவேண்டுமல்லவா. அந்தச் செயல்தான் மன்னிப்பு.

சம்பந்தப்பட்டவரின் முகத்தைப் பார்த்து நீங்கள் உங்கள் மன்னிப்பைப் பிரகடனம் செய்யக்கூடத் தேவையில்லை. மனதுக்குள்ளேயே கூட மன்னிக்கலாம். சிறிது சிறிதாகவும் மன்னிக்கலாம். மனக்கண்முன் அவரைக் கொண்டுவந்து, அவர் செய்த தவறுகளையும் அதனால் உங்களுக்கேற்பட்ட உணர்வுகளையும் மானசீகமாகச் சொல்லி, இந்த சூட்டோடு அவரை மன்னிக்கிறபோது உங்கள் மனம் தெளிவடைகிறது. இதுவரை சுமந்த பாரத்தை இறக்கி வைத்த நிறைவு ஏற்படுகிறது.

மற்றவர்களை மன்னியுங்கள்...! மற்றவர்களுக்காக அல்ல!! உங்களுக்காக!!!

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 415

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | ■ | ■ | 12 |
| 13 | 14 | 15 | ■ | ■ | 18 |
| 19 | ■ | 21 | 22 | 23 | 24 |
| ■ | ■ | ■ | ■ | 29 | ■ |
| 31 | 32 | 33 | ■ | ■ | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 28.04.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-415
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**இடமிருந்து வலம்**

01.இதை அடக்கும் சம்பிரதாய நிகழ்வுகள். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் நடைபெறும்.

04.சூதாட்டத்தின் ஒருவகை இது. (குழம்பியுள்ளது)

07.வியப்பு என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது).

13.வீட்டின் பாதுகாப்புக்குப் போடுவது. (குழம்பியுள்ளது).

21.இரவில் வானில் தென்படுவது.

31.ஏடு அல்லது புத்தகம். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01.திசைகாட்டியில் பயன்படுத்தப்படுவது.

02.பயன் அல்லது ஆக்கம் என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)

06.கிருஷ்ணரின் வாகனம்.

09.பாட்டு என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது).

23.கடல் வாழ் உயிரினம்.

36.நாக்கை இவ்வாறும் கூறுவர்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 413க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

அ.அங்கயக்கண்ணி,7/27 புதிய சோனகத்தெரு, திருகோணமலை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**


01. ச.அகிலேஸ்வரி,கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
02. ஆர்.குழந்தைவேலு, கோண்டாவில் மேற்கு.
03. v.தனபாலசிங்கம், 324 கண்டிவீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி
04. சி.பாலசுந்தரம்,கல்வளை,சண்டிலிப்பாய்.
05. தினேஸ், வந்தாறுமூலை, மட்டக்களப்பு.
06. மூ.முத்துராஜா,தும்பளை, பருத்தித்துறை.
07. ஆர்.சினோன் ஏஞ்சலோ,41/3 மாப்பனாவத்துற றோட், கண்டி.
08. பிரியாறமணன், சீனக்குடா, திருகோணமலை.
10. தேனுஜா, தோணிக்கல், வவுனியா

## குறுக்கெழுத்துப் போட்டி 413- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | 2 ய | 3 மை | ■ | ■ | ■ |
| 7 ஞ் | 8 சி | 9 வ | ■ | 11 றை | 12 ம |
| 13 சி | 14 மு | 15 று | ■ | 17 க | ■ |
| ■ | 20 ற் | ■ | 22 றி | 23 வை | 24 அ |
| 25 ணை | ■ | ■ | 28 அ | ■ | 30 வை |
| 31 சு | 32 ள | 33 கு | ■ | 35 ள் | 36 க |

# நிலாவில் ஒலி கேட்குமா?

நிலாவில் துப்பாக்கியால் சுட்டால் காதில் வெடியொலி கேட்காது. ஏனென்றால் நிலாவில் வளி மண்டலம் கிடையாது. ஒலி அலைகளைத் தாங்கிச் செல்ல ஊடகம் தேவை. அதேபோல விண்வெளியும் வெற்றிடம்தான். எனவே விண்வெளி வீரர்களால் நம்மைப் போல் அங்கு உரையாட முடியாது. இவ்



ஊடகத்தின் அடர்த்தியும், வெப்பமும் ஒலி அலைகளின் வேகத்தை நிர்ணயம் செய்யும். ஒலி காற்றில் செல்லும் வேகத்தைவிட திரவங்களில் செல்லும் வேகம் அதிகம். அதையும்விட அதிக வேகத்தில் திடப்பொருளில் செல்லும். மின்குமிழின் உள்பகுதியில் காற்று இல்லை. வெற்றிடமாக உள்ளது. மின்குமிழ் உடையும்போது அப்பகுதியின் வழியாக வெற்றிடத்தை நிரப்ப எல்லாப் பகுதிகளில் இருந்தும் காற்று வேகமாகச் செல்கிறது. அவ்வாறு வேகமாகச் செல்லும் காற்றின் ஒலியே நமக்குச் சத்தமாகக் கேட்கிறது.




அகல்யாவுக்கு ரயில் பயணம் நரக அனுபவமாக இருந்தது. சீற்றெல்லாம் சௌக்கியமாக இருந்தது. ஆனால் சுப்ரீதா வாய் ஓயாமல் டில்லியில் பார்த்த ஒரு பாஞ்சாபிப் பையனைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாள். "இந்த நிமிஷமே கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்" என்றானாம். அவள்தான் படிப்பு முடியட்டும் என்றாளாம். பிரியங்காவைப் பார்த்ததாகக் கதை அளந்தாள். அகல் யாவுக்கு லேசாக இருந்த காய்ச்சல் பயணத்தில் அதிகமாயிருந்தது. எதுவும் சாப்பிடப் பிடிக்கவில்லை. பூரி சாப்பிட வேண்டும் போல் இருந்தது. நாப்பூர் பிளாட்பாரத்தில் தேடிப்பார்த்தாள். அசதியாகவும் சக்தியற்றும் இருப்ப தாகவும் உணர்ந்தாள்.

**விமானத்தில்** சாப்பாடு ஒத்துக்கொள்ளாமல் ஏற்பட்ட வாந்தியும், காய்ச்சலும் இன்னமும் விலகவில்லை. மூக்கு சிந்தி நுனி சிவந்தே இருந்தது. எப்போது சென்றல் வருவோம் என்று ஏக்கமாக இருந்தது.

வண்டி ஒரு மணி நேரம் தாமதமாக வந்து, ஸ்டேசனில் ஆட்டோ ரைவர் 50 ருபா கொடுங்கம்மா... என்று சொன்னதை எதிர்க்காமல் சீட்டில் ஏறிக்கொண்டாள். டாட்டா காட்டும் போது 'முதல்ல காலை யில டொக்ரரிட்டக் காட்டு..." என்றாள் சுப்ரிதா. அவளை அழைத்துச் செல்ல அவள் சகோதரன் வந்திருந்தான்.

காலை எழுந்திருக்க இயலா மல் உடம்பெல்லாம் வலித்தது. அறை யில் சுகுணாவின் உதவியுடன் அங்கிருந்த மெடிக்கல் அசிஸ்டன்ட் தெர்மா மீற்றர் வைத்துப் பார்த்து 'மெட்டாசின் ஒன்று எடுத்துக்கொண்டால் சரியாய்ப்போயிடும்" என்றார்.

திரும்ப வந்து நாள் முழுவதும் தூங்கிவிட்டாள். கல்லூரிக்குப் போகவில்லை. காலையில் வோர்டன் வந்து பார்த்து அவளை விடுதிக்கு ஒப்பந்தமாகியுள்ள சோமப்பா ஆஸ்பத்திரிக்கு ஆட்டோவில் அழைத்துச் சென்றான்.

"வைரஸ் காய்ச்சலாக இருக்குமென்று சந்தேகம் வருது. ஒரு இரத்தப் பரிசோதனை எடுத்திட்டு வந்திடு. இங்கேயே லாப்பில போய் எடுத்தா நல்லது... பசி இருக்குதா?"

"பசியே இல்லை டொக்டர். வெறும் இலகுவான சாப்பாடா சாப்பிட்டுக்கிட்டு இருக்கேன். கோக்,சிப்ஸ், பேல்பூரி , ஐஸ்கிறீம்... அதுதான் மோசமாயிடுச்சு."

"பேல்பூரியா...? அதுதான் வயிற்றுக் கோளாறாயிருக்கும்... தடிமன், வயிற்றுக் கோளாறு இருக்கா?"

" இல்லை டாக்டர், யூறின் போயே ரெண்டு நாளாச்சு..."

" இந்த மாத்திரையைச் சாப்பிடு. காலை யில சரியாயிடும்"

தப்புத்தப்பா சிகிச்சை கிடைப்பதாகத் தோன்றியது அகல்யாவுக்கு. இரண்டு நாள் போனால் சரியாகிடும் என்றும் தோன்றியது. பெரிசு பண்ண வேண்டாம் என்று ரூமி லேயே சனி, ஞாயிறு கழித்துவிட்டாள். திங்கள் முதன் முறையாக கல்லூரிக்குச் சென்றாள்.

கிருத்திகா சொரி, 'என்ன இப்படி பேயறைஞ்ச மாதிரி இருக்கே அகல்யா...?' என்றாள் கவலையுடன்.

"டெல்லி ஒத்துக்கலை மேடம்."

"எதுக்குத்தான் உன்னை அனுப்பினமெண்டு கஷ்டமாக இருக்கும்மா லெஸன்சில வேற மிஸ் பண்ணியிருக்கே.'

"படிச்சிடுவேன் மேடம்."

"இனி உன் பேரை சிபாரிசு பண்ணமாட்டேன். செமஸ்டர் முடியறவரை படிப்பு படிப்பு படிப்புத்தான்' என்றாள்.

ப்ரமோத் வந்து 'கன்ரினில் அவளி டம் பரிவாக விசாரித்தான். ஆறுதலாக இருந்தது.

'டெல்லியில் பிச்சு உதறிட்டியாமே விவாதத்தில?"

"சுமாரா செய்தோம்."

"உடம்பு சரியில்லையாமே"

"சுப்ரிதா சென்னா... பேல்பூரி, பானிபூரிலயே உயிர் வாழ்ந்தியாமே?"

" அந்த மாதிரி நொறுக்குத் தீனிதான் பிடிச்சது."

" அப்புறம் என்னைப் பிடிக்கிறதா?"

ஒரு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு ஒரு ஊது ஊதினான்.

" பிளீஸ் பிரமோத் சிகரெட்டை அணைச்சிடு..."

"ஏன்?"

" வாசனை பிடிக்கலை."

"சிகரெட் பிடிக்கலையா... சிகரெட் குடிக்கிறவனையா?"

" சிகரெட் புகை தான் என்னவோ பண்ணுது."

" முன்னெல்லாம் பிடிக்குமே.. நீ கூட இழுப்பு இழுப்பியே...?"

" பிளீஸ் என்று அவன் வாயிலிருந்து அதைப் பிடுங்கி எறிந்தாள்."

" என்னவோ ஆயிற்றுது உனக்கு?"

எல்லாம் சரியாகிவிட்டது. ஒரு மாதம் மும்முரமாகப் படிப்பதில் ஆர்வமாக இருந்தாள். டில்லியில் பங்கு பெற்றதற்கு ஒரு புத்தகப் பரிசு கொடுத்தார்கள். கொம்பியூட்டர் வகுப்பில் எக்செல், பவர்பொயிண்ட் எல்லாம் முடிந்தது. படு வேகமாக முன்னேறி வந்தாள். ரிலேசன்ஸ் டேட்டாபேஸ் தத்துவம் அவளுக்குப் புரிந்தது. விட்டுப்போன பாடங்களை எட்டிப்பிடித்துவிட்டாள். அவர்கள் விழா விஜய் ரிவியில் ஒளிப்பரப்பாகி. விடுதி-யே ஒன்று கூடிப் பார்த்தது. அகல்யா பாடின போது ஆர்வமாகப் பெண்கள் கூட விசில் அடித்துக் கைதட்டியது தெம்பாக இருந்தது. பழைய உடம்பு எல்லாவற்றையும் மறந்துவிட்டாள். அப்பா மற்றொரு முறை போன் செய்தபோது அறையில் இல்லை என்று சொல்லி அனுப்பினாள். அடிக்கடி எதையோ மறந்துவிட்டாற்போலத் தோன்றியது. எதை என்று தெளிவாகத் தெரியவில்லை. ஒரு இராத்திரி கெட்ட சொப்பனம் கண்டு எழுந்துவிட்டாள். தலை சுற்றியது. குளியலறையில் போய் வாந்தி எடுத்தாள். நடு இராத்திரியில் முகம் கழுவினதும் சட்டென்று அது ஞாபகம் வந்துவிட்டது.

மிகவும் முனைந்து ஞாபகப்படுத்திப் பார்த்தாள் அகல்யா. எப்போது ஆனோம்? இருபத்திரண்டாம் திகதி ஞாபகம் இருக்கிறது. எந்த இருபத்திரண்டாம் திகதி?

உடல் முழுவதும் சில்லென்று ஒரு பயம் பரவுவதை உணர்ந்தாள். போன மாதம் இருபத்திரண்டுதான். நிச்சயம் எங்கேயோ எழுதி வைத்தேனே...

அலுமாரியில் அந்த நோட்டைத் தேடும்போது டில்லிக்காக ப்ரமோத்துடன் படித்த புத்தகம் அகப்பட்டது.

Unplanned Pregnancy

"தள்ளிப் போவது. மார்பகம் இளகுவது, வீங்குவது,அதன் முனைகள் நீளமாவது."

குளியலறைக்குப் போய் மேல்சட்டையைக் கழற்றித் தொட்டுப் பார்த்தாள்.

சேச்சே! அதெல்லாம் இல்லை.

"அடிக்கடி சிறுநீர் கழிப்பது, சோர்வா இருப்பது" என்று பத்து சமாச்சாரங்கள் கொடுத்து, "இதெல்லாம் இருந்தாலும் தீர்மானமாக கர்ப்பம் என்று சொல்லமுடியாது, இவை எல்லாமே மற்ற காரணங்களால் இருக்கலாம்" என்பதைப் படித்து ஆறுதல் அடைந்தாள் எனக்கு ஒன்றும் ஆகாது. நான் யாருக்கும் கெட்டது செய்யவில்லை. பைத்தியம் , இல்லாததையும் பொல்லாததையம் கற்பனை பண்ணிக்கொள்ளாதே. முதலில் டொக்ரரிடம் போய் மருந்து வாங்கிச் சாப்பிடு. இருந்தும், பயத்தால் ஆன பெயரற்ற ஐஸ் கத்தி அடிக்கடி வயிற்றில் குத்திக்கொண்டே இருந்தது.

**இன்பம் தொடரும்**

இவ்வாரச் சிறுகதை

# இலக்கியாவிற்குள் ஓர் சரித்திரம்

**அன்று** வன்னிப் பிரதேசம் மக்கள் கூட்டத்தால் நிரம்பியும் தெருவோரம் எங்கும் மூட்டை முடிச்சுக்களால் விதைக்கப்பெற்றும் காட்சி அளித்தது. ஆங்காங்கே வேரோடு தூக்கியெறியப்பட்ட மரங்கள், வைத்தியசாலைகள், பாட–சாலைகள், தொழிற்சாலைகள், சின்னா பின்னமாக அழிக்கப்பட்ட கிராமங்கள், கால்வைக்கும் இடமெல்லாம் இரத்த ஆறுகள், சிதறிக் கிடக்கும் மனித உடல்கள் அவற்றைச் சுற்றிலும் கதறி அழுகின்ற உறவுகள், தாயை இழந்து, தந்தையை இழந்து, மகனை இழந்து, கைக்குழந்தைகளைத் தம் கைகளிலும், தோள்களிலும் சுமந்த தாய்மார்களும், புதிய சோடி போன்ற இளம் தம்பதியினரும் வன்னியை விட்டு முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

"கண்கள், உதடுகள், கன்னங்கள், நெற்றி, முகமெல்லாம் சோகம்" தழும்பியவர்களுக்குள் இலக்கியாவும் ஒருத்தியாவாள். இவள் போரிலே கணவ னையும் இரு ஆண்பிள்ளைகளையும் இழந்தவள். நத்தை வேகத்தில் இவளின் இருட்டறை வாழ்வு நகர்ந்து போனது. இவளுக்கு இருக்கும் ஒரே ஒரு பெண்பிள்ளையின் உயர்தரப் பரீட்சையும் நெருங்கியது. இலங்கியா தான் எப்படிக் கஸ்ரப்பட்டாலும், தன் பிள்ளையைப் படிக்க வைக்க வேண்டும் என்று எண்ணினாள். அவள் தாம் முன்பு பட்டு அனுபவித்த துன்ப வாழ்வின் அனுபவங்களை அடுத்தவருடன் பகிர்ந்து கொள்ள முடியாது அவளின் கண்கள் பனித்தன.

வறுமையில் வாடிய இலக்கியா தனது சங்கிலியை அடகு வைத்து ஜீவியத்தை நடத்திக்கொண்டிருந்தாள். இலக்கியாவின் மகளின் உயர்தரப் பரீட்சைப் பெறுபே–றுகள் வெளியாவதற்கு ஓரிரு நாட்களே இருந்தன. இலக்கியாவின் பார்வையோ கடவுளைக் கடுமையாகத் தேடியது. அவளின் வேண்டுதலோ "இறைவா நீ என்ர கணவனை யும், பிள்ளைகளையும் பறித்துவிட்டாய். இருக்கிற பிள்ளையாவது எழுதிய பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்று கண்ணீர் மல்லக வேண்டினாள்"

பதிலுக்காகக் காத்திருந்த இலக்கியா போரின் வடுக்களிலிருந்து சிறிது மாற்றம் அடைய இலக்கியாவின் மகளின் பெறு பேறுகளோ உயர்தர பெறுபேறுகளாகி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகின்றாள்.




இலக்கியாவின் கண்களோ ஆனந்தப் பன்னீரைத் தெளித்து மகளின் முகத்தோடு தனது முகத்தை உரசினாள்.

இலக்கியா தனி ஆள் என்ற படியால் தனது கையில் இருந்த வளையலை விற்கு மகளின் படிப்புச் செலவிற்கு அவற்றைப் பயன்படுத்தினான். "இனி என்ன வாழ்க்கை?, யாருக்காக வாழ வேண்டும்? என்ற விரக்தி மட்டுமே அவளிடம் எஞ்சியிருந்தது. அவ்வளவிற்கு அவள் உடலாலும், உள்ளத்தாலும் உடைந்து போய் இருந்தவள்" ஆனால் இன்று மகளின் பெறுபேற்றால் தன்னையே வேறாக்கிக் கொண்டாள்.

இலக்கியாவின் நகைகளிலே காதுத்தோடு ஒன்றுதான் இறுதியாக எஞ்சியிருந்தது. அவள் நித்திரைக்குப் போகும் ஒவ்வொரு இரவுமே கழற்றிவிட்டுத்தான் படுப்பாள். வழக்கம்போல் அன்று இரவும் கழற்றி வீட்டுக்குள் இருந்த வாளிக்குள் போட்டுவிட்டு நித்திரை செய்தாள். காரி ருள் வேகமாக ஓடி நேரங்களால் இரவி னைக் கலைத்தன.காலையிலே எழுந்த இலக்கியா பிள்ளைக்குச் சாப்பாட்டைத் தேடிக்கொண்டிருந்தாள். அவ்வேளையில் முகாமிற்குள் நீர்விநியோகம் செய்யும் நீர்த்தாங்கி வாகனம் வந்தது. இதையறிந்த மகள் அம்மாவிற்குக் கஸ்ரம் கொடுக்கக் கூடாது என்றெண்ணி வெளியில் இருந்த வாளியையும், வீட்டிற்குள் இருந்த வாளியை யும் எடுத்து வரிசையிலே வைத்து வாளிகளை அவசரஅவசரமாக அலசி கழுவி ஊற்றினாள். தண்ணீரை நிரப்பிக்கொண்டு வீட்டிற்குள் கொண்டுபோய்ச் சேர்த்தாள்.

காலை உணவு தயாரான இலக்கியா கால்முகத்தைக் கழுவி துடைத்துவிட்டு தோட்டைப் போட வாளியைத் திறந்தாள். வாளியோ தண்ணீரால் நிரம்பியிருந்தது. இலக்கியா மகளிடம், "பிள்ளை தோடு இந்த வாளிக்குள்ள வைச்சனான் எங்க எடுத்து வைச்சனீங்கள்" என்று கேட்டாள். "ஐயோ அம்மா நீங்கள் வைச்சது எனக்குத் தெரியாது, சத்தமும் கேட்கவில்லை. நான் வாளியைக் கழுவி அலசி தண்ணீரை அங்கேயே கீழே ஊற்றிவிட்டேன் என்றாள்.

இலக்கியாவோ வா பிள்ளை தண்ணீர் எடுத்த இடத்தில் பார்ப்பம் என்றுவிட்டு போனாள். அங்கே மக்கள் கூட்டம் வரிசையாகத் தண்ணீருக்கு நின்று அடிபட்டுக்கொண்டிருந்தனர். இலக்கியா தனது தொலைந்த தோட்டைப் பற்றி அக்கூட்டத்தினரிற்குச் சொன்னாள்" நின்றவர்களோ இலக்கியாவின் வறுமையை நினைத்து ஒரு கணம் "கல்லுக்குள்ளே ஈரம் உண்டு கசிவது போல் கசிந்து" கொண்டு தோட்டைத் தேடினார்கள். தோடோ கையில் அகப்படவில்லை. இலக்கியாவோ" ஐயோ... ஐயோ என்று தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு புரளுகின்றாள். எல்லாம் எங்களுக்குத்தானே..." என்று உளவியலை விரித்து தனது தரித்திரத்தைக் கொட்டினாள்.

இன்னும் ஒரு வருடங்களே இலக்கியாவின் மகளின் கல்வி பூர்த்தியா வதற்கு இருந்தது. காலங்கள் காத்திருக்காமல் கரைந்துகொண்டு போனது. இலக்கியாவின் மகளும் பல்கலைக்கழகத்திலே பட்டம்பெற்று ஆசிரி யராகத் தனது தாயின் சோகங்களைத் தீர்த்து, இருட்டறையைப் போக்கி ஒரு சரித்திரத்தைப் படைத்தாள்.

"பல்லாயிரம் கேள்விகளுக்கும் பதில் காண முடியாமல் இலக்கியாவின் நெஞ்சு எரி–மலையாய் குமுறியது. மகளின் சரித்திரத்தால் பல்லாயிரம் கேள்விகள் தணிந்து எரி மலைக் குமுறலும் இலக்கியாவிடமிருந்து விலகிப்போனது. ▫

# பொன்மொழி



கல்வி மூலம் தன்னம்பிக்கை ஏற்படுகிறது. தன்னம்பிக்கை மூலம் தன்னுள் உறங்கிக் கிடக்கும் ஆன்மா விழித்துக் கொள்கிறது. கைக்கோ, வாளுக்கோ ஆற்றல் ஏது? ஆற்றல் முழுவதும் ஆன்மாவிலிருந்தே வெளிப்படுகிறது.

சுவாமி விவேகானந்தர்


# கற்றதனால் ஆய பயன்

கே.வி. குணசேகரம்

பழந்தமிழ்ப் புலவர்கள் வேதங்கள், உபநிடதங்கள், புராண இதிகாசங்கள் ஏனைய சமய அறிவு நூல் களையெல்லாம் கற்ற பின்பே கவிதைகளை எழுதினர். அக்கவிதைகளால் புராண இதிகாச, வேத உபநிடதக் கருத்துக்களும், கதைகளும் ஓர் அடியில் குறிக்கப்பட்டிருக்கும். தேவர் அனையர் கயவர் என நாலாயிரம் முதல் திருவள்ளுவர் தேவர்களது சரித்திரத்தையே கூறுகிறார். இதுபோல காளமேகப் புலவர் ஓர் அடி மூலம் ஒவ்வொரு தெய்வங்களின் மகிமைகளைப் பற்றியும் கூறுகிறார். இது பழந்தமிழப் புலவர்களுக்குக் கைவந்த கலை.

இத்தகைய பழந்தமிழ் நூல்களுக்கு உரை எழுதுவோர் பழந்தமிழர் வரலாறு முழுவதையும் கற்றல் வேண்டும். அவற்றைக் கற்காது எழுதும் உரைகள் பூரணமாகாதவை. திருக்குறளில் வேத உபநிடத இதிகாச புராணக் கருத்துக்கள் மட்டுமன்றி, பழந்தமிழ் நூல்களினதும் சமான நூல்களினதும் அறக் கருத்துக்கள் நிறைந்துள்ளன. அவற்றையும் அக்காலச் சூழலையும் அறியாது எழுதப்படும் உரைகள் மயக்கத்தைத் தரும்.

பழந்தமிழ்ப் புலவர்கள் ஒருபோதும் ஒற்றுமையாக இருந்ததில்லை. அத்துடன், ஏனைய புலவர்களை மதித்ததும் இல்லை. மகா கவியான காளிதாசனை தண்டிக் கவிராயர் அறிஞராக ஏற்றதில்லை. கம்பரை, காளமேகத்தை திருவள்ளுவரை அன்று வாழ்ந்த புலவர்கள் மதித்ததில்லை. சமயச் சண்டைகளோடு வித்துவச்சண்டைகளும் நடைபெற்றன. அச்சண்டைகளை அரசரால்கூடத் தீர்க்க முடியவில்லை. இதனால் கடவுள்கள் நேரில் தோன்றி உண்மையைப் புரியவைத்த வரலாறுகளை நாம் அன்றைய நூல்களில் காண்கிறோம். காளிதாசனுக்கும், கம்பருக்கும் காளி தோன்றிப் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தாள். தருமிக்குப் பொற்கிழி அளிக்கப்பட்டபோது கதையில் சிவபெருமான் நேரில் வந்து எடுத்துக்கூறியும் நக்கீரர் அப்பாடலின் பொருளைத் தவறென்றார். அதனால் சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணைக் காட்டினார். அதற்கு நக்கீரர் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே! என்றார். இதிலிருந்து அன்று வாழ்ந்த புலவர்கள் ஆணவம் மிக்கவர்களாக இருந்தமை தெரியவருகிறது.



பண்டைய புலவர்களும் கடவுளின் மீது நம்பிக்கை இல்லாதவர்களாக வாழ்ந்ததை நாம் எந்த நூல்களிலிருந்தும் அறிந்து கொள்ள முடியவில்லை. கடவுளின் அருளால்தான் புலவர்கள் பாடல்களைப் பாடினர். பாடல்களைப் பாட கடவுளும் அவர்களுக்கு உதவினார். மூடர்களையும், முரடர்களையும் இழிந்தவர்களையும் கடவுள் தனது அருளால் மேலான கவிஞராக்கியதாக வரலாறு கூறுகிறது. இவற்றையெல்லாம் உணர்ந்த திருவள்ளுவர் அக்கால அறிஞர்களின் ஆணவத்தை அகற்றி மற்றக் வர்களையும் மதிக்க வேண்டும் என்று விரும்பினார். திருக்குறள் பாக்கள் யாவும் மக்களுக்கு ஆலோசனை கூறுபவையாகவே உள்ளன.

அந்த வகையில்தான் திருவள்ளுவர் திருக்குறள் புலவர்களை திருத்த வேண்டு மென்பதற்காகவே கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவான் நற்றார் தொழா அர் எனின் என்று பாடினார்.

இதற்கு உரை எழுதியோர் கடவுளின் புனிதமான திருவடிகளை வணங்காதவன் கற்ற கல்வியால் ஒரு பயனும் பெறமாட்டான் என்று எழுதியுள்ளனர். இவ்வுரை அக்காலச் சமூகத்திற்கும் இக்காலச் சமூகத்திற்கும் பொருந்துவதாக இல்லை. பழந்தமிழ் அறிஞரைப் போலவே இன்றுள்ள அறிவுடையவர்களும் கற்றவர்களை மதிப்பதில்லை. தன்னைவிட மேலானவர்கள் இல்லை என்று நினைக்கிறார்கள். ஒழுக்கக் கருத்துக்களைப் மக்கள் பின்பற்ற வேண்டும். ஒழுக்கமாகப் பொருள் தேடவேண்டும்.ஒழுக்கமாக இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்பதே திருக்குறளின் போதனை.

(தொடரும்...)

---

✉ சிந்தியா! கூட்டமைப்பின் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் யாழ்ப்பாணத் தேர்தல்களத்திலும் தொடருமா?

**எஸ்.சேதுராம்**
**யாழ்ப்பாணம்.**

● அப்படியொரு எதிர்பார்ப்பு கூட்டமைப்பிடம் இருக்கக் கூடும். ஆனால் யாழ்ப்பாணத்து மக்களின் சிந்தனையில் மாற்றம் ஒன்று ஏற்பட்டு வருவதை ஒவ்வொரு தேர்தல் முடிவுகளிலும் நாம் பார்த்தே வந்திருக்கிறோம்.

உதாரணத்திற்கு ஒரு ஆசனத்தைப் பெற்றிருந்த ஈ.பி.டி.பி கட்சி இப்போது மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைத் பெற்றிருக்கின்றது. 470 வாக்கு வித்தியாசத்தில் அது தனது நான்காவது ஆசனத்தைப் பெறுகின்ற வாய்ப்பைத் தவறியிருந்தது. இத்தகைய மாற்றம் ஒருபுறம்.

2001 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஈ.பி.டி.பி 10 சபைகளை வெற்றி பெற்று முழுமையான சேவை செய்திருப்பதையும் அவர்கள் அந்நாட்களில் செப்பனிடப்பட்ட வீதிகளே இப்போதும் யாழ்ப்பாணத்தில் உருப்படியாக இருக்கின்றது என்பதும் யாழ்ப்பாண மக்களுக்கு மறக்க முடியாத விடயங்கள்.

ஆகவே இம்முறை யாழ்ப்பாண மக்களோடு கிளிநொச்சி மக்களும் கூட்டமைப்பின் கனவுகளைக் கலைப்பார்கள் என்றே நம்பலாம்.

✉ பலதரப்பட்ட இடங்களிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வதற்கான காரணங்கள் என்னவாக இருக்கலாம்?

**எம்.புகழேந்தி,**
**திருகோணமலை.**

● காரணங்கள் பலவாக இருக்கின்றன. கைத்தொலைபேசிகள், வீடுகளுக்குள் சாதாரணமாக நுழைந்துவிட்டது, இன்ரநெற் வலையமைப்பு வசதிகள் மட்டுமல்லாது அயல்வீடுகளில் மூக்கை நுழைக்கும் மூன்றாம் மனிதர்களின் உறவுகளும், பிரதான காரணங்களாக இருக்கின்றன. சிறுவர்களைச் சிறுவர்களாகப் பாதுகாப்பது இன்று ஒரு உறவு யுத்தமாகவே இருக்கின்றது.

பெற்றோர்களைக் குழந்தைகளின் எதிரிகளாக்கி விடுகின்ற சமூக மாற்றங்களும், திணிப்புக்களுமே காரணங்களின் ஆணிவேர்களாக இருக்கின்றன. சிரமமான இந்தப் போராட்டத்தில் பெற்றோர்களின் நிலைமை தர்மசங்கடமானதும் குழப்பமானதாகவும் இருக்கப்போகின்றது.

✉ சிந்தியா! இலங்கை கிரிக்கெட் அணியின் தலை வராக T.M.டில்சான் நியமிக்கப்பட்டமை குறித்து..?

**எம்.கோகிலவாணன்,**
**அராலி,**

● சிறந்த வீரர் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதில் மாறுபட்ட கருத்து இடமிருக்க முடியாது. ஆனால் உலகக் கோப்பை ஆட்டங்களுக்குப் பின்னர் கிரிக்கெட் வீரர்களின் அதிருப்தி, தெரிவாளர்களின் பதவி விலகல்கள், புதிய நியமனங்கள், இவற்றுக்கெல்லாம் பின்னால் ஏதோ மறைக்கப்படுகின்ற மர்மம் ஒன்று இருப்பதாகவே கிரிக்கெட் ஆர்வலர்கள் கருதுகின்றனர். எது எப்படியென்றாலும் இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டு உலகக் கிரிக்கெட் வீரர்கள் மத்தியில் தவிர்க்கப்பட முடியாத இடத்தைப் பெற்றுள்ள இவ்வேளையில் அவசியமற்ற தலையீடுகளையும், அழுத்தங்களையும் உள்நுழைத்து நிலைமையைக் கைமீறிச் செல்ல விடுவது நல்லதல்ல என்பதே நமது அபிப்பிராயம்.




✉ சிந்தியா! நிம்மதியைத் தேடி எங்கே செல்லலாம்?

**கே.கல்யாணி,**
**வவுனியா.**

● இந்தத் தேடல் கி.மு. முன்னாலும் இருந்தது. கி.பி. பின்னாலும் தொடர்கின்றது, இந்த ஆதங்கத்தை வெளிப்படுத்தாத கேள்வியாளர்களே இல்லை. ஒரு வகையில் சிந்தித்தால் நிம்மதியிருக்கின்ற இடம் தேடலுக்கு உரிய இடமாக இருப்பதே நல்லது என்று தோன்றுகிறது. ஒருவேளை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் உலக மக்கள் எல்லோரும் அங்கேயே ஒன்றுசேர வேண்டியிருக்கும். அத்தகைய சூழல் மிகக் கடினமானது. இப்படியெல்லாம் பதிலளிக்க விருப்பம் இருக்கின்றது. ஆனால் அது நியாயமாகாது. ஏனென்றால் ஒருவர் தேடும் நிம்மதி அவருக்குள்ளேயே இருக்கின்றது. விருப்பம், விட்டுக்கொடுப்பு, ஏற்றுக்கொள்ளல், சகித்துக் கொள்வது, மேலதிகமானதை விட்டுவிடுதல் போன்ற பல்வேறு விடயங்களில் நிதானத்தோடு இருக்கின்ற ஒருவரது மனம் நிம்மதியைப் பெறுகின்றது.

✉ சிந்தியா! கல்லறை சொல்லும் தத்துவம் என்ன?

**தீ.கீதபொன்கலன்,**
**மட்டக்களப்பு.**

● விரிவாகச் சொல்வதை விடவும் சுருக்கமாகச் சொன்னால், பாடல் ஒன்று ஞாபகம் வருகிறது. "ஆடாதடா ஆடாதடா மனிதா..." என்ற பாடல். எல்லோருக்கும் அது தான் முடிவு. அது முன்னும் பின்னுமாய் நடந்துவிடுகிறது.

✉ சிந்தியா!திருமணம் இன்றியே வாழ நினைக்கின்றேன் முடியுமா?

**எச்.எம்.எம்.மஸ்னவீ,**
**புத்தளம்.**

● முடியாத ஒன்றல்ல. ஆனால் சில கவசங்களை இழந்தவிடுவீர்கள். நீங்கள் இன்று வேண்டாம் என்று சொல்வதைப்போல் நாளை நீங்கள் வேண்டாம் என்கின்ற நிலை வருகின்ற போது, அதை இரண்டாம் மனிதனின் தயவின்றி உங்களால் ஏற்றுக்கொள்ள முடியுமாக இருந்தால் உங்கள் கேள்வி மிகச் சாதாரணமானதுதான். □



# செய்திகளும் சின்னாச்சியும்

தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்குப் பலமான ஆயுதமாக விளங்குவது கல்வியொன்றுதான்.

**- கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.**

"என்னடி இது கோதாரி, சம்பந்தன் ஐயாவின்ர நாக்குத் தடம் புரளுறமாதிரிக் கிடக்குது. மெய்யே! சம்பந்தன் ஐயா நீங்கள் இப்பிடிச் சொன்னதெண்டு பேப்பரில செய்தி போட்டிருக்கினமல்லோ. பாக்கேல்லையோ. நீங்கள் உப்பிடிச் சொன்னது உண்மையெண்டா கல்விதான் பலமான ஆயுதமெண்டது உங்களுக்குத் தெரிஞ்சிருந்தால் அப்ப ஏன் ஐயா கனரக ஆயுதம் தூக்கிய பிரபாகரனையும் பிரபாகரன்ர இயக்கத்தையும் சம்பிப் பிடிச்சுத் துதிபாடித் திரிஞ்சனிங்கள்? வீணாக அவங்களை உசுப்பேத்திக் கடைசியில் உயிர்ப்பலி எடுக்க விட்டதுதான் மிச்சம். கல்விதான் பலமான ஆயுதமெண்டது அந்த நேரம் பிரபாகரனுக்கு அறிவுறுத்தியோ உணர்த்தியிருந்தால் எங்கட சனத்துக்கு அதுவும் உந்த வன்னிச் சனத்துக்கு இவ்வளவு ஆக்கினையள் வந்திருக்காது கண்டியளோ. காட்சியளும் மாற உங்கட வாயால வாற கதையளும் மாறுது போலக் கிடக்குது."

கப்பம் பெறும் அமைச்சர்கள் பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டும்.

**அமைச்சர் ராஜித சேனாரட்ன.**

"திண்டு ருசிகண்ட பூனையள் அடுப்படியைவிட்டு அங்காலை; இஞ்சாலை அசையுமோ? உதென்ன கதை உது?" லஞ்சம் வாங்கிறவன் நான் இன்னாரிட்டை இவ்வளவு வாங்கிறன்... எண்டு சொல்லிக்கொண்டே வாங்கிறான். உது ஆருக்கோ 'வொடி'வைச்சுப் பேசிறமாதிரி எனக்குத் தெரியுது. உந்தக் கவிதையள் எழுதுற ஆட்கள் படிமம், குறியீடு எண்டு மறைமுகமாக சாடுறமாதிரி உவர் ஆருக்கோ சாத்துறார் போலக் கிடக்குது."

எமக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைத் தவறவிடாது அவற்றைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள அரசியல் தலைமைகள் முன்வர வேண்டும்.

**-அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.**

'எங்கட தமிழ்ச்சனத்தின்ர இழிநிலை அறிந்து ஒரு இணக்கப்பாட்டோடை ஒத்து ஓடினால்தான் ஓரளவுக்காவது தலைநிமிரலாம் எண்டு சிங்கள் உங்களுக்கு விளங்குது. ஆனா கனக்கப் படிச்சனாங்கள் எண்டு தலைவீங்கித் திரியிற சில தலைமைகளுக்கு விளங்குதில்லையே. அடிக்கடி அரசியலை நடத்தி ஆகப்போக நாங்கள் என்னத்தைக் கண்டம். அகதியாய் போனதுதானே மிச்சம். உண்மையில தமிழ்ச்சனத்தில அக்கறையுள்ளதுகள் எண்டா உந்த வரட்டுக் கௌரவங்களை வாய்க்காலுக்கை வெட்டிப் புதைச்சுப்போட்டு, கிடைக்கிற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தாங்கள் விட்டதவறுகளுக்கு இனியாவது ஒரு பரிகாரம் தேட வெளிக்கிடலாம்தானே. செய்யுங்கோ உதுகள்?"

வரணி-தாவளை, இயற்றாலைப் பகுதியில் வீடு தீப்பற்றியதால், இருப்பிடம் இன்றித் தவிக்க ஒரு குடும்பத்திற்கு பொலிஸ் அதிகாரி உதவி

**- பத்திரிகைச்செய்தி.**

"காக்கிச் சட்டை போட்டால் அவையளின்ர மனமும் கல்லுமாதிரித்தான் இருக்கும்... எண்டதொரு தவறான அபிப்பிராயத்தை உந்தப் பொலிசு ஐயா பொய்யாக்கிப் போட்டார் பாத்தியளே! வீடு கொளுத்துற ராசாவுக்கு நெருப்புகள் எடுத்துக்குடுக்கிற மந்திரியள் நிறைஞ்ச உலகத்தில உப்பிடியொரு மனிதாபிமான உதவியெண்டது எவ்வளவு சந்தோஷமான விசயம்தெரியுமே! ஒரு பொறுப்பான அதிகாரி முன்மாரியாக நடந்து காட்டினால்தானே அவருக்குக் கீழை வேலை பாக்கிறவையளும் அதே மாதிரிச் செய்வினம்; செய்து காட்டுவினம். உண்மையில உவரைப்போல எல்லாரும் இருந்தால்... நினைச்சுப் பார்க்க எவ்வளவு சந்தோசமாக்கிடக்கு. ஆர் பெத்த பிள்ளையோ? நல்லாயிருக்கவேணும்...."

வன்னிப் பகுதியில் தேங்காய்களின் விலை அதிகரிப்பு

**- பத்திரிகைச்செய்தி.**

"உதெல்லாம் போர் தந்த பரிசெண்டு புன்சிரிப்புச் சிரிக்கிறதோ மனம் புழுங்கி அழுகிறதோண்டு ஒண்டுமாத் தெரியுதில்லை எனக்கு. வன்னியில சண்டை நடக்கேக்கை கொஞ்ச; நஞ்சத்தென்னையளே அழிஞ்சு போனது. ஆ... கடவுளே... ஆமியின்ர ஷெல்லடி, கிபிரடியில அரைக்கரைவாசி அழிஞ்சு போனதுகளும், பங்கருக்கெண்டு இயக்கமும், எங்கட சனமும் தறிச்சு விழுத்தின தென்னையளைக் கணக்குப்போட்டால் கையெல்லாம் உதற வெளிக்கிடும். இனியொரு தென்னம்பிள்ளை நட்டு பதினைஞ்சு இருபது வருசத்துக்குப் பிறகு பலன் எடுக்க ஆர் எவை இருக்கப்போகினமோ? அடிமாட்டு அரசியலை விரும்புறவை உதுகளைப்பற்றி யோசிப்பினமோ? அதுகளுக்கு தேங்காய் இல்லாட்டியென்ன? தேவாங்கு உயிர்த்தாலென்ன?"

மாநகர சபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில் சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை; பொதுமக்கள் விசனம்.

**-பத்திரிகைச்செய்தி.**

"சினிமாக்காரியளுக்கு 'மேக்கப்' பண்ணினமாதிரி சில தேத்தண்ணிக் கடையள், சாப்பாட்டுக் கடையள் முன்னுக்குப் பார்க்க வடிவு அலங்காரமாத்தான் இருக்கும். போதாக்குறைக்குக் கடைமுதலாளிமாரும் பூச்சுப்பணக்குகளோடை சந்தனம் குங்குமம் எல்லாம் அள்ளிப் பூசி சைவப் பழமாகக் காட்சியளிப்பினம். ஆனால் உள்ளுக்கை போய் பார்த்தா மூக்கைப் பொத்திக்கொண்டு ஓடிவரவேண்டிக்கிடக்கும்.

ஆலயங்களைப் பெரிதாக நிர்மாணிப்பதால் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை.

**-இரா.செல்வவடிவேல்.**

"உந்தக் கோயிலுகளைப் பெரிசாக் கட்டுற காசுக்கு எத்தனை குமருகளைக் கரைசேர்க்கலாம். எந்தத் தெய்வம் சுவாமி எனக்கு இருக்க இடமில்லை எண்டு சொல்லித் திரியுது. எல்லாம் மனிசர் தாங்கள் பெருமையடிக்கிறதுக்கு தெய்வம் சுவாமியெண்டு பகடையளாய் பாவிக்கினம். ஆடம்பரக் கோயிலுகளில அருள் கிடைக்காது கண்டியளே. உதை உந்தக் கோயில் கட்டுற ஆட்கள் இன்னமும் உணர்ந்து நடக்கிறதாத் தெரியேல்லை."

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## திண்மக் கழிவகற்றல்...

'பிலிசரு' நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்று வருட காலத்திற்குமான மொத்த ஒதுக்கீடு 5.675 பில்லியன் ரூபாவாகும்.

எதிர்கால சந்ததிகள் ஆகக் கூடிய மட்டத்தில் வளங்களை மீளவும் பாவித்தல், பாவித்த வளங்களை மீள் சுழற்சிக்குட்படுத்துதல், புதிய வளங்களைக் கண்டுபிடித்தல், என்பனவற்றில் மிகப் பொருத்தமானதும் கழிவுகளை அகற்றுவதில் சூழலுக்குப் பங்கம் ஏற்படாததுமான வழிவகைகளை உருவாக்குதல் மூலம் 'பிலிசரு' நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான இலக்கு அடுத்த 5 ஆண்டுகளுக்குள் திண்மக் கழிவுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகும்.

அறிக்கைகளின்படி நாட்டில் ஆகக் கூடுதலான திண்மக் கழிவுகளை வெளிக் கொண்டுவரும் முதலாவது இடமாக கொழும்பு மாநகரம் காணப்படுகிறது. அதற்கடுத்ததாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் இடம்பிடித்திருக்கின்றன. நமது கழிவுகளைக் கொண்டு ஆண்டுக்குச் சராசரியாக 10000 டொன்சேதனப் பசளையை உற்பத்தி செய்யக்கூடிய கொள்ளளவு நம்மிடம் உள்ளது. இது நமது விவசாயிகள் இப்பொழுது கையாளும் உரப் பாவினையில் மூன்றில் ஒரு பகுதியை ஈடு செய்யப் போதுமானது.

தற்போது முறையற்ற விதத்தில் அப்புறப்படுத்தப்படும் இந்தக் கழிவு-களைக் கொண்டு இவ்வளவு தொகை சேதன வளமாக்கிகளை நாம் உற்பத்தி செய்வோமானால் ஒரு புறம் நமது மண் வளத்தைப் பாதுகாப்பதோடு மறுபுறத்தில் இயற்கைச் சமநிலையைப் பேணிக் கொள்ளவும் பாதுகாப்பான வழி முறையேற்படும். இன்னொரு புறத்தில் உரத்தை வாங்குவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பும் 1.6 பில்லியன் ரூபா பெருந் தொகைப் பணத்தையும் மீதப்படுத்திக் கொள்ள முடியும். இன்னொருவகையில் இரசாயனங்களால் நமது மண்வளம் நஞ்சூட்டப்படுவதையும் உறுதியாகத் தடுத்துக் கொள்ள முடியும்.

இரசாயனப் பாவினை என்பது நிலம், நீர், காற்று என்பனவற்றையும் நாம் உண்ணும் உணவையும் சிறுகச் சிறுக நஞ்சூட்டப்பட்டதாக மாற்றுவதற்கே வழிசெய்கிறது. நாம் உண்ணும் உணவு காய்கறிகள் பழவகைகள் தானியங்கள் குளங்கள் வயல்களிலுள்ள நன்னீர் மீன்கள் இறைச்சிக் கோழி என்பவை இப்பொழுது சிறிதளவேனும் இரசாயனங்கள் கலக்காததாக இல்லை. இவற்றை உண்பதன் மூலம் நமது உடல் இயல்புக்கு மாறான மாற்றங்களுக்குள்ளாகி பலவீனப்பட்டுப் போகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இப்பொழுது பெண் பிள்ளைகள் மிகச் சிறிய வயதில் பருவமடைந்து வருவதைக் குறிப்பிடலாம்.

நமது விவசாயிகள் அமோக விளைச்சலைப் பெறும் பேராசை காரணமாகவும் மேற்கு வல்லாதிக்க வளங்களைச் சுரண்டும் சக்திகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் நயவஞ்சகத்தின்பால் கவரப்பட்டு இயற்கையோடு இணைந்த விவசாயத்தைக் கைவிட்டதனால் இன்று நாமும் நமது எதிர்கால சந்ததியும் நஞ்சுண்ட நோயாளிகளாக வாழ வேண்டியுள்ளது.

இரசாயனங்கள், பூச்சிக்கொல்லிகள், களைநாசினிகள், கிருமி நாசினிகளைப் பாவிப்பதன்மூலம் குறுகிய காலத்தில் அதிகமான விளைச்சலையும் அதன் மூலமாக கூடுதல் வருமானத்தையும் பெறமுடியும் என விவசாயிகள் நம்ப வைக்கப்பட்டிருக்கிறார்கள். உண்மை நிலைமை அதுவல்ல. உண்மையில் இத்தகைய இரசாயனப் பாவினை என்பது ஒப்பீட்டளவில் எமது பாரம்பரிய விவசாயத்தின் மூலம் கிடைத்த பலாபலன்களைக் குறைத்திருக்கவே செய்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில் பார்த்தால் இரசாயன மற்றும் அசேதனப் பசளைப் பாவினையின் மூலம் நமது நாட்டின் மண்வளம் நாசம் செய்யப்பட்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். இதனுடன் இணைந்ததாக ஒட்டுமொத்த சூழல் மாசுபடுவதற்கும் காரணங்களாய் அமைந்து உபாதைகளையும் ஆரோக்கியமற்ற உடல் உளநிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது.

இத்தகையதொரு சாபக்கேடான நிலைமைகளிலிருந்து மீள்வதற்கு எல்லாத்தரப்பினரும் தங்களாலான எல்லா நடவடிக்கைகளையும் இப்பொழுதிருந்தே எடுத்தாக வேண்டும். திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம் அதற்கு ஒரு திறவுகோலாகவும் தொடக்கப் புள்ளியாகவும் இருக்கட்டும்.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி) **தமிழர் அரசியலின்...**

அதன்காரணமாகவே பாராளுமன்றத்தில் தமிழீழத்தை பிரகடனப் படுத்தக் கோரி அமிர்தலிங்கத்துக்கு அவர்கள் நெருக்குவாரம் கொடுத்தனர். ஆனால் இவை அனைத்தும் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி பண்ணிய வெற்று கயமைத்தனங்கள் என்பதை அந்த இளைஞர்கள் புரிந்திருக்கவில்லை. ஆனால் அமிர்தலிங்கமும் அவரது பரிவாரங்களும் தமது உண்மையான இலக்குகளில் கவனமாகவே இருந்தனர்.

தேர்தலில் தமக்கு போடப்படுகின்ற ஒவ்வொரு வாக்கும் தமிழீழத் துக்காகப் போடப்படுகின்ற ஒவ்வொரு ஆணையாகும் என்று தமிழ் மக்களை உசுப்பி விட்டு உணர்ச்சி மேலிட்ட இளைஞர்களிடம் இருந்து இரத்தத் திலகம் பெற்றுக் கொண்ட அமிர்தலிங்கம் போன்றவர்கள் தமது சந்தர்ப்பவாத அரசியலில் சங்கமமானார்கள். இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின் சட்டதிட்டங்களுக்கும் இறைமைக்கும் விசுவாசமாக நடப்போம் என்று இலங்கை பாராளுமன்ற சபாநாயகர் முன்னிலையில் சத்தியம் செய்து எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்து கொண்டார்கள்

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## களையிழந்த...

ஆனாலும் தற்போதுள்ள வாழ்க்கைச் செலவும் பொருளா-தார நிலைமையும் மக்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இல்லை.

மேலோட்டமான பார்வையில் பொருளாதார வளர்ச்சி இருக்கிறது என்று கருதினாலும் கூட அதன் பலாபலன்கள் அடிமட்ட மக்களைச் சென்றடைந்திருக்கிறது என்று கூறிவிட முடியாது. இது தவிர எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விட்டது என்று நம்புவதற்கான வாய்ப்புக்கள் குறைந்திருப்பதால் சமீப காலங்களிலிருந்து மீண்டுமொரு அச்சமும் பீதியும் தரக் கூடிய நம்பிக்கையற்ற போக்குக் காணப்படுகிறது என்று தெரிவிக்கும் அவர், அந்த நம்பிக்கையற்ற போக்குகள் எவை என்பதையும் பின்வருமாறு விளக்குகிறார்.

"தொழில் வாய்ப்புக்கள், குடியேற்றங்கள், மீள் குடி-யேற்றங்கள், முதலீடுகள், அபிவிருத்தித் திட்டங்கள் என்பனவற்றில் பாரபட்சங்களும் அதிகாரத் துஷ்பிரயோகங்களும் ஆக்கிரமிப்புகளும் இடம்பெறுவதான அச்சங்கள் பாதிக்கப்பட்ட மக்களிடம் நிறையவே உள்ளன. போர்ச் சூழலில் இடம்பெற்றதை விட இப்பொழுது நடக்கும் காரியங்கள் மர்மமாக இருப்பதால் மக்களிடம் இத்தகைய அச்சங்கள் இயல்பாகவே தொற்றிக்கொண்டிருக்கிறது. இத்தகைய உளவியல் தாக் கங்கள் சித்திரை வருடத்தைக் கொண்டாடுவதற்கான ஒரு நம்பிக்கையூட்டும் சாதகமான சமிக்ஞையாக இருக்கவில்லை."

இதே வேளை வட பகுதியின் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமையைப் பற்றி அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அவர்கள் விளக்கிச் சொல்கிறார்.

"இம்முறை சித்திரைப் புத்தாண்டை விட அடுத்த வருடம் சிறப்பாகவும் கலகலப்பாகவும் இருக்கும்" என்று உறுதியான நம்பிக்கை தெரிவித்த அவர் ஒப்பீட்டளவில் "போன வருசத்தைவிட இந்த வருடம் மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பி தங்களுடைய அன்றாடக் கருமங்களிலும் விழாக்களைக் கொண்டாடுவதிலும் அக்கறை செலுத்தியிருந்தார்கள். போன முறையை விட சிறப்பாகவே இருந்தது. மருத்து நீர் வைத்து புத்தாடை அணிந்து வழமையான கருமங்களிலும் சமய அனுட்டானங்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

அதேநேரம் இறப்புக்கள் என்ற அந்த இழப்பிலிருந்து மக்களின் மனநிலை உடனடியாக மீண்டுவிடும் என்று சொல்லிவிட முடியாது எனக் குறிப்பிட்ட அவர், ஆனால் மற்றப்படி அதிகளவான மாற்றம் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. தொடக்கத்திலிருந்து இந்த வித்தியாசத்தை நாங்கள் அவதானித்துக் கொண்டுதான் இருக்கிறோம். உடைந்து அழிந்து போனதிலிருந்து மீளக்கட்டப்பட்டு வரும் பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டம் காணப்படுகிறது.

அந்த மாவட்டத்தில் போருக்குப் பின்னரான மீள்குடியேற்றம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகக் கூறிய அரச அதிபர் ரூபவதி அவர்கள், 2009 நவம்பர் காலப்பகுதியிலிருந்து கடந்த வருடம் முற்பகுதி வரையில் எங்களது மீள்குடியேற்றப் பணிகளை செய்திருந்தோம். மக்களுக்கான உதவிகள் கட்டம் கட்டமாகத்தான் இடம்பெற்று வந்தன. அவர்களுக்கான ஆரம்ப கால நடவடிக்கையாக அவசரகால தேவையை நிவர்த்திசெய்யக் கூடியதான நிவாரண உதவிகளே முதலில் வழங்கப்பட்டது. பின்னர் அவர்களுக்கான கட்டுமானத்துக்குத் தேவையான உதவிப் பணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறிப்பாக வீடமைத்தல் இடம பெற்று வருகிறது. கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தற்காலிக கொட்டில்களில் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல பகுதியளவில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கும் அதனை திருத்திக் கொடுக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 2000 க்கு மேற்பட்ட வீடுகளுக்குத் திருத்த வேலைகளைச் செய்துள்ளோம். 4000க்கு மேற்பட்ட புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அதனைவிட புதிய வீடுகளை அமைப்பதற்கு ஜனாதிபதி செயலணி ஆணைக்குழுவிடம் அதிகாரம் பெற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவியுடனும் புதிய வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தற்போது கிளிநொச்சியில் இடம்பெறும் அபிவிருத்திகளைப் பற்றி விவரித்த மாவட்ட அரசாங்க அதிபர்,

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடனும் புதிய வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகின்றன என்பதோடு மக்களின் வாழ்வாதாரத்துக்கும் அதிகமானளவு உதவிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் சொன்னார்.

விவசாயிகளின் விடயத்தில் பயிர்ச்செய்கைகளுக்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் இயந்திர உபகரணங்களை விவசாய அமைப்புக்களூடாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறிய அரச அதிபர் ரூபவதி அவர்கள், அதே வேளை தேவையின் அடிப்படையில் முன்னுரிமை கருதி இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளதால் எல்லோருக்கும் இந்த உதவிகள் கிடைத்துவிட்டது என்று கூறிவிட முடியாது.

தொடர்ந்தும் அரசாங்கத்தினால் அவர்களது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்கும் அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்குமான நம்பிக்கை ஊட்டப்பட்டு வருகிறது. இந்த செயற்றிட்டங்கள் முழுமையாக நிறைவு செய்யப்படுமிடத்து இனிவரும் புதுவருடப் பிறப்புகளும் பண்டிகைகளும் சிறப்புறும் என்பதில் ஐயமில்லை என்று உறுதியான நம்பிக்கை வெளியிட்டார் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அவர்கள்.

அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கூறுவது போன்று பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெறுவதுடன் அவர்களது வாழ்க்கை கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இருந்ததையும் விட இன்னமும் பல மடங்கு ஏற்றம் காண்பதற்கு எல்லாவகையிலும் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

Regd. as a News paper at the G.P.O.(QD)/129/NEWS/201

# இந்தவாரம் உங்கள் பலன்

(21.04.2011 தொடக்கம் 27.04.2011 வரை

## மேடம்

அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு ராகு நன்மை தரும் கிரகமாகும். காதல் விசயங்களில் எதிர்பார்த்த செய்திகள் சற்று கால தாமதமாகவே கிடைக்கும். வெகு காலமாகப் பிரிந்துபோன கணவன் - மனைவி உறவு - களில் இருந்து வந்துள்ள மனக் கசப்புகள் தீர்ந்து ஒன்று சேர வாய்ப்பு உள்ளது. விவசாயம் செய்பவர்களுக்குச் சுமாரான நற்பலன்களைச் செய்யும். நண்பர்களால் ஒரு சிலருக்கு ஆதாயங்களை அடைவீர்கள். கணவன் மனைவி உறவுகளில் நல்ல மனமகிழ்ச்சி உண்டாகும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். தாய் வழிச் சொந்த பந்தங்களின் மூலம் சில ஆதாயங்களை அடைவீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும். இராசியான எண்: -4

## இடபம்

அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு கேது நன்மை தரும் கிரகமாகும். குடும்பத்தில் பல காலமாக ஏற்பட்டு வந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்று குறையக் கூடிய காலமாகும். தேவையில்லாமல் மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு வீண் மனக்குழப்பங்கள் அடைய வேண்டாம். அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல முடிவுகள் கிடைக்கும். காதல் விசயங்களில் மிக எச்சரிக்கையுடன் இருக்கவும். நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும் காலமாகும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதற்கான வங்கிக் கடன்கள் கை வந்து சேரும். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வியாபாரிகள் இலாபம் அடைவார்கள்.

இராசியான எண்: -7

## மிதுனம்

அன்பர்களே, இந்தவாரம் உங்களுக்கு வியாழன் நன்மை தரும் கிரகமாகும். கணினித்துறை சார்ந்தவர்கள், மந்திரிப் பதவிகளை வகிப்பவர்கள் நற்பலன்களை அடைவீர்கள். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் இருந்து நல்ல செய்திகள் வந்து சேர வாய்ப்பு உள்ள காலமாகும். விவசாயம் செய்பவர்கள் கவனமுடன் இருப்பது உகந்ததாகும். பெண் சம்பந்தமான காதல் விசயங்களில் நல்ல செய்திகள் வந்து சேரும். பொருளாதாரத்தில் இது வரையில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். உடம்பில் நரம்பு மற்று எலும்புகள் போன்ற உபாதைகள் வந்து போகலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

இராசியான எண்: -3

## கடகம்

அன்பர்களே, புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைக்க வாய்ப்பு உள்ளது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்து வருவதற்கான முயற்சிகளைச் செய்வீர்கள். மற்றவர்களுக்காக உதவி செய்வதாக எண்ணி சிக்கலில் மாட்டிக் கொள்ளாதீர்கள். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறிச் சிறிது முன்னேற்றமான சூழ்நிலை உண்டாகும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்து இருந்த அரசு உதவித் தொகைகள் கிடைப்பதோடு நினைத்த இடங்களுக்குப் பணி இடமாற்றமும் ஏற்படக் கூடிய காலமாகும். தந்தை மகன் உறவுகளில் வெகு காலமாக இருந்து வந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மிக ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள்.

இராசியான எண்: -8

## சிங்கம்

அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். நண்பர்களால் காரணமற்ற பொருட்செலவுகள் வந்து சேரலாம். உடம்பில் வாயு, வயிறு போன்ற உபாதைகள் வந்து போகலாம். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெற வாய்ப்பு உள்ளது. காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் வந்து சேரும். புதிய கடன்களை வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொண்டு மன மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன் - மனைவி இடையே இருந்து வந்துள்ள கருத்து வேறுபாடுகள் இன்னும் சற்று கால தாமதமாகவே தீரும். வராத பணம் கை வந்து சேர வாய்ப்பு உள்ளது.

இராசியான எண: -9

## கன்னி

அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு வியாழன் நன்மை தரும் கிரகமாகும். பிள்ளைகளால் எதிர்பார்க்காத சில தொல்லைகளும் மருத்துவச் செலவுகளும் ஏற்படலாம். ஒரு சிலருக்குச் சொத்துக்களை விற்பதன் மூலம் பணம் வந்து சேரும். செய்தொழில் சம்பந்தமாகப் புதிய கூட்டு முயற்சிகளைச் சிறிது தள்ளிப் போடுதல் உகந்ததாகும். மற்றவர்களை நம்பிப் பணம் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். குலதெய்வ ஆலய வழிபாடு செய்து வருவது நல்லது. தொலை தூரப் பயணங்களைத் தள்ளிப் போடுதல் நல்லதாகும். திருட்டுப்போன பொருட்கள் திரும்ப வீடு வந்து சேரும். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் தேடி வரும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

இராசியான எண்: -3

## துலாம்

அன்பர்களே, தாயின் உடல் நலை பாதிப்புக்களால் ஏற்பட்டு வந்துள்ள மருத்துவச் செலவுகள் குறையும். உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். புதிய கடன் வாங்கினால் திருப்பிச் செலுத்த இயலாமற் போகுமாகையால் புதியகடன்கள் வாங்குவதை தவிர்க்கவும். மீன் முட்டை மாமிசம் போன்ற உணவுப் பொருட்களின் வியாபாரிகள்,காய்கறிகள் இலை போன்ற பொருட்களின் வியாபாரிகள், மர வியாபாரம் செய்வோர்கள்,வட்டித் தொழிற் செய்வோர்கள்,பழைய கழிவுப் பொருட்களின் வியாபாரிகள்,விஞ்ஞானத்துறைகளைச் சார்ந்த பணியாளர்கள் ஆகியோர்கள் மிகவும் லாபம் அடைவார்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

இராசியான எண்: -4

## விருச்சிகம்

அன்பர்களே, மாணவர்களுக்கு கல்வியில் மிகுந்த கவனமுடன் பயின்று வருதல் நல்லது. உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் எதிர்பாராத திடீர் வரவுகளால் பணம் மற்றும் பொருட் செலவுகள் ஏற்படும். வேலை இல்லாத படித்தவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் வந்து சேரும்.விளையாட்டுத் துறை சார்ந்தவர்கள் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களையும் சலுகைகளையும் பெறுவார்கள். குடும்பத்தில் காரணமற்ற மன குழப்பங்களும் சச்சரவுகளும் வந்து போக இருப்பதால் பொறுமையுடன் இருப்பது நல்லதாகும். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்து போகும். நெடு நாட்களாகத் தடைபட்டு வந்த திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும்.பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

இராசியான எண்: -5

## தனுசு

அன்பர்களே, குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக புதிய கடன் வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய கூட்டுத் தொழில்களைச் செய்வதற்கான முயற்சிகளைத் தள்ளிப் போடவும். கணவன் - மனைவி உறவுகளில் இருந்து வந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மனநிறைவுகளை அடைவீர்கள். தாயின் உடல் நிலை பாதிப்புகள் இன்னும் சிலகாலம் வரை நீடிக்கும். திடீர் அதிர்ஷ்டம் மூலமாகப் பணம் பொருட்கள் வந்து சேரலாம். உடல் நிலையில் கண் காதுகளில் கவனம் தேவை. விசயங்களில் தலையிட்ட வீண் மனச்சிக்கலை விலைக்கு வாங்க வேண்டாம். பிள்ளைகளால் பொருள் வரவுகளும் மனநிம்மதியும் மற்றும் அவர்களுக்கு பரிசு பாராட்டுக்களைப் பெறுவீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன்களை தரும் வாரமாகும்.

இராசியான எண்: -2

## மகரம்

அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்து சொத்துக்கள் கை வந்து சேரும் காலமாகும். விவசாயம் செய்ய வர்களுக்கு சுமாரான விளைச்சல் மூலம் நற்பலன் அடைவார்கள். கணவன் - மனைவியின் உறவுகளில் வெகு காலமாக இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். உறவினர்களால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாக கூடிய காலமாகும். வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளுக்காக மற்றவர்களை நம்பி பணம் பொருட்களை கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். பொருளாதாரம் சுமாராக காணப்படும். நோய்கள் தீருவதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவிசளை நாடிச் செல்லுவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

இராசியான எண்: -6

## கும்பம்

அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். குடும்பத்தில் சகோதர சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமாக பேசி பழகுவதால் வீண்பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம். மாணவர்கள் கல்வியில் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களை பெறுவார்கள். விளையாட்டுத் துறையை சார்ந்தவர்களுக்கு நற்பெயரும் மற்றும் புகழும் உண்டாகும். பூர்வீகச் சொத்து விசயங்களில் மற்றவர்களின் உதவியால் கைவந்து சேரும். கல்வித்துறையில் மாணவர்களுக்கு நல்ல மதிப்பெண்களும் பாராட்டுக்களும் கிடைக்கும். நீண்ட காலமாகப் பிரச்சின்னைகள் உண்டாகிப் பிரிந்துபோன கணவன் - மனைவி இருவரும் திரும்ப ஒன்றுசேர வாய்ப்பு உள்ளது. இது சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

இராசியான எண்: -6

## மீனம்

அன்பர்களே, குழந்தைகளுக்குப் பரிசுகள் மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்கலாம். மாணவர்கள் கல்வியில் நினைத்த கல்லூரிகளில் பயிலும் வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் திருமண விஷயமாக காரணமில்லாத சிற்சில மனக்கசப்புகள் வந்து போகும். புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்காக புதிய கடன்களை வாங்குவீர்கள். வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்க்கும் பொருட்டு பொருட்செலவுகள் உண்டாகலாம். நாட்பட்ட தீராத வியாதிகள் தீருவதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவீர்கள். நெருப்பு சம்பந்தமான தொழில் செய்வோர்கள், அரசு உயர் பதவிகளை வகிப்பவர்கள், வராத கடன் கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல்துறையினர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும்.

இராசியான எண்: -1

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
- காதில பூ கந்தசாமி -

"விழாக்களிலயும் கூட்டங்களிலயும் தலைகாட்டிக் கொண்டு நகர் வலம் வாற சம்பந்தமானவரின்ர நடவடிக்கையள் கொஞ்ச நாளாய் வித்தியாசமாயிருக்குது. பகல் முழுக்க எல்லாற்றை கண்ணிலயும் படுறமாதிரி சுற்றி திரியிறவர், பொழுது மங்கத் தொடங்கினதும் மாயமாய் போறார். ஐயாவுக்கு மாலைக்கண் நோய் ஏதாவது வந்திட்டுதோ எண்டு விசாரிச்சால் அதுவும் இல்லை" எண்டு சம்பந்தமானவருக்கு நெருக்கமான என்ர நண்பர் ஒருத்தர் தகவல் தந்தவர் பாருங்கோ. அந்த நண்பர் சொன்னதிலயிருந்து எனக்கு நித்திரையே வரயில்லையுங்கோ. சம்பந்த மானவரை கிழமைக் கணக்கில் பலோ பண்ணியதிலயிருந்து, அவர் மறைச்சு வைச்சிருந்த எக்கச்சக்கமான வி'யங்கள்! இரவில ஐயா எங்க போனார், என்ன செய்யிறார் எண்டதெல்லாம் கண்டுபிடிச்சிட்டனுங்கோ. அதேமாதிரி ஐயாவையும் வளைச்சுப் பிடிச்சு வாயை திறக்க வைச்சிட்டனுங்கோ.

**கந்:** என்ன ஐயா இது?
**சம்:** காலத்தின் தேவை, பொறுத்துப் பார்த்தோம். பொறுமைக்கும் எல்லையுண்டல்லவா? புதுவழியில் இறங்கிவிட்டேன்.

**கந்:** நீங்கள் இறங்கியிருக்கும் இந்த வழி பற்றி கொஞ்சம் விளக்கமாகக் கூறமுடியுமா?
**சம்:** இதுவொன்றும் புது வழியல்ல. தந்தை செல்வா கூறிய வழி. தளபதி அமிர் கர்ச்சித்த வழி. தம்பி பிரபா செய்து காட்டிய வழி. எனவே மக்களுக்கு இது பழக்கப்பட்ட வழி.

**கந்:** இது பற்றி மக்களுக்கு கூறும் யோசனை இல்லையா?
**சம்:** மக்களுக்கென்ன, உலகுக்கே கூறிவிட்டேன். "புதுவழி நாடும் சூழல் வரும் என" எச்சரிக்கை மணி ஒலித்துவிட்டேன்.

**கந்:** இப்படித்தான் 70 களின் இறுதியிலும், பேசிப் பலன் இல்லை. கருவி கொண்டு எதிரிக்கு பாடம் புகட்ட வேண்டும் எனக் கர்ச்சித்தீர்கள். இளைஞர்களை உசுப்பேற்றினீர்கள். அதன்வினை கடந்த முப்பது வருடமாக நாட்டில் இரத்த ஆறு ஓடியது. இன்று அனைத்தும் அழித்து நிர்க்கதியாக நிக்கிறோம்... இன்னும்....
**சம்:** ஆம். மறுக்கவில்லை. நாங்கள் சொல்வதைக் கேட்டுக் கொதித்தெழுந்த தம்பிமார் இரத்த திலகமிட்டனர். கருவி ஏந்தி எதிரியின் களம் புகுந்தனர். ஆனால் வீரம் இருந்த அளவிற்கு அவர்களிடம் விவேகம் இருக்கவில்லை. அதுவும் வல்வெட்டி குத்தியன் பிரபாவிடம் மூளையே இருக்கவில்லை. விவேகமாய் சிந்தித்தவர்களையெல்லாம் வீணாய் போனவர்கள் என போட்டுத் தள்ளினார்கள். அதன் விளைவுதான் அவர்களால் கையகப்படுத்தப்பட்ட போராட்டமும் அவர்களும் இறுதியில் வீணாய் போனார்கள்.

**கந்:** அவர்களின் இறுதிக் காலத்தில் அவர்களின் போக்குகளை ஆதரித்து ஆலவட்டம் பிடித்தவர்களில் நீங்களும் ஒருவர்தானே!
**சம்:** (சற்றுக் கோபமாக) நான் ஆலவட்டம் பிடித்திருக்காவிட்டால், என்னிடம் குண்டுடன் ஆளை அனுப்பியிருப்பார்கள். அதனால்தான் போனால் போகட்டும் என ஆலவட்டம் பிடித்தேன்.

**கந்:** உங்களது இந்த ஆயுதப் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு இருக்கும் எனக் கருதுகின்றீர்களா?
**சம்:** சாம, பேத, தான, தண்டம்... இதுதான் தம்பி பிரபா காட்டிக் கொடுத்த தாரக மந்திரம். இவ்வழியில் சென்றால் மக்கள் எல்லோரும் எனக்கு தருவார்கள் அமோக வந்தனம்.

**கந்:** இறுதியாக ஒரு கேள்வி. அதுவும் "ஓவ் த றெக்கோர்ட்" பாணியில் கேட்கிறேன். இந்த வழிமுறையில் தங்களின் உண்மையான நோக்கம் என்ன?
**சம்:** இந்த ஜடத்தை விட்டு உயிர் பிரியும் வரை பதவி, அதிகாரங்களுடன் பெயரும் புகழுமாக வாழ்ந்து மறைய வேண்டும். அதற்காக யாருடைய காலைப் பிடிக்கவும் தயங்கமாட்டேன். யாரது காலைவாரவும்பின்நிற்கமாட்டேன்.

இறுதிக் கேள்வியும் பதிலும் ஒப் த றெக்கோர்ட் தானா என்பதை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்கிறார்.

யாவும் கலப்படமற்ற கற்பனை




வியப்புக்கள் அடுத்தவாரம்...

Regd. as a News paper at the G.P.O.(QD/129/NEWS/2011)



# ஓல்ட் இஸ் கோல்ட்

எப்பொழுதுமே வயது முதிர்ந்த பெரியவர்கள் எடுக்கின்ற தீர்மானங்களில் அனுபவப்பட்டவிரின் விளைவான பக்குவமும் தெளிவும் ஆழமாகப் பதிந்திருக்கும். இதனால் தீர்மானங்கள் சிறந்தவையாகவும் இருக்கும். அதேபோல், வயது முதிர்ந்த யானைகள் ஆபத்தான கட்டங்களில் சிறந்த முடிவுகளை எடுக்கின்றன என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். பொதுவாக யானைகளுக்கு ஞாபகசக்தி அதிகம். பழைய அனுபவங்களைக் கொண்டே அவை இந்த முடிவுகளை எடுக்கின்றன. ஆபிரிக்க யானைகள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் முடிவில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. கூட்டமாக வாழும் யானைகளுள் மிகவும் வயதான யானையே இக்கட்டான கட்டங்களில் மிகச் சிறந்த முடிவுகளை எடுக்கின்றது. தன்னுடைய ஞாபகத்தில் உள்ள முன்னைய அனுபவங்களின் அடிப்படையிலேயே இந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றன. கூட்டமாக வாழும் யானைகள் மத்தியில் தலைமைத்துவத்துக்கு வயதுமிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. அதன் நீண்ட ஆயுள் அதற்கேற்ற மூளை வளர்ச்சி என்பன இங்கு பிரதான இடம்பிடிக்கின்றன.

சிங்கங்களுள் நன்கு வளர்ந்த சிங்கங்கள் யானைகளை வேட்டையாடி இடைஞ்சல் ஏற்படுத்தக் கூடியவை. இந்த சிங்கங்களின் கர்ச்சனை சத்தம் கேட்டவுடன் அதைக் கூர்ந்து கவனித்து கூட்டத்தின் தலைமை யானை தனது முன்னைய அனுபவங்களின் அடிப்படையில் செயற்பட்டு சிறந்த முடிவு-களை எடுத்து பதுங்குவதற்கு வழிகாட்டி தனது கூட்டத்தைக் காப்பாற்றுகின்றது என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.


பார்த்தீர்களா, 'ஓல்ட் இஸ் கோல்ட்' என்பது யானைகளுக்கும் பொருந்தும்.



# இயந்திரப் பறவை

பறவையைக் கண்ட மனிதன் விமானத்தைப் படைத்தான். அத்துடன் ஓய்ந்து விடவில்லை. தொடர்ந்தும் சிந்திப்பதன் விளைவாக தொழில்நுட்பம் வளர்ந்து கொண்டே போகிறது. ரோபோ என்னும் இயந்திர மனிதனைக் கண்டுபிடித்தான். ஓயவில்லை. தொடர்ந்தும் முயற்சித்ததன் விளைவு இயந்திரப் பறவை யையும் கண்டு பிடித்துவிட்டான் அதை யே நீங்கள் படத்தில் காண்கிறீர்கள்.

பறவைகளே நம்மவர்கள் தானோ எனச் சந்தேகம் கொள்ளுமளவுக்கு தத்ரூபமாக அமைந்துள்ள்து இந்த இயந்திரப் பறவை.



# ஊடுருவல்

எமது நாடுகளில் அபிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும் போது, குறித்த திட்டத்திற்கு ஏதாவது கட்டிடங்கள் தடையாக இருப்பின் அவற்றை அழித்துவிடுகின்ற பல நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அவற்றில் சில, மாதனமுத்தன் கதை யாக அமைந்த சம்பவங்களும் உண்டு. ஆனால் யப்பானியர்கள் கொஞ்சம் சிந்தித்துச் செயற்படுபவர்கள்.

வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு திட்டமிட்ட யப்பானியர்கள் தங்கள் திட்டத்திற்கு குறுக்கே 16 மாடிக் கட்டடம் ஒன்று இருப்பதை அவதானித்தார்கள். எடுத்தோம் கவுத்தோம் எனத் திட்டங்களை வகுக்காது சிந்தி தார்கள். பலன் கிடைத்தது. கட்டடமும் பாதுகாக்கப்பட்டது. நெடுஞ்சாலைக்கான திட்ட வரைபிலும் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை. அதனை ஊடறுத்து செல்லும் வகையில் நெடுஞ்சாலையை அமைத்துவிட்டார்கள். இது கட்டட தொழி ல் நுட்பத் திறமையில் மிகப் பெரிய புதுமை யும், சாதனையும் ஆகும். இந்த புதிய யோ-சனையானது, நிலப் பற்றாக்குறைக்கு தீர்வு காண்கின்ற திட்டத்திற்கு உதவியாக இருக்கும் என கருதப்படுகிறது.

# காந்தச் சிறுவன்

மந்திரம், தந்திரம், இந்திர ஜாலம் எதுவும் கிடையாது. இந்தச் சிறுவனின் உடலில் உலோகப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள் ஆகியன ஒட்டிக் கொள்கின்றன. சிறுவனின் பெயர் Bogdan. சேர்பியன் நாட்டைச் சேர்ந்தவர். வயது - 07. இவர் காந்த சக்தியுடனேயே பிறந்து இருக்கின்றார். இவரது உடலுக்கு உலோகப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள் ஆகியவற்றை கவர்ந்து இழுக்கின்ற காந்தசக்தி இயல்பாகவே இருக்கின்றது. இவர் எந்தவொரு கட்டத்திலும் தொலைக்காட்சி, கணினி ஆகியன உட்பட இலத்திரனியல் சாதனங்கள் முன்பாக செல்கின்றமை கூடாது என்று வைத்திய நிபுணர் கள் கண்டிப்பாக சொல்லி இருக்கின் றார்கள்.



# மானங் காத்த வீரன்

இந்திய அணி உலகக் கோப்பையைக் கைப்பற்றினால் நிர்வாண ஓட்டம் ஓடப்போவதாக அறிவித்திருந்தார் இந்திய மொட்ல் அழகி பாண்டே. அவர் ஓடினாரோ இல்லையோ கிரிக்கெட் சரித்திரத்தில் ரசிகை ஒருவர் நிர்வாணமாக மைதானத்தை வலம் வந்து வீரர்களை குசிப்படுத்த முயன்றிருக்கிறார். ஆனால் பொறுப்புமிக்க கிரிக்கெட் வீரர் தனது துடுப்பால் அந்தப் பெண்ணின் மானத்தைக் காப்பாற்ற முயற்சிக்கிறார். இவரைத்தான் மானங்காத்த வீரன் என்று சொல்லுவர்.



Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...



C/638

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 08 வியாழக்கிழமை (21.04.2011) | பக்கங்கள் IV | ஓசை – 202

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமென்றை மேற்கொண்டு பங்களாதேஷ் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை நாடு திரும்பினார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. ஜனாதிபதியின் இந்த விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் பலப்படுத்தியுள்ளது. இரு நாடுகளுக்கும் பயன்மிக்க நான்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்த விஜயத்தின்போது பங்களாதேஷ் ஜனாதிபதி சிலுர்ரஹ்மான் -



பிரதமர் ஷேக் ஹசினா, வெளிவிவகார அமைச்சர் டிப்புமொனி, நிதியமைச்சர் அப்துல் மால் ஏ முஹித் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பேகம் காலிதா சியா ஆகியோருடன் ஜனாதிபதி முக்கியத்துவம் மிக்க பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார்.

## இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

### கேட்கிறது மனித உரிமை கண்காணிப்பகம்

(ஜெனிவா)

இலங்கை மீதான யுத்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் கோரியுள்ளது. உலகின் பலம்பொருந்திய நாடுகளில் ஒன்றாக உருவாக வேண்டுமானால் இந்தியா மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குரல் கொடுக்க வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது அரசாங்கமும், புலிகளுக்கும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறிச் செயற்பட்டதாக ஐக்கிய நாடுகளின் நிபுணர் அறிக்கை வெளியிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் நிரந்தர உறுப்புரிமை பெற்றுக் கொள்வதற்காக இந்தியா முயற்சி செய்து வருகின்ற சந்தர்ப்பத்தில், பிராந்திய நாடுகளின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

(ivஆம் பக்கம் பார்க்க)

# உயர் பாதுகாப்பு வலயம் என்ற ஒரு பகுதி இனிவருங்காலங்களில் இருக்க முடியாது

## பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசின் கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக உயர்பாதுகாப்பு வலயம் என்று இனிவரும் காலங்களில் இருக்க முடியாது என்பதுடன், தற்போது உயர்பாதுகாப்பு வலயங்களாக இருந்து வரும் பகுதிகளிலுள்ள மிதிவெடி மற்றும் வெடிபொருட்களை அகற்றுவது தொடர்பிலும் அப்பகுதிகளில் மக்களை மீளக்குடியேற்றுவது, அபிவிருத்தி செய்வது போன்ற செயற்றிட்டங்களை முன்னெடுப்பதிலும் உரிய தரப்பினரூடாக விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

(iii பக்கம் பார்க்க)

## சதித்திட்டங்கள் தொடர்பில் எச்சரிக்கை தேவை




(கொழும்பு)

நாட்டுக்கு எதிராக வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் சதித்திட்டங்கள் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டியது வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களின் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பங்களாதேஷுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்நாட்டில் வாழ்கின்ற இலங்கையர்களை சந்தித்து கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அங்கு மேலும் அவர் தெரிவிக்கையில், இலங்கையில் அனைத்து பகுதி மக்களும் எந்தவிதமான இன மத பேதமும் இன்றி ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். மூன்று தசாப்தகால பயங்கரவாதம் இன்று துடைத்தெறியப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழ்கின்ற அனைத்து இலங்கையர்களும் நாடு மற்றும் மக்கள் தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## போர்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து நாட்டைப்பாதுகாக்க என்னால் முடியும்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்களில் இருந்து இலங்கையை பாதுகாக்க போருக்கு கட்டளை வழங்கிய தளபதி என்ற முறையில் தன்னால் மாத்திரமே முடியும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வெள்ளைக் கொடி விவகார வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக அழைத்து வரப்பட்ட போதே சரத் பொன்சேகா இதனைக் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்திற்கு, தானே கட்டளைகளை வழங்கியதாகவும், இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்களில் இருந்து தன்னால் மாத்திரமே நாட்டைப் பாதுகாக்க முடியும் எனவும் சரத்பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

(ivஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைப்பாதுகாத்துக்கொள்வதற்கு விசாரணைகளை நடத்துவதே ஒரேவழி

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டை பாதுகாத்து கொள்வதற்குள்ள ஒரே வழி உள்ளக விசாரணைகளை நடத்துவதே சிறந்த வழிமுறையாகும். ஆர்ப்பாட்டங்களை நடத்துவதன் மூலம் அந்த அறிக்கையை மாற்றியமைக்க முடியாது. இதனை அரசாங்கம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இது போன்ற சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கைகளால் நாட்டிற்கு மேலும் அவப் பெயரே ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுக் காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

நிபுணர் குழுவின் அறிக்கையால் இலங்கையின் மதிப்பு சர்வதேச ரீதியில் மழுங்கடிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையை இலங்கையின் பிரஜைகள் என்ற வகையில் இலங்கைக்கு பாதகமானதாக அமைந்துள்ள இந்த அறிக்கையினை சாதகமானதாக மாற்ற வேண்டிய கடமை அனைவருக்கும் உள்ளது.

எந்தஅரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், தாய்நாடு என்ற நிலையில் சிந்தித்து

(ivஆம் பக்கம் பார்க்க)

# தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி செலுத்துவோருக்கான கொடுப்பனவு கிடைக்காதோர் தொடர்புகொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியினைச் செலுத்துவோருக்கான முக்கிய அறிவித்தல் ஒன்றினை உள்நாட்டு இறைவரித்திணைக்கள யாழ். பிராந்திய நிலைய பிரதி ஆணையாளர் பாலசுந்தரம் சிவாஜி விடுத்துள்ளார்.

அவ்வறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரிக்குப் பொறுப்புடையவர்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் ஏனைய விபரங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ். பிராந்திய அலுவலகத்தினால் கொழும்பிலுள்ள அதன் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, இவ்வரிக்கான முதல் காலாண்டிற்கான வரி விபரத்திரட்டும் (NBT Return) கொடுப்பனவுப் படிவங்களும் கொழும்பு தலைமை அலுவலகத்தினால் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, கணினித் தரவுச் செயன்முறையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக சில வரிசெலுத்துவோருக்கு அவை கிடைக்கவில்லை எனவும், கணினியில் தரவு உள்ளீடு செய்வதில் சில தவறுகள் ஏற்பட்டுள்ள எனவும் அறியப்படுகிறது. இது தொடர்பில் வரி செலுத்துவோர் பின்வரும் முக்கிய விடயங்களை அனுசரிக்குமாறும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வரி விபரத்திரட்டும் மற்றும் கொடுப்பனவுப் படிவங்களும் கிடைக்காத தனிப்பட்ட வியாபாரிகள் தண்டப்பணம் செலுத்துவதிலிருந்து தவிர்க்கும் பொருட்டு உடனடியாக எமது பிராந்திய அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து, ஆவன செய்யுமாறும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பங்குடமை வியாபாரமானது பங்குடமையின் பெயரில் அல்லாது தனிப்பட்ட ஒரு பங்காளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்குமாயின், எவ்வித கொடுப்பனவும் மேற்கொள்ளாது உடனடியாக எமது அலுவலகத்திற்கு வியாபாரப் பெயர்ப்பதிவுச் சான்றிதழ் மற்றும் பங்காளர்களின் தேசிய அடையாள அட்டைப் பிரதிகளுடன் சமூகம் தரவும்.

இவ்வரி மாதாந்தம் செலுத்தப்படுவதுடன், வரி விபரத்திரட்டு காலாண்டு அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும் என்பது எல்லோரும் அறிந்ததே. மேலே தெரிவிக்கப்பட்ட தாமதம் காரணமாக ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய கொடுப்பனவுப் படிவம் கிடைத்தவர்கள் மார்ச் மாதத்திற்குரிய கொடுப்பனவுப் படிவத்தில் (வரிக்காலக் குறியீடு 11033) முதல் மூன்று மாதங்களுக்குரிய வரிக் கொடுப்பன வினையும் செலுத்த முடியும்.

வரி விபரத்திரட்டைப் பூரணப்படுத்துவதில் ஏதாவது சிக்கல்கள் இருக்குமாயின், எமது அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து எமது அலுவலர்களின் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும்,

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் தொடர்பில் மேலதிக சேவைகளினைப் பெறுவதற்கு இன்று எமது அலுவலகம் மாலை 5.00 மணி வரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருவதோடு, மேலதிக விளக்கங்கள் தேவைப்படுவோர் 021 222 2076, 071 444175 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாவலர் வீதியின் அவலநிலை பயணிகள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நாவலர் பாடசாலை அமைந்துள்ள நாவலர் வீதி மிகவும் மோசமாகக் காணப்படுகின்றது.

கே.கே.எஸ் வீதி மனோகரா சந்தியிலிருந்து ஆரம்பித்து கஸ்தூரியார் வீதிக்குச் செல்லும் 100 யார் தூரமுள்ள வீதி மட்டும் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இக்குறுகிய வீதி செப்பனிடப்படாததினால் இவ்வீதியினால் செல்லும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அதிக பாதிப்பை மேற்கொள்கின்றனர்.

வாகனங்களில் செல்பவர்கள் பயந்து பயந்து வாகனத்தைச் செலுத்த வேண்டியதைக் காணக்கூடியதாகவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் இச்சிறிய அளவிலான பாதையை உடன் செப்பனிட வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (19)

## மாமரங்கள் கத்தரித்தல் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சிநெறி இன்று

(யாழ்ப்பாணம்)

மாமரங்களைக் கத்தரித்தலும் சிறப்பாகப் பயிற்றுவித்தலும் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சி நெறியானது கைதடி விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள யாழ். சந்திரபுரம் ஸ்கந்தவரோதய வித்தியாசாலையில் இன்று காலை 10.00 மணிக்கு நடாத்தப்படவுள்ளது. மாம்பழங்களின் உற்பத்தியை அதிகரிப்பதுடன், தரத்தினையும் மேம்படுத்தும் நோக்குடனேயே இப்பயிற்சி நெறியானது ஒழுங்கு செய்யப்படுகின்றது.

இப்பயிற்சி நெறியில் - தற்போது மாம்பழங்களிற்கு ஏற்பட்டுள்ள சந்தை வாய்ப்பும் சந்தை வலையமைப்பும், பழங்களைச் சந்தைப்படுத்துவதில் பழமுதிர்சோலையின் பங்களிப்பு, மாமரங்களில் கத்தரிப்பு, நோய் வாய்ப்பட்ட மற்றும் பீடைகளினால் பாதிக்கப்பட்ட கிளைகளை வெட்டி அகற்றல், குருவிச்சை போன்ற ஒட்டுண்ணித் தாவரங்களினால் பாதிக்கப்பட்ட கிளைகளை வெட்டி அகற்றல், அளவுக்கதிகமாக அடர்த்தியாக வளர்ந்த கிளைகளை வெட்டி அகற்றல், நோய் மற்றும் பீடை முகாமைத்துவம், பசளைப் பாவனையும், நீர் முகாமைத்துவமும், அறுவடையும் அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பமும் போன்ற முதலான விடயங்களை உள்ளடக்கியதாக இப்பயிற்சி நெறியானது அமையும்.

இப்பயிற்சி நெறிக்கு மாமரச் செய்கையாளர்கள், விவசாயிகள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதி விவசாயப் பணிப்பாளர் சி. சிவகுமார் கேட்டுக் கொள்கின்றார்.

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

2011ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருதுக்கு கலைத்துறையில் விசேட பங்களிப்பு வழங்கி வரும் முஸ்லிம் கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம். 60 வயதைப் பூர்த்தியானவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் பத்திரத்தை முஸ்லிம் சமய பண்பாட்டுத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் 30-06-2011இற்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

விண்ணப்பிக்க விரும்புவோர கீழ்காணும் விலாசத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். பணிப்பாளர், வை.எல்.எம். நவவி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக் களம், 180, டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10. தொலைபேசி இல: 011 2691874. (19)

## பண்ணை வீதியில் புதிய பாலம் நிர்மாணிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் பண்ணை வீதியில் சிறுத்தீவிற்கு மேற்காக ஆழமான கடற்பகுதியில் புதிய பாலமொன்றை நிர்மாணிக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்கவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள பிரதிப் பணிப்பாளர் இ. ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் ஏற்கனவே, இருக்கின்ற பிரதான பாலத்தை விட மேலும் ஒரு பாலம் அமைய வேண்டியதன் தேவை குறித்து யாழ். கடல் நீரேரி மீனவர் சமாச பிரதிநிதிகளும் மற்றும் கடல் வளவியலாளர்களும் முன்வைத்த கோரிக்கைகளை அடுத்து, இது குறித்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இக்கோரிக்கை குறித்து தெளிவுபடுத்தியதுடன், நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து இப்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை புதிய பாலமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிய வருகின்றது. (பா)

## ஓய்வூதியத்திட்ட கருத்தரங்கு

சமூக மேம்பாட்டுத்திட்டத்தின் 'ஆ' பிரிவு யாழ். மாவட்ட அரச அதிபரின் வழிகாட்டலில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் தொடர்பான கருத்தரங்கு கரணவாய் கிழக்கு மீள் எழுச்சித்திட்ட கிராமத்தில் யாழ். மாவட்ட இணைப்பாளர் பிரதீபன தலைமையில் நடைபெற்றது.

இதில் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் 'ஆ' பிரிவில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான ஓய்வூதியத் திட்ட நடைமுறைகள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (18)

## விடுதி இலக்கப் பெயர்ப்பலகை பொருத்தல்; பொதுமக்களின் சிரமங்கள் இனிக்குறையும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளுக்கு விடுதி இலக்கம் மற்றும் விடுதியின் பெயர் விபரங்கள் அடங்கிய பெயர்ப்பலகைகள் புதிதாக பொருத்தப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட போதனா வைத்தியசாலையின் கட்டட புனரமைப்பு வேலைகளின் நிமித்தம் பல நோயாளர் விடுதிகள் இடமாற்றப்பட்டு வெவ்வேறு பகுதிகளில் இயங்கி வருகின்றன.

இவற்றை நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் மற்றும் பலரும் இனம் காணுவதில் பல்வேறு சிரமங்களை அண்மைக் காலமாக எதிர்நோக்கி வருகின்றனர். தற்சமயம் புதிதாக பொருத்தப்பட்டு வருகின்ற பெயர்ப் பலகைகளினால் மேற்படி பொதுமக்களுக்கு இருக்கும் மேலதிக சிரமம் தவிர்க்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## 'கெல்மற்' இன்றி வாகனம் செலுத்துவோரின் வழக்குகளே யாழ். நீதிமன்றில் அதிகம்

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களைச் செலுத்துவோர் மற்றும் 'கெல்மற்' இன்றி மோட்டார் வாகனத்தைச் செலுத்துவோர் தொடர்பான வழக்குகளே யாழ். நீதிமன்றத்திற்கு தற்சமயம் பொலிஸாரினால் எடுத்துவரப்படுவதாக யாழ். நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

சமாந்தரமாக சைக்கிள்களில் பயணிப்பவர்கள் மற்றும் சட்ட விரோத மதுபான உற்பத்தியில் ஈடுபடுவோர் குறித்த வழக்குகள் குறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்த அவர், சிவில் வழக்குகளே அதிகமாக வருவதாகக் குறிப்பிட்டார்.

புதுவருட தினத்திற்கு பின்பு குற்றச் செயல்கள் குறைந்துள்ளமையை இது எடுத்துக்காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

## மிதிவெடி செயற்பாட்டு விழிப்புணர்வுக் கண்காட்சி



(படப்பிடிப்பு: தமிழ்வாணன்)

(அலுவலக செய்தியாளர்)

வடபிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினால் மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்விற்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு இரண்டு நாள் கண்காட்சியும் கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளும் நேற்று யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகின.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வு இன்றும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இராணுவ பொறியியல் படைபிரிவு, கலோரஸ்ட் தினேஷ் கண்ணிவெடியகற்றும் பிரிவு என்பன பங்கேற்று நடாத்துகின்றன.

நேற்றைய ஆரம்ப நாள் நிகழ்வுகளை யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வி. கணேசராசா, இலங்கை இராணுவ பொறியியல் பிரிவு அதிகாரி மேஜர் இம்புள்தெனிய, மிதிவெடி செயற்பாட்டு அலுவலக உதவியாளர் ஆர். பகீரதன், சர்வதேச மிதிவெடி செயற்பாட்டு அலுவலக தொழில்நுட்ப ஆலோசகர் யான்டாவியல் ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்ததுடன், கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள், கண்ணிவெடிகள், வெக்காத வெடிபொருட்கள் மற்றும் வெடிபொருட் தொகுதிகளைப் பார்வையிட்டதுடன், மிதிவெடியகற்றல் தொடர்பான அறிவூட்டல் நடவடிக்கைகளையும் காட்சிப்படுத்தல்களையும் கண்டுகளித்தனர்.

அத்துடன் இராணுவ பொறியியல் படைப் பிரிவினரது மோப்பநாய் ஊடான மிதிவெடியகற்றும் செயன்முறையும் காட்சிப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து விளையாட்டு மற்றும் கலை நிகழ்வும் இடம்பெற்றன. இதில் பொதுமக்கள், மனித நேயக் கண்ணிவெடியகற்றும் நிறுவனங்களின் பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (பா)

# கிடைக்கப் பெறுபவற்றைக் கொண்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்தவேண்டும்

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கிடைக்கின்ற வாழ்வாதார உபகரணப் பொருட்களைக் கொண்டு பயனாளிகள் நிறைவான பொருளாதார வளத்தினை மேம்படுத்த வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தீவகம் தெற்கு உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் க.சிறிமோகனன் தலைமையில் நடைபெற்ற வாழ்வாதார உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நிறைவான அபிவிருத்தி நிறைவான பயனடைவு என நாம் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமானால் உங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான உறவுகள் பலப்படவேண்டும். அதனூடாக அபிவிருத்தி தொடர்பான பல விடயங்களை சாதிக்கக் கூடியவாறு இருக்கும் எனத் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட 15 பயனாளிகளுக்கு கடற்தொழில் உபகரணங்கள், விவசாய உபகரணங்கள், தையல் இயந்திரங்கள் நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பவற்றை ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் ஊர்காவற்துறை அமைப்பாளர் காந்தன், யு.எஸ்.எயிட் நிறுவன அலுவலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய தவக்கால நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கும் வாழும் கத்தோலிக்க மக்களால் இன்று தொடக்கம் பரிசுத்த வாரத்தின் பெரிய வியாழன், பெரிய வெள்ளி உயிர்த்த ஞாயிறு ஆகிய தினங்கள் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளன. இதன்படி இன்று பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பெரிய வியாழன் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு ஆலய பங்குத் தந்தை அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

மறுநாள் பெரிய வெள்ளி வழிபாடுகள் பிற்பகல் 5.00 மணிக்கும், அதனைத் தொடர்ந்து ஆண்டவரை சிலுவை ஏற்றி இறக்கும் நிகழ்வும், ஆசந்திப் பவனியும் இடம்பெறும்.

சனிக்கிழமை நள்ளிரவு 11.45 மணிக்கு உயிர்த்த ஞாயிறு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதுடன், ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலியின் பின்பு உயிர்த்த ஆண்டவரின் திருச்சொரூப பவனி ஆரம்பமாகும். (21)

# அஞ்சல்துறை முறைகேடுகளை ஆராய விசேட குழு அமைக்க அனுமதி

அஞ்சல் மாஅதிபருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்து விசாரிப்பதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அஞ்சல் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார். தொழிற்சங்கங்களுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட விதத்தில் இந்தக் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அஞ்சல் மாஅதிபருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், தற்சமயம் அஞ்சல் திணைக்களத்தின் செயற்பாடுகள், அஞ்சல் சேவை அமைச்சின் செயலாளரின் கண்காணிப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் இன்று கம்பன் விழா கோலாகலமாக ஆரம்பமாகின்றது

(கொழும்பு)

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் இவ்வாண்டுக்கான கம்பன் விழா நிகழ்வுகள் இன்று தொடக்கம் நான்கு தினங்கள் கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ணமிசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 5.00 மணியளவில் ஸ்ரீ ஐஸ்வரிலஷ்மி திருக்கோவிலில் இருந்து விழா மண்டபத்தை நோக்கி தவில், நாதஸ்வர வித்துவான்களினதும், கீழைத்தேச வாத்திய இசையுடனும் நிறைகுட பவனியுடன் ஊர்வலம் விழா மண்டபத்தைச் சென்றடையும். முதல் நாள் நிகழ்வுகள் கொழும்பு கம்பன்கழக தலைவரும் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசருமான சி. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அறிஞர்களின் சிறப்புரைகளும், நடன நிகழ்ச்சியும், கம்பன்புகழ் விருது, கௌரவ விருதுகளும் வழங்கப்படவுள்ளன. இம்முறை கம்பன் புகழ் விருது பத்மஸ்ரீ டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளதுடன் பல பிரமுகர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். இதேவேளை, அறிஞர்களின் நூல் வெளியீட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# வடக்கு - கிழக்கில் முக்கிய தலங்களை மரபுரிமைச்சின்னங்களாக்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் முக்கிய தலங்களை உலக மரபுரிமைச்சின்னங்களாகப் பிரகடனப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான பிரேரணையை ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, பண்பாடு, கலாசாரப் பேரவையான யுனெஸ்கோவுக்கு சமர்ப்பிக்க தேசிய மரபுரிமைகள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கும் புராதன மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த கோட்டைகள், பழங் காலத்துறைமுகங்கள், பழங் கால பௌத்த மற்றும் இந்துக் கோவில்கள் ஆகிய முக்கியத் தலங்களை முதலில் தேசிய மரபுரிமைகளாகப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் பின் அவற்றை உலக மரபுரிமைகளாகப் பிரகடனப்படுத்துமாறு தேசிய மரபுரிமைகள் அமைச்சு யுனெஸ்கோ அமைப்பிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளது. மூன்று தசாப்த யுத்தம் காரணமாக தடைப்பட்டிருந்த தொல்பொருள் ஆய்வுப் பணிகள் தற்போதைக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது.

# மீண்டும் விமான சேவையை ஆரம்பிப்பது பற்றி ஆராய்வு

(கொழும்பு)

செக் குடியரசுக்கும் இலங்கைக்கும் இடையே நேரடி விமான சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் டி.எம்.ஜயரத்னவுக்கும், செக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் மிலோஸ்லோ ஸ்டாசெக்கிற்கும் இடையில் பிரதமரின் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போது இது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளினதும் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக செக் குடியரசுக்கான நேரடி விமான சேவைகளை ஆரம்பிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய பிரதமர், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு செக் குடியரசு தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கும் செக் குடியரசுக்கும் இடையிலான நேரடி விமானசேவைகள் கடந்த 1997 ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா நகர சபையின் அவலநிலை; செலவீனங்களுக்கு நிதி பெறுவதில் சிரமம்

(வவுனியா)

வவுனியா நகர சபையின் மாதாந்தக் கூட்டங்கள் கடந்த மூன்று மாதத்திற்கு மேல் நடைபெறாததினால், நகர சபையின் நிர்வாக செலவீனங்களுக்குரிய நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

ஆனாலும், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளருடைய விசேட அனுமதியுடன் குறிப்பிட்டளவு நிதியைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது என நகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சபைச் செயற்பாடுகள் முடங்கிய போதிலும், நகர சபையின் அனைத்துச் செயற்பாடுகளும் எந்தவித தடையுமின்றி நடைபெறுகின்றது.

புதிதான வேலைத்திட்டங்கள் எதுவும் நடைபெறவில்லை. இதற்கிடையில் எதிர்வரும் சனிக்கிழமை வவுனியாவில் உள்ள பொது அமைப்புகள் கலந்துகொள்ளும் முக்கிய கலந்துரையாடல் நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நகர சபைக்குப் புதிய தலைவரை நியமிக்கக் கோரும் தீர்மானம் இங்கு பிரகடனம் செய்யப்பட்டு தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடத்திற்கு அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிய வருகின்றது. (39)

# ஜப்பானின் யுத்தக் கப்பல்கள் இரண்டு இலங்கைக்கு வருகை

ஜப்பானின் இரண்டு யுத்தக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தினை வந்தடைந்துள்ளன. கிரிசம் மற்றும் உதாச்சி என்ற இரண்டு கப்பல்களே கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளன. இரண்டு நாடுகளினதும் இராணுவங்களுக்கு இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் இந்த இரண்டு யுத்தக் கப்பல்களும் நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சோமாலியா மற்றும் ஈடன் வளைகுடாவை அண்மித்த பகுதிகளில் பயணிக்கும் கடற்கொள்ளையர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இந்த இரண்டு கப்பல்களும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# உயர்பாதுகாப்பு..

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போது அங்கு தலைமையுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களுடைய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் விதமாக அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் ஏனைய அமைப்புக்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். அரசின் கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக உயர்பாதுகாப்பு வலயம் என்று இனிவரும் காலங்களில் இருக்க முடியாது என்பதுடன், தற்போது உயர்பாதுகாப்பு வலயங்களாக இருந்து வரும் பகுதிகளிலுள்ள மிதிவெடி மற்றும் வெடிபொருட்களை அகற்றுவது தொடர்பிலும், அப்பகுதிகளில் மக்களை மீளக் குடியேற்றுவது, அபிவிருத்தி செய்வது போன்ற செயற்றிட்டங்களை முன்னெடுப்பதிலும் உரிய தரப்பினரூடாக விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் எனது அமைச்சின் கீழான ஆனையிறவு உப்பளத்தை மீண்டும் இயங்க வைக்க துரித திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதன் மூலம் சுமார் 1800 பேருக்கு வேலைவாய்ப்பளிக்க முடியும் எனவும், அதன் முதற்கட்டமாக அப்பகுதிகளிலுள்ள வெடிபொருட்களை அகற்றும் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பிரதேச ரீதியாக முன்னெடுக்கப்படுகின்ற, முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பல்வேறு செயற்றிட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக விவசாயம் பற்றியதான கலந்துரையாடலின் போது குரங்கு மற்றும் காட்டுப் பன்றிகளால் தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் குறித்து மக்கள் பிரதிநிதிகள் அமைச்சரிடம் எடுத்து விளக்கினர்.

இதனை ஆராய்ந்த அமைச்சர், விரைவில் துறைசார்ந்த அரச திணைக்கள அதிகாரிகள் ஊடாக நடவடிக்கையெடுக்கப்படுமென உறுதிமொழி வழங்கினார்.

தொடர்ந்து உயர்பாதுகாப்பு வலயம், கட்டாக்காலி கால்நடைகள், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், வீதி, மின்சாரம், பிரதேச சபை வீடமைப்பு திட்டம், சமூகசேவை, கைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

கரம்பகம், மறவன்புலோ பகுதிகளில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகளை மீள இயங்க வைப்பதற்கும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கான காணிகொள்வனவு, கொடிகாமம் சந்தைப் பகுதியிலுள்ள மலசல கூடப் பராமரிப்பு, மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள மண் அணைகளை அகற்றுவது, ஏ9 பாதையை அகலிப்பதிலுள்ள சாதக, பாதக நிலை உள்ளிட்ட பிரதேசத்தின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் மக்கள் பிரதிநிதிகளிடமும், துறைசார்ந்த திணைக்களங்களைச் சேர்ந்தோரிடம் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மே 15 இல் ஜனாதிபதியிடம் கையளிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையை மே 15 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அறிக்கையின் முதலாவது நகலைத் தயாரிப்பதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளதாக ஆணைக குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக் குழுவால் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்கள் மற்றும் அவை தொடர்பான ஆய்வுகள் தொடர்பாகவே இவ் நகல் அறிக்கை அமையவுள்ளதாக அவர் தெரிவித்தார். குறிப்பிட்ட சில சாட்சியங்கள் தொடர்பாக ஆய்வு செய்வதற்கு நிபுணர்கள் சிலரின் ஆலோசனை தேவைப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, அம்பாறை, மொனராகலை, காலி, புத்தளம், அனுராதபுரம் ஆகிய இடங்களில் அமர்வுகளை நடத்தியிருந்த ஆணைக்குழு, கடந்த மாதம் தனது விசாரணைகளை நிறைவு செய்திருந்தது.

கடந்த வருடம் மே மாதம் ஜனாதிபதி மகிந்த ர்ாஜபக்ஷ8 உறுப்பினர்களைக் கொண்ட இவ் ஆணைக்குழுவை நியமித்திருந்தார். இந்த ஆணைக்குழுவிற்கு முன்னாள் சட்ட மா அதிபர் சி.ஆர்.டி சில்வா தலைமை வகித்திருந்தார். மீள்குடியேறிய மக்களின் வாழ்வை மேம்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஆணைக்குழு தனது இடைக்கால உள்ளக அறிக்கையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிக்காலம் நீடிக்கப்படலாம் என செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் ,இதன் அறிக்கை மே 15 ஆம் திகதி வெளியாகும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கை அரசை குற்றம் சாட்டியுள்ள நிலையில், நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையை அவசரமாக வெளியிடுவதன் நோக்கம் குறித்து அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# இராணுவத்தைக் கொன்றவர் அடையாளம் காணப்பட்டார்

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது, அதிகளவான இராணுவத்தினரை சுட்டுக் கொன்ற புலி உறுப்பினர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கனேடிய குடிவரவு சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் சன் சீ கப்பல் மூலம் கனடா சென்ற இலங்கையர்களுக்கு, அகதி அந்தஸ்து வழங்கும் விசாரணைகளின் போது, அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

புலிகளுடன் நேரடித் தொடர்பினைக் கொண்ட இரண்டு பேரில், இவரும் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் தொடர்பிலான விசாரணை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போது, இறுதி யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் ஏ.கே.47 துப்பாக்கிகளுடன் குறித்த இடத்துக்கு வருமாறு புலிகளின் தலைமையிடம் இருந்து அழைப்பு வந்திருந்தாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த இடமொன்றில் இருந்த வீடொன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரை சுட்டுக் கொல்லுமாறு அவரிடம் கோரப்பட்டுள்ளது.

எனினும் தாம் அதற்கு இசையவில்லை என அவர் விசாரணைகளில் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் அவரை நாடுகடத்துவதற்கு உத்தரவிடுமாறு கனேடிய குடிவரவு சபை நீதிமன்றத்தைக் கோரியுள்ளது.

# இலங்கை மீதான இராஜதந்திர யுத்தத்தின் பின்னணியில் அமெரிக்காவும், பிரித்தானியாவும்

**- அமைச்சர் சம்பிக்கரணவக்க**



(கொழும்பு)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையானது இலங்கைக்கு எதிரான ஓர் இராஜதந்திர ரீதியிலான பயங்கரவாதத் தாக்குதலாகும். இந்த அறிக்கையை அங்கீகரித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை இறந்த காலத்துக்கு இழுத்துச் செல்கிறது என மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. நிபுணர் குழுவானது இராஜதந்திர ரீதியிலான பயங்கரவாதத் தாக்குதலை இலங்கைக்கு எதிராக மேற்கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் கொள்கைகளுக்கு அமைய இலங்கை ஒரு சுயாதீனமான நாடாகும். எமது நாடு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமானால் ஐக்கிய நாடுகளின் சபைக்கு ஒரு நடைமுறை இருக்கின்றது. அந்த நடைமுறைக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஐ.நா. சபையின் பாதுகாப்புசபையில் அனுமதி பெற்று எம்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை மீது நடவடிக்கை எடுக்கும் நோக்கில் முன்னாள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபேண்ட் ஐ.நா.சபையின் பாதுகாப்பு சபைக்குச் சென்றார். எனினும் ஐ.நா. சபையின் பாதுகாப்பு சபையில் அவர் தோல்வியடைந்தார். அதன் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் மூலம் அவர்கள் மற்றுமொரு முயற்சியை மேற்கொண்டனர். இதன்போது எமக்கு எதிராக கொண்டுவரப்பட்ட யோசனை தோல்விகண்ட அதேவேளை, எமக்கு ஆதரவாக முன்மொழியப்பட்ட யோசனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

ஐ.நா.சபையினுள் மேற்கொள்ளக்கூடிய சட்ட ரீதியான இராஜதந்திர நடவடிக்கைகள் அனைத்திலும் இலங்கை அரசு விடுவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ள அரசுக்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனும் அவருடைய மூவர் அடங்கிய குழுவும் மேற்கொண்ட இராஜதந்திர ரீதியிலான பயங்கரவாதத் தாக்குதலே இந்த அறிக்கையாகும்.

இந்தச் செயற்பாடுகளுக்கு பின்னணியில் ஐக்கிய அமெரிக்காவும், பிரிட்டனுமே பிரதான சூத்திரதாரிகளாகச் செயற்படுகின்றன என அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார்.

# இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளை ஐ.நா. சிக்கலாக்கி விடக்கூடாது

**இலங்கைக்கான ரஷ்ய தூதுவர்**

(கொழும்பு)

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையானது ஐ.நா. அறிக்கையொன்றல்ல எனவும், அது ஐ.நா. செயலாளர் நாயகத்தின் தனிப்பட்ட முன் முயற்சியே எனவும் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளை ஐ.நா. சிக்கலாக்கிவிடக் கூடாது என்றும் இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் விளாடிமிர் பி. மிகைலோவ் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் நேற்று நடத்திய சந்திப்பின் போதே ரஷ்ய தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றைப் பற்றி நாம் பேசவில்லை. ஏனெனில் அது ஐ.நாவினாலோ அல்லது அதன் கோரிக்கையினாலோ தயாரிக்கப்படவில்லை. அது ஐ.நா. செயலாளர் நாயகத்தின் தனிப்பட்ட முன்முயற்சியே என்றார்.

வரைவிலக்கணங்கள் மக்களை தவறாக வழிநடத்தக்கூடாது என்பதில் நாம் கவனமாக செயற்பட வேண்டும். துரதிர்ஷ்டவசமாக அந்த நிபுணர் குழு தனது இலக்கிற்கும் அப்பால் சென்றுள்ளதாகத் தென்படுகிறது.

இலங்கை தனது நீண்டகால ஆயுத மோதல்களின்பின் காயங்களைக் குணப்படுத்தி வரும் நிலையில் தேவைப்பட்டால் ஐ.நா. தனது உதவிகளை வழங்கலாம். ஆனால் நல்லிணக்க முயற்சிகளை அது சிக்கலாக்கி விடக்கூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**போர்க் குற்றச்சாட்டுக்களில்...**

அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மின்சாரக் கதிரைக்குச் செல்லும் நாள் வெகு தூரம் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**நாட்டைப் பாதுகாத்துக்...**

செயற்பட வேண்டும். மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகளை நடத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை கூறியுள்ள போதிலும், ஒவ்வொரு மனித உரிமை மீறலையும் யுத்தக் குற்றமாக கருத முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**இலங்கை மீதான...**

வட ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட கிளர்ச்சிகளின் ஆரம்ப கட்டத்தில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருந்த போதிலும், இடைநடுவில் நிலைப்பாட்டை தளர்த்திக் கொண்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் தமிழகத் தமிழர்கள் கூடுதல் கரிசனை கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல் பேசி அபிவிருத்தியை குழப்ப வேண்டாம்-புத்திஜீவிகள் கோரிக்கை

பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களில் அரசியல் கலந்த அனாவசியப்பேச்சுக்களை சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசிவருவதால், பிரதேச அபிவிருத்திக்கு பெரிதும் பங்கம் ஏற்படுவதாக புத்திஜீவிகளும், கல்விச் சமூகத்தினரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

பிரதேச செயலகங்களில் நடைபெற்று வரும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களில் கலந்துகொள்ளும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல்பேசி பிரதேச அபிவிருத்தி தொடர்பான விவாதங்களை திசைதிருப்பிவருவதாகவும், இதனால் பிரதேச அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கிவருவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டிவருகின்றன.

பிரதேச அபிவிருத்தி சம்பந்தமாக இடம்பெறும் கூட்டங்களை இவர்கள் அரசியல் பேசுவதைத் தவிர்த்து அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பிரதேச அபிவிருத்தி தொடர்பாக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திவரும் இவர்கள் இக்கூட்டங்களில் அரசியல்பேசுவது ஏன் என்பது தெரியவில்லை. என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# ஐ.நா. நிபுணர் குழுவுக்கு புலி ஆதரவாளர்கள் கோடிக்கணக்கில் லஞ்சம் கொடுத்துள்ளார்கள்

**அமைச்சர் விமல் வீரவன்சவின் கண்டுபிடிப்பு**

(கொழும்பு)

புலிகளின் ஆதரவாளர்களிடமிருந்து கோடிக் கணக்கில் லஞ்சம் பெற்றுக் கொண்டே ஐ.நா. நிபுணர் குழு தனது அறிக்கையைத் தயாரித்துள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார். கெஸ்பாவை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வீடமைப்பு வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் மூன்று அதிகாரிகளுக்கும் புலிகளின் சர்வதேச மட்டத்தில் செயற்படும் ஆதரவாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆகிய தரப்புகளிடமிருந்து கோடிக்கணக்கில் பணம் லஞ்சமாக கொடுக்கப்பட்டுள்ளது. அதனைப் பெற்றுக் கொண்டு நிபுணர் குழுவும் புலிகளின் ஆதரவாளர்களுக்குத் தேவையான முறையில் தமது அறிக்கையை இலங்கை அரசாங்கத்தைக் குற்றம் சாட்டும் வகையில் தயாரித்துள்ளது. என்றும் அவர் தொடர்ந்தும் குற்றம் சாட்டியுள்ளார்.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.